உதயன்
விலை ரூபா 20.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 07 சனிக்கிழமை (21.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 176



02
ராஜஸ்தான் வெற்றி



03
கிறிஸ்கெயில் வாக்குவாதம்



14
அரசுக்கு எதிரான குற்றச் சாட்டுகள்



17
உண்மைகளை வெளியிடுவேன்



19
ஈழத்தின் முதற் பெண் கவிஞர்

# எம்மை நாமே ஆளும் உரிமை கிடைக்கும் வரை போராடுவோம்

## உடுவிலில் மாவை நேற்றுச் சூளுரை



யாழ்ப்பாணம்,மே21

மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுத்து எம்மை நாமே ஆளும் உரிமையை வெல்லும் வரை தமிழர்களின் போராட்டம் தொடரும் என்று சூளுரைத்துள்ளார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா. உடுவிலில் நேற்று உரையாற்றிய அவர், இலங்கையில் நடந்து வந்த ஆயுதப் போர் முடிந்து விட்டாலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தொடரும் என்றும் அறிவித்தார்.

அமைச்சர்களின் வருகைக்காக நீண்டகாலமாகக் காத்துக் கிடந்த உடுவில் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. இந்தக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு 50 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன கட்டடத்தை திறந்துவைத்து பொதுமக்கள் பாவனைக்கு அர்ப்பணித்தார்.

திறப்பு விழாவின் பின்னர் (32ஆம் பக்கம் பார்க்க)

## மாணவருக்கு இராணுவ முகாம்களில் பயிற்சி வழங்குவதை நிறுத்துங்கள்

### கூட்டமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 21

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சி வழங்குவதை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த பொது நிர்வாக உள்ளூராட்சி அதிகார சபைகள் அமைச்சர் ஜோன் செனிவிரத்தினவிடம் இந்தக் கோரிக்கையை நேரில் வலியுறுத்தி உள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் இணைச் செயலாளருமான மாவை சேனாதிராசா.

பல்கலை. மாணவர்களுக்கான தலைமைத்துவப் (29 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம்களில் மாணவருக்கு பயிற்சி: உயர் நீதிமன்றில் உரிமை மீறல் வழக்கு

கொழும்பு,மே21

பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கு தகுதி பெறும் மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் பயிற்சியளிப்பதற்கு உயர் கல்வி அமைச்சர் எடுத்திருக்கும் தீர்மானத்தை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மனித உரிமைகளுக்கான மாணவர் அமைப்பு அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை நேற்றுத் தாக்கல் செய்தது.

சட்டத்தரணி ஜி.ஜி.அருள்பிரகாசம் ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, அதன் தலைவர் மற்றும்

(32 ஆம் பக்கம் பார்க்க)

## கனிமொழி நேற்றுக் கைதாகி திஹார் சிறையில் அடைப்பு

டில்லி,மே21

2ஜி அலைக்கற்றை முறைகேட்டு வழக்கில் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மகள் கனிமொழி எம்.பிக்கும் கலைஞர் டி.வி. நிர்வாக இயக்குநர் சரத்குமாருக்கும் முன்பிணை வழங்க சி.பி.ஐ. நீதிமன்றம் மறுத்ததை அடுத்து இவர்கள் இருவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு திஹார் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் 14 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு பாட்டியாலா நீதிமன்றில் முன்னதாக வைக்கப்பட்டனர். தொடர்ந்து அவர்கள் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் திஹார் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சிறை எண் 6 இல் கனிமொழி அடைக்கப்பட்டார்.



இவரை மீண்டும் இன்று மு.ப. 10 மணிக்கு வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜர் படுத்த வேண்டும் என்று டில்லி சி.பி.ஐ. நீதிமன்றின் நீதிபதி ஓ.பி.சைனி (29 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் மகள் தடுக்கப்பட்டு விசாரணை

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மகள் அபர்ணா பொன்சேகா நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அபர்ணா பொன்சேகாவை அவரின் மூத்த சகோதரியும் ஹைகோர்ப் வழக்கில் தேடப்படும் தனுன திலகரட்னவின் மனைவியுமான அப்சரா பொன்சேகா என அதிகாரிகள் தவறாக எண்ணிவிட்டதே இச்சம்பவத்திற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அபர்ணாவும் அவரின் தாயாரான அனோமா (29 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தரோடையில் நடப்பது என்ன?

### பௌத்த ஆதாரம் கிடைத்தது என்கிறது சிங்களப் பத்திரிகை; மறுக்கிறது யாழ்.பல்கலை

கொழும்பு, மே21

யாழ். மாவட்டம், கந்தரோடையில் இடம்பெற்று வரும் அகழ்வாராய்ச்சி தொடர்பில் சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளியான தகவல்கள் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளன.

கந்த ரோடையில் புராதன காலத்துக்குடியிருப்பு மற்றும் பௌத்த குருமாரின் புராதன வாழ்விடம் என்பன அமைந்திருந்தமைக்கான சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளதாக தொல்லியல்துறை நிறைவேற்றுப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸாநாயக்க தெரிவித்தார் என்று 'லங்காதீப' என்ற சிங்களப் பத்திரிகை தனது 17ஆம் திகதிய பதிப்பில் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியை யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை மறுத்துள்ளது. அதேவேளை, குறித்த செய்தி தொடர்பாக தொல்லியல் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அது பொய்யான செய்தி கலாசார அமைச்சின் அனுமதியின்றி நாம் எந்தவொரு ஆய்வு முடிவுகளையும் வெளியிடுவதில்லை என்று தெரிவித்தார் பிரதி ஆணையாளர் நிமல் பெரேரா.

அத்தகைய எந்த ஒரு ஆதாரமும் கந்தரோடையில் இருந்து இதுவரையில் பெறப்பட்டதாக அறிக்கையிடப்படவில்லை என்று யாழ். பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுத் துறையும் அடித்துக் கூறியது.

"இதுவரை நடத்தப்பட்ட ஆய்வில் பெருங்கற் கால பண்பாட்டை ஒத்ததான (32 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்குத் தடையற்ற மின்சாரம்; சீராக்க பொறியிலாளர் குழு வருகிறது

யாழ்ப்பாணம்,மே21

குடாநாட்டில் மின் விநியோகத்தை சீராக்குவது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கென உயர்மட்ட பொறியிலாளர் குழு ஒன்று விரைவில் யாழ்.வரவுள்ளது.

இந்தக் குழுவினர் குடாநாட்டில் தற்போது ஏற்படும் மின் தடை, மின் விநியோகத்தில் ஏற்படும் ஏனைய சிக்கல்கள் தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் டி.கே.பி.யு. குணதிலக்க.

யாழ்.நகர் காங்கேசன்துறை வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மின் விநியோக செலவினங்களை குறைக்கவேண்டியுள்ளது. அதற்கான வழிவகைகள் குறித்து சிந்தித்து வருகிறோம்.

மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவை தற் போது இல்லை.

(32 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெற்றியுடன் வோர்ன் வெளியேற்றம்
# மும்பைக்கு விழுந்தது மரண அடி



நண்பர்கள்



ரோகித் சர்மா ஆட்டமிழக்கையில்...

வொட்சன்

-அருண்மொழி-

வொட்சன் சகலதுறைகளிலும் கலக்கினார். வோர்னின் ஐ.பி.எல் வாழ்வு வெற்றியுடன் முடிந்தது. மறுபுறம் மும்பையின் அடுத்த சுற்று வாய்ப்பு கேள்விக் குறியானது.

ஐ.பி.எல் போட்டியின் 66 ஆவது ஆட்டம் நேற்று மும்பையில் இடம்பெற்றது. சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும், ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதிக்கொண்டன. அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை இழந்த நிலையில் ராஜஸ்தான் அணியும், அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை உறுதி செய்வதற்காக மும்பை அணியும் பலபரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 133 ஓட்டங்களை 5 விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக் கொண்டது.

மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சுமன் - சச்சின் டெண்டுல்கார் ஜோடி களமிறங்கியது. சவான் ராஜஸ்தான் அணியின் பந்து வீச்சை ஆரம்பித்து வைத்தார். முதலாவது ஓவரில் 2 ஓட்டங்களையே மும்பை அணி பெற்றுக்கொண்டது. வொட்ஸன் வீசிய இரண்டாவது ஓவரில் சுமன் ஆட்டத்தின் முதலாவது பவுண்டரியை அடித்தார். அடுத்த பந்திலேயே சுமன் ஆட்டமிழந்து வெளியேறினார். ராயுடு அடுத்து களத்துக்குள் நுழைந்தார்.

மூன்றாவது ஓவரில் சச்சின் தனது முதலாவது பவுண்டரியை அடித்தார். ராயுடு அடுத்த ஓவரிலேயே வொட்ஸனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை மும்பை அணி இழந்தது. மூன்றாவது விக்கெட்டுக்காக ரோகித் சர்மா, சச்சினுடன் இணைந்தார். ஓவருக்கு ஒவ்வொரு பவுண்டரிகள் வீதம் வெளியேறிக் கொண்டிருந்தது. 54 பந்துகளில் மும்பை அணி 50 ஓட்டங்களைக் கடந்தது.

12 ஆவது ஓவரை அமிர் சிங் வீசினார். சச்சின் அவரது பந்தில் பவுண்டரி ஒன்றைத் தட்டினார். அடுத்த பந்து வீச்சிலேயே சச்சின் ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார். 35 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சச்சின் ஆட்டமிழந்தார். ஓட்ட வேகம் போதாததால் பொலாட் சச்சினுக்கு பதிலாக களமிறங்கினார்.

இருந்தும் ஆட்டத்தில் அதிரடிகள் இல்லாமலே நகர்ந்தது. அமிர் சிங் வீசிய 14 ஆவது ஓவர் மும்பை அணிக்கு நல்ல வாய்ப்பாகியது. ரோகித் சர்மா பவுண்டரி, சிக்ஸர் என்று அடித்து அசத்தினார். தொடர்ச்சியாக மும்பை அணியால் அதிரடியாக ஆடமுடியவில்லை. ராஜஸ்தான் அணியின் களத்தடுப்பு சிறப்பாக இருந்தது. ஓட்டங்களை அதிகமாக ஓடி எடுத்தே மும்பை அணி சேர்த்தது. 97 ஆவது பந்தில் மும்பை அணி 100 ஓட்டங்களைத் தொட்டது. மெனேரியா வீசிய 17 ஆவது ஓவரில் பொலாட் அடுத்தடுத்து 2 பவுண்டரிகள் அடித்தார். மறு முனையில் ரோகித் சர்மா 35 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

4 ஆவது விக்கெட்டுக்காக 53 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்ற வேளையில், வொட்ஸன் வீசிய 18 ஆவது ஓவரில் பொலாட் 18 பந்துகளில் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து பிராங்லின் நுழைந்தார். ஆட்டத்தின் இறுதி ஓவரையும் தனது ஐ.பி.எல் வாழ்வின் இறுதி ஓவரையும் வோர்ன் வீசினார். அவரது பந்து வீச்சில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ரோகித் சர்மா 47 பந்துகளில் 58 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இறுதியில் 20 ஓவர்களில் மும்பை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் வொட்ஸன் 4 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கியது ராஜஸ்தான் அணி. வொட்ஸன் - ராவிட் இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். முனாப் பட்டேலின் முதலாவது ஓவரிலேயே வொட்ஸன் பவுண்டரி அடித்து அதிரடி ஆட்டத்தை தொடக்கி வைத்தார். இரண்டாவது ஓவரை ஹர்பஜன் வீச இரண்டு சிக்ஸர்கள் அடித்தார் வொட்ஸன். தொடர்ந்து மலிங்கவின் ஓவரில் இரண்டு பவுண்டரிகளை விளாசினார் வொட்ஸன். ஆறாவது ஓவரை மலிங்க வீசினார். அந்த ஓவர் ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகளுடன் 15 ஓட் டங்கள் பெறப்பட்டது. அத்துடன் 36 பந்துகளில் அணி 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அதிரடியாக ஆடிய வொட்ஸன் 30 பந்துகளில் 50 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். மறுமுனையில் ராவிட் ஆட்டம் ஆமை வேகத்தில் ஊர்ந்தது. தொடர்ந்து அதிரடியாக ஆடினார் வொட்ஸன். மும்பை அணியின் சகல பந்து வீச்சாளர்களும் வொட்ஸனின் அதிரடிக்கு முன்பாக மண்டியிட்டனர். 63 ஆவது பந்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை 100 ஐத் தொட்டது. வெற்றி ராஜஸ்தான் பக்கம் சார்ந்தது. இறுதிக் கட்டத்தில் ராவிட்டும் தனது அதிரடியைத் தொடங்கினார். மலிங்க, ஹர்பஜன் சகலரது பந்துகளையும் வொட்ஸன் சிக்ஸருக்கு அனுப்பினார்.

இறுதியில் விக்கெட் இழப்பின்றி 13.1 ஓவர்களில் 134 ஓட்டங்களைப் பெற்றது. வொட்ஸன் ஆட்டமிழக்காமல் 47 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகளுடன் 89 ஓட்டங்களைப் பெற்றார். மறுமுனையில் ராவிட் 32 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பெற்றார். துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலும் கலக்கிய வொட்ஸன் ஆட்டநாயகனாகத் தேர்வானார்.

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை சூப்ப கிங்ஸ் | 13 | 09 | 04 | 0 | 0 | + 0.544 | 18 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 13 | 08 | 04 | 0 | 1 | + 0.283 | 17 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 13 | 08 | 05 | 0 | 0 | + 0.476 | 16 |
| மும்பை இந்தியன்ஸ் | 13 | 08 | 05 | 0 | 0 | + 0.033 | 16 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 13 | 07 | 06 | 0 | 0 | + 0.271 | 14 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 14 | 06 | 08 | 0 | 1 | - 0.691 | 13 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 14 | 06 | 08 | 0 | 0 | - 0.214 | 12 |
| டெக்கான் சார்ஜஸ் | 13 | 05 | 08 | 0 | 0 | - 0.080 | 10 |
| புனே வாரியர்ஸ் | 13 | 04 | 09 | 0 | 0 | - 0.134 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 13 | 04 | 09 | 0 | 0 | - 0.448 | 08 |



## விடை பெற்றார் வோர்ன்

பெயர்: ஷேன் வோர்ன்
பிறப்பு: 1969. செப்ரம்பர். 13
துடுப்பாட்டம்: வலது கை
பந்து வீச்சு: இடது கை லெக் பிரேக், கூக்ளி

*ஐ.பி.எல்*

ஆட்டம்: 55 ஆட்டம்
விக்கெட்டுக்கள்: 56
சிறப்பு: 4/21

தொடர்ச்சியாக 4 வருடங்கள் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர். ஐ.பி.எல் ஆரம்பிக்கப்பட்டட முதலாவது வருடம் (2008 ஆம் ஆண்டு) இடம்பெற்ற தொடரில் ராஜஸ்தான் அணி கிண்ணத்தை வென்றது. இவரது இறுதி விக்கெட்டாக ரோகித் சர்மா வீழ்ந்தார்.

## இன்றைய ஆட்டம்

- கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் டெக்கான் சார்ஜஸ் (மாலை 4 மணி)
- புனே வாரியர்ஸ் எதிர் டெல்ஙி டெயா டெவில்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- மார்ஷ் – பஞ்சாப் (13 ஆட்டங்கள் 491 ஓட்டங்கள்)
- வல்த்தாட்டி – பஞ்சாப் (13 ஆட்டங்கள் 458 ஓட்டங்கள்)
- சச்சின் – மும்பை (13 ஆட்டங்கள் 439 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (13 ஆட்டங்கள் 27 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல்– மும்பை (13ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- ராகுல் சர்மா – புனே (13 ஆட்டங்கள் 16 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணி பஸ்ஸில் பெற்றோல் திருட்டு

இங்கிலாந்துக்குச் சுற்றுலா மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களின் பஸ்ஸிலிருந்து திருடர்களால் சுமார் 700 ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான பெற்றோல் திருடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிடில் செக்ஸ் பிராந்திய அணியுடனான 3 நாள் போட்டியின் பின்னர் ஹோட்டலிருந்து வெளியேறிய போது இந்தப் பெற்றோல் திருட்டு குறித்து இலங்கை அணியினர் அறிந்து கொண்டதாக அணியின் முகாமையாளர் அநுர தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியினர் மேற்குட்ரைடன் பகுதியில் கிரவுண் பிளாஸா ஹோட்டலில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இதனால் இலங்கை அணியின் எந்தவொரு திட்டமும் பாதிக்கப்படவில்லை எனவும் குறித்த பஸ் கம்பனியினால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அனுர தென்னகோன் கூறினார். (15)

# அப்ரிடி அணித் தலைமையிலிருந்து அதிரடி நீக்கம்



ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் பதவியிலிருந்து சயிட் அப்ரிடி நீக்கப்பட்டுள்ளார். இந்த மாத இறுதியில் அயர்லாந்து அணியுடன் இரு ஒரு நாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணி விளையாடவுள்ளது.

இந்தப் போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணிக்கு மிஸ்பா உல் ஹக் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் இஜாஸ் பட் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

அப்ரிடி சாதாரண ஒரு வீரராக இந்த அணியில் இடம்பெறுவார் எனவும் இஜாஸ் பட் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

மே 28, 30 ஆம் திகதிகளில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் அணியின் மேற்க்கிந்திய சுற்றுலாவின் பயிற்றுநர் வக்கார் யூனிஸுக்கும் அப்ரிடிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. வக்கார் யூனிஸை அப்ரிடி பகிரங்கமாக விமர்சித்தமைக்கு தண்டனையாக அவரின் தலைமைப் பதவி பறிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இதேவேளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பேச்சாளர் நதீம் சர்வார் கருத்துத் தெரிவிக்கையில் ஒவ்வொரு சுற்றுலாவுக்கும் தனித்தனியாக அணித்தலைவர் அறிவிக்கப்படுவார் எனக் கூறினார்.

ஆனால் இந்தத் தீர்மானத்தை பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் இக்பால் காஸிம் குறைகூறியுள்ளார்.

அயர்லாந்து சுற்றுலாவுக்கான பாகிஸ்தான் அணி விவரம்:

மிஸ்பா உல் ஹக் (தலைவர்), யூனிஸ் கான், தௌபீக் உமர், மொஹமட் ஹபீஸ், அஷாட் ஷபீக், அஸார் அலி. சயிட் அப்ரிடி, மொஹமட் சல்மான், சயீட் அஜ்மல், அப்துல் ரகுமான், உமர் அக்மல், உமர் குல், வஹாப் ரியாஸ். தன்வீர் அஹ்மட், ஜுனைத் கான், ஹமட் அஸாம். (15)

# கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிளந்து கொடுக்கும்

விளம்பர வருவாயில் ரென்னிஸ் நட்சத்திரம் ராபேல் நடால், கூடைபந்து வீரர் கோபே பிரையன்ட் உள்ளிட்ட முன்னணி வீரர்களை பின்னுக்குத் தள்ளினார் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திர சிங் தோனி. விளம்பர வருவாயில் முன்னணியில் உள்ள விளையாட்டு வீரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது பிரிட்டனின் 'ஸ்போர்ட்ஸ் புரோ' மாத இதழ்.

அதில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனிக்கு 10 ஆவது இடம் கிடைத்துள்ளது. ரென்னிஸ் நட்சத்திரம் நடால், கூடைப்பந்து வீரர் பிரையன்ட் ஆகியோரால் முதல் 10 இடங்களுக்குள் வரமுடியவில்லை.

ஜமைக்காவின் ஓட்டப்பந்தய வீரர் உசேன் போல்ட், முதலிடத்தைப் பிடித்துள்ளார். முதலிடத்தில் இருந்த கூடைப்பந்து வீரர் லெப்ரான் ஜேம்ஸ் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

பிரேசில் கால்பந்து வீரர் ரொனால்டோ மூன்றாவது இடத்தையும், ஆர்ஜென்டீனா கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி 4 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். டென்மார்க் ரென்னிஸ் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி 9 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ்சிங்குக்கு 49 ஆவது இடம் கிடைத்துள்ளது.

உலகக் கிண்ணத்தில் வெற்றி ஓட்டங்களை அடித்ததன் மூலம் டோனிக்கும், தொடர் நாயகன் விருதை வென்றதால் யுவராஜுக்கும் விளம்பர வருவாய் குவிந்துள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# கிறிஸ்கெயிலில் வாக்குவாதம்



தனியார் தொலைக்காட்சி செய்தியாளரை தள்ளிவிட்டதாக மேற்கிந்தியத்தீவுகள் வீரர் கிறிஸ் கெயில் மீது புகார் எழுந்துள்ளது. மேலும் அவரின் 'கமராவையும், மைக்ரோ போனையும்' பறிக்க முயன்றதாக கெயில் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கெயில், பெங்களூரில் உள்ள கடைத் தொகுதிக்குச் சென்றபோது, அவரை பின்தொடர்ந்து சென்று படம் பிடிக்க முயன்றுள்ளது ஒரு தனியார் தொலைக்காட்சி.

இதனால் கோபமடைந்த கெயில், தனது சுதந்திரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதாகக் கூறி திட்டியதோடு, அவர்களை தள்ளிவிட்டதாகக் கூறப்படுகின்றது. கெயிலுடன் பாதுகாப்புக்குச் சென்ற காவலர்களும் தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

அப்போது அங்கு இருந்தவர்கள் இருதரப்பினரையும் சமாதானப்படுத்தியுள்ளனர். இதையடுத்து கெயில் தரப்பினர் தங்கள் செயலுக்கு வருத்தம் தெரிவிக்காமல் அங்கிருந்து சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக பெங்களூர் பத்திரிகையாளர்கள், நகர பொலிஸ் ஆணையாளர் ஜோதி பிரகாஷிடம் புகார் செய்துள்ளனர்.

ஐ.பி.எல் போட்டியில் பெங்களூர் அணி சார்பில் விளையாடி வருகிறார் கெயில். ஏற்கெனவே கெயிலுக்கும், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வாரியத்துக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் டி.வி. செய்தியாளர்களிடம் வாக்குவாதத்தில் ஈடு பட்டு புதிய பிரச்னையில் சிக்கியுள்ளார் கெயில். (15)

# கடவுச்சீட்டு நகலை ஒப்படைக்க உத்தரவு

மோசடி வழக்கில் பிணை பெற்றது தொடர்பாக ஐ.பி.எல் முன்னாள் ஆணையர் லலித் மோடி அவரது கடவுச்சீட்டு நகலை ஒப்படைக்க வேண்டும் என்று ராஜஸ்தான் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து சந்தீப் பத்ரா என்பவர் தாக்கல் செய்த மனு விவரம்:

ராஜஸ்தான் மாநில முதல்வரின் நிவாரண நிதி மோசடி வழக்கில் லலித் மோடி முன் பிணை பெற்றுள்ளார். ஒருவர் முன் பிணை பெற்றால், நீதிமன்றத்தில் முன் அனுமதி பெற்ற பின்னரே வெளிநாடு செல்ல முடியும். ஆனால் மோடி அனுமதி பெறாமலேயே வெளிநாடு சென்றுள்ளார். அதனால் அவரின் முன் பிணை ரத்துச் செய்ய வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம்.என்.பண்டாரி முன்னிலையில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தபோது, மோடி முன் பிணை பெறுவதற்கு ஒருநாள் முன்னதாகவே வெளிநாடு சென்றுவிட்டார் என்று கூறப்பட்டது.

இதையடுத்து இந்த விவகாரத்தில் உண்மை நிலையை கண்டறிவதற்காக அவரது கடவுச்சீட்டு நகலை ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் அவரின் பிணை மனுவை ரத்துச் செய்யக்கோரும் மனு மீது இடைக்கால தடை விதித்து வழக்கு விசாரணையை ஜூலை 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

ஜெய்ப்பூரில் 2008 ஆம் ஆண்டு நிகழ்ந்த குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக முதல்வரின் நிவாரண நிதிக்கு ரூபா.6 கோடி தருவதாக லலித் மோடி கூறியிருந்தார். அதில் ரூபா.5 கோடியே 80 லட்சத்தை மோடி வழங்கினர். மீதமுள்ள ரூபா.20 லட்சத்தை ஐ.பி.எல் விளம்பர பங்குதாரர்கள் தங்களது தொகையை கொடுக்கவில்லை.

இதுதொடர்பாக லலித் மோடி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் முன் பிணை கோரி லலித் மோடி மனுதாக்கல் செய்தார். இதைய[illegible]த்து அவருக்கு முன் பிணை வழங்க[illegible]ட்டது. இதனிடையே அவர் வெளி[illegible]ட்டுக்கு சென்றுவிட்டார். ஐ.பி.எல் மோசடி வழக்கில் சிக்கியுள்ள மோடி இப்போது வெளிநாட்டில் உள்ளார். (15)



# இந்த வயதில் இப்படி ஆசையா?

நீண்ட இடைவெளிக்குப் பிறகு களமிறங்கினாலும் கங்குலி மற்றும் ஷேன் வோர்னால் சிறப்பாக விளையாட முடியும்போது, என்னால் அது முடியாதா? என்ற கேள்வியுடன் நியூசிலாந்து முன்னாள் அணித் தலைவர் மார்டின் குரோ (வயது - 48) மீண்டும் விளையாட முடிவு செய்துள்ளார். முதல்தர போட்டிகளில் 20,000 ஓட்டங்களை எட்ட அவருக்கு இன்னும் 320 ஓட்டங்கள் தேவைப்படுகின்றது. அதை எப்படியும் அடைந்துவிடுவேன் என்று குரோ நம்பிக்கை தெரிவித்துள்ளார். (15)

# ரஷ்ய வீராங்கனை அரையிறுதிக்கு முன்னேற்றம்

பெல்ஜியத்தில் பிரஸ்சல்ஸ் திறந்த ரென்னிஸ் போட்டி நடைபெறுகின்றது. இந்த களிமண் ஆடுகளத்தில் 2 ஆம் நிலை ரஷ்ய வீராங்கனை வெரா சோனரவா, அதிரடியாக ஆடி அரை இறுதிக்கு முன்னேறினார். அவர் 47 நிமிடத்தில் கஜகஸ்தானின் காலினா வெஸ்கோபோவாவை 6-0, 6-1 செட் கணக்கில் வீழ்த்தினார்.

அரை இறுதி ஆட்டத்தில் சீன நாட்[illegible]ர்ந்த 8 ஆம் நிலை வீராங்கனை பெங் சுவாயுடன் வெரா சோனரவா மோதுகின்றார். பெங் சுவாய் கால் இறுதி ஆட்டத்தில் ஸ்வீடனின் சோபியா அர்விட்சனை 6-2, 6-4 செட் கணக்கில் தோற்கடித்தார்.

உலக முதல் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாகி எளிதாக முன்னேறினார். அவரை எதிர்த்து மோதிய பெல்ஜியம் வீராங்கனை யாமினாவிக்மேலா முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆட்டத்தின் பாதியில் விலகியதால் கரோலின் எளிதாக வெற்றி பெற்றார்.

கரோலின் அரை இறுதியில் இத்தாலி வீராங்கனை பிரான்செஸ்கா [illegible]னேயுடன் மோதுகிறார். பிரான்செஸ்கா நடப்பு பிரான்ஸ் திறந்த சம்பியன் [illegible] (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்துச் சாரதிகளுக்கு விசேட வகுப்புகளை நடத்த அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 21

தனியார் பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு வீதி ஒழுங்குகள் பற்றிய விசேட வகுப்புகளை நடத்துமாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேற்படி வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறு யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

யாழ்.நகரில் வாகனப் போக்குவரத்து நெருக்கடி நிலைமையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் புதன்கிழமை இரவு அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தனியார்துறை பேருந்துக்களுக்கென தனியானதொரு தரிப்பிடம், இளைப்பாறும் மண்டபம் மற்றும் ஏனைய வசதிகளை விரைவில் செய்துகொடுப்பதாகத் தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்னாயக்க அண்மையில் யாழ்.வந்திருந்த சமயம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தனியார் போக்குவரத்துத் துறையை மேம்படுத்தி மக்களுக்குச் சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்கும் நோக்கத்துடன் அமைச்சர் டக்ளஸ் விரைவில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார் என்று கூறப்பட்டது.

அதேநேரம், யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் போக்குவரத்து ஒழுங்கு விதிகளைக் குறிக்கும் சமிக்ஞைகளை ஏற்படுத்துமாறும் உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமந்த சிகேரா, இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர் கேதீசன், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெங்காதரன், யாழ். மாநகர முதல்வர், பொறியியலாளர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(ம)

# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following works.

| Work Details | Security / Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Approximate direct construction cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Improving Toilet Facilities at Ramanathan Academy of Fine Arts, Maruthanarmadam, University of Jaffna. | 12,000.00 | 500.00 | 1.2 | C9 (Buildings) |
| Improving Water Supply at Main Campus plus Hostels, University of Jaffna. | 4,000.00 | 500.00 | 0.4 | C10 (Civil) |
| Construction of Cricket Score Board at University of Jaffna | 10,000.00 | 500.00 | 01 | C9 (Buildings) |

Bid forms may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above Bid fee at the Shroff's Counter, University of Jaffna until 06.06.2011.

Perfected Bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00 p.m on 17.06.2011 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

**P.O Box 57,**
**Thirunelvely,**
**Jaffna.**
**20.05.2011**

**Registrar**
**University of Jaffna**

(C/107)-

# மாகாண அரச ஊழியர்களுக்கு மொழிக்கல்வி பயிற்சி வகுப்புக்கள்

தென்மராட்சி, மே 21

வடமாகாண அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தினர் மாகாண அரச ஊழியர்களுக்கான மொழிக்கல்விப் பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிங்களம், தமிழ் ஆகிய மொழி களில் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

பயிற்சி பெற விரும்பும் உத்தியோகத்தர்கள் தத்தமது நிறுவனத் தலைவர் ஊடாக நாளைமறுதினம் 23 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதிக்குப் பின்னர் அரச சேவையில் இணைந்தவர்களுக்குக் கடந்த காலங்களில் நடைபெற்ற வகுப்புக்களில் கலந்து கொள்ளாதவர்களுக்குமே முன்னுரிமை வழங்கப்படும் என்று நிறுவகப் பணிப்பாளர் சி.கிருஷ்ணானந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மே.21

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 869 ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "U" என்ற ஆங்கில எழுத்தும் 36/42/48/66 ஆகிய இலக்கங் களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 31 தெரிவாகி யது.

இதன் பிரகாரம் ஆங்கில எழுத்தும் நான்கு இலக்கங்களும் சரியாக வைத்திருந்த ஒருவருக்கு சுப்பர் பரிசாக ரூபா 10,000,000 கிடைக்கவுள்ளது. முதலாம் பரிசு வெல்லப்படவில்லை.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 04 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 273 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண் டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,261 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக் களை வைத்திருக்கும் 186,084 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக் களை வைத்திருக்கும் 27,762 பேருக்கு ஆறாம் பரிசாகத்தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)




பண்டத்தரிப்பு, மே 21

சங்கானை நிச்சாமம் ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ற-130)

* * *

வடமராட்சி, மே 21

செம்பியன் பற்று பிலிப் நேரியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவ நாள் திருப்பலிகள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் 25 ஆம் திகதி இரவு கூட்டுத் திருப்பலி இடம் பெற்று மறு நாள் அதிகாலை திருச் சொரூப பவனி இடம்பெறும். (ற-236)

**வீடு விற்பனைக்கு**

நல்லூர், செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0772267191.

**SHAMROCK, யாழ்.**

A/L PHY: PAPER CLASS
ELECTRICITY - Sat., Sun. 6 PM
S.சசி. B.Sc.

**கடைகள் வாடகைக்கு**

10 x 33 அளவுள்ள மேல்மாடியையும் கொண்ட இரண்டு கடைகள் ஸ்ரான்லி வீதியில் வாடகைக்குண்டு.
தொடர்பு-0776038499

**APSS ENGINEERING (PVT)Ltd**

City & Guilds
Subsidiary of APSS International
Approved Centre 844022
EC U.K

**யாழில் உடனடி வேலைவாய்ப்பு**

- Receptionst / Accounts Clerk
- Marketing Officers
- Lecturers / Instructors

Telecommunication/Electrical& Electronics/ Civil Engineering/Quantity Surveying / Computing / English

Engineering degree or / City & Guilds (UK) / EC (UK) / with industrial experience in relevant fields

**Walk-in-Interview**
on 25th May 2011 from 10 a.m. - 2 p.m.

APSS ENGINEERING PRIVATE LIMITED
ANNA VASA
No. 242 DR. SUBRAMANIUM RD
CHUNNAKAM, JAFFNA.
T.P: 011-4339330, 077-3867695

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கு, கிழக்கில் ஜனநாயக ஆட்சி என்பது உண்மையா?

கிழக்கில் கடும் போர் வெடித்ததைத் தொடர்ந்து, தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றவர்கள் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கும்புறுப்பிட்டியில் வாழ்ந்த தமிழ்மக்கள். நானூறு குடும்பங்களைச் சேர்ந்த அவர்கள் இலங்கையில் போர் முடிவுற்றுவிட்டதால் இப்போது தமது சொந்த ஊருக்குத் திரும்பி மீளக்குடியமர்ந்துள்ளனர். எனினும் அவர்கள் இன்னமும் இயல்பு வாழ்வுக்குத் திரும்பவில்லை.

கடந்த புதன்கிழமை கும்புறுப்பிட்டிக் கிராமத்திற்குள் பெரும் எண்ணிக்கையான படையினர் புகுந்து சுற்றிவளைப்பும் தீவிர சோதனையும் நடத்தினர். நாள் முழுவதும் நடைபெற்ற தேடுதலின் போது கிராம மக்கள் அனைவரினதும் குடும்ப அட்டைகள், அடையாள அட்டைகள் என்பன சோதிக்கப்பட்டன. இந்தத் தேடுதல் நடவடிக்கையால் அவர்கள் அடைந்த அச்சநிலையையும் பதற்றத்தையும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

தமிழகத்தில் அகதி முகாம்களில் வசிப்பதைவிட, சொந்த மண்ணில் வந்து தமக்குள்ள தொழில் வாய்ப்புக்களைப் புதுப்பித்து புதுவாழ்வு காணலாம் என்ற நினைப்புடன் வந்தவர்கள், மீண்டும் தாம் படையினரின் நெருக்கீடுகளுக்கு ஆளாக நேரிடும் என்று எள்ளளவும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

போர் முடிவுற்றுவிட்டது; அதில் வெற்றிபெற்றுவிட்டோம் என்று வெற்றிவிழாக்கள் கொண்டாடும் அரசு, தமிழர் பிரதேசங்களில் இராணுவ ஆட்சியை நிரந்தரமாக நிலைநிறுத்த விரும்புகிறதா என்று தமிழ்மக்களை ஐயுறவைக்கும் போக்கையே இத்தகைய ஏற்பாடுகள், கடும் நடவடிக்கைகள் வெளிப்படுத்தி வருகின்றன.

போரின் போதான கொடுமைகளில் இருந்து தப்பவும், மிகக் குறிப்பாகத் தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் முதல் நோக்குடனும், இராணுவக் கெடுபிடிகளில் இருந்து சற்றேனும் நிம்மதியாக வாழும் இலக்குடனுமே தமிழகத்துக்கும் ஏனைய நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்று புலம்பெயர்ந்தார்கள் பல லட்சக்கணக்கான தமிழர்கள்.

இங்கு திரும்பி வந்தவர்கள் அடிக்கடி தொந்தரவு செய்யப்படுவது தவிர்க்கப்பட்டு அவர்கள் அச்சமற்ற நிலையில் இயல்பு வாழ்க்கை வாழ வசதி செய்யப்படவேண்டும். ஆனால் கும்புறுப்பிட்டியில் நடத்தப்பட்டது போன்ற தேடுதல் வேட்டைகள் தொடர்ந்தால் அது சாத்தியமாகாது.

கடந்த வருட சித்திரைப் புத்தாண்டோடு - கிழக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் சேர்ந்து நாள் முழுவதும் தமிழ் மக்கள் வாழும் பிரிவுகளில் மட்டும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தியமையும் இங்கு நினைவுகொள்ளத்தக்கது.

போர் நடைபெற்ற காலத்தில் தமிழ்ப்பொதுமக்கள் எவ்வாறு சந்தேகக் கண்ணுடன் நோக்கப்பட்டு படையினரால் இம்சிக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டு அவர்களது வாழ்வுரிமைகள் நசுக்கிப் பொசுக்கப்பட்டனவோ- - அதேநிலைமை சமாதான காலத்திலும் மீள்விக்கப்படுகிறதா என்ற சந்தேகமும் பீதியும் தமிழ் மக்களிடம் எழுவதை, எந்தச் சாக்குப் போக்குக் காரணங்கள் கூறியும் தடுக்கமுடியாது.

அந்தச் சுற்றிவளைப்புப் போன்று, கும்புறுப்பிட்டியும் சுற்றிவளைத்துத் தேடப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புத் தரப்பின் இத்தகைய தேடுதல் வேட்டைகள், திடீர் இராணுவ முற்றுகைகள் தமிழ்ப் பிரதேசங்களில் தொடர்ந்தும் நடத்தப்படலாம் என்ற அச்சத்தையும் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது; பரப்பி வருகின்றது.

இத்தகைய திடீர் சுற்றிவளைப்புகளும், தேடுதல் நடவடிக்கைகளும் தமிழ்ப்பிரதேசங்கள் எதிலும், எங்கும், எப்போதும் நடத்தப்படலாம் என்ற எடுகோளை மெய்யாக்கும் விதத்தில் யாழ்ப்பாணத்திலும் நேற்றுமுன் தினம் ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

2009 மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில் கொலையுண்ட மக்களின் நினைவாக நடத்தப்பட்ட ''உறவுகளை நினைத்து'' என்ற அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றிய உயிரிழந்தோரின் உறவுகள், அனுதாபிகள் யாழ்.நகரின் மத்தியில் உள்ள திருமறைக் கலாமன்ற அழகியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (இதே மண்டபத்தில் சில மாதங்களுக்கு முன்னர் ஒரே மேடையில் சிங்கள, தமிழ்க் கலைஞர்களின் சிறப்பு நிகழ்வுகள் அரங்கேறின என்பது குறிப்பிடத்தக்கது) புதன்கிழமை நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் இம் மண்டபத்தில் இருந்து வெளியே செல்லமுடியாதவாறு படையினரால் தடுத்து முற்றுகையிடப்பட்டனர். வெளியே செல்லவிடாது தடுத்துவைக்கப்பட்டனர்.

இத்தனைக்கும், அந்த நிகழ்வில் அவர்கள் கொலையுண்ட தமது குடும்ப உறவுகளுக்குச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். நாட்டின் மூன்று மதங்களிலும் உயிர்நீத்த தமது உறவுகளை நினைந்து, நெஞ்சுருகி அவர்களது ஆன்மாக்கள் அமைதிபெற வேண்டுதல் நடத்தப்படுவது காலாதிகாலமாக நடைபெறுவது; வழமையானது.

அவமே உயிர்நீத்த தமது உறவுகளின் ஆன்மாக்கள் அமைதி கொள்வதற்காக குடும்ப உறுப்பினர்கள் - தாய்மார், தந்தைமார், மனைவியர்கள், பிள்ளைகளுடன், மதத்தலைவர்கள் மற்றும் பிரமுகர்களும் அஞ் சலி செலுத்திய நிகழ்வு அது. இது அவர்களுக்கான மனித உரிமை. அது தவறானது என்று கருதப்பட்டால் மனிதநேயம் தமிழ்ப் பிரதேசங் களில் அழிந்து போய்விட்டது; அழிக்கப்பட்டுவிட்டது என்பது அர்த்தம்.

உறவுகளின் இழப்பினால் வாழ்வை இழந்து தவிப்போருக்கு அஞ்சலி செலுத்த மக்களுக்கு உரிமை இல்லையா? அதில் பங்கேற்றவர்களைத் தடுப்பதும் சோதனை நடத்த நினைப்பதும் யாழ்ப்பாணத்தில் ஜனநாயக ஆட்சியின் நீட்சி நடைபெறுகிறதா அல்லது அது அடக்குமுறை ஆட்சி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டதா என்ற சந்தேகத்தை, அச்சத்தை குடாநாட்டு மக்கள் மத்தியில் தோற்று வித்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் வடக்கு, கிழக்கில் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் வெவ்வேறு வடிவங்களில் அரசாங்கத்தி[illegible] விடப்படுவது, வலுத்து வருவது நல்லிணக்கத்துக்[illegible] அடி என்பதை அரசினால் உணரமுடியாமல் போனது ஏனோ?

# ஜனாதிபதி, எம்.பிக்கள், நீதிபதிகள் வருமான வரி செலுத்தும் நடைமுறை

## ஏப்ரலில் இருந்து அமுலுக்கு

கொழும்பு, மே 21

2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட யோசனைகளுக்கு அமைய தேசிய வருமானங்கள் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் மாதாந்தச் சம்பளத்தைப் பெறும் அரச ஊழியர்களுடன் அரசின் ஒருங்கிணைந்த நிதியத்திலிருந்து சம்பளங்களைப் பெறும் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் நீதிபதிகள் ஆகியோரும் உழைக்கும்போதே செலுத்தும் நடைமுறைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மாகாணங்களில் ஆளுநர்கள், மாகாண சபைகளின் உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள் மற்றும் மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் உள்ளூ ராட்சி நிறு வனங்களின் பிரதிநிதிகளும் இதன் கீழ் அடக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி அல்லது அமைச்சரொருவரால் நியமனம் செய்யப்பட்ட சபை யொன்றின் அல்லது ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அரசமைப்புச் சபைகளின் உறுப்பினர்கள் ஆகியோரும் இந்த வரிசெலுத்துவோருள் அடங்குகின்றனர் எனவும் தேசிய வருமான வரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேசிய வருமானங்கள் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் மேற் குறிப்பிட்ட அனைத்து வகையானோருக்கும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான விரிவான விளக்கங்கள், சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இந்த வரிசெலுத்தும் நடைமுறை கடந்த ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(த-22)

# இலங்கை நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சை அடுத்த வாரம்

அச்சுவேலி, மே 21

இலங்கை நிர்வாகசேவை தரம் III ஆள் சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 13,200 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

பரீட்சை 28 ஆம் திகதி சனிக்கிழமையும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது. கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் மட்டும் நடைபெறும் பரீட்சை 88 நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இலங்கை நிர்வாக சேவை தரம் III க்கு ஆள் சேர்ப்பு திறந்தபோட்டி பரீட்சைக்கு சிங்கள மொழிமூலம் 11,450 பரீட்சார்த்திகளும், தமிழ் மொழிமூலம் 1500 பரீட் சார்த்திகளும், ஆங்கில மொழிமூலம் 165 பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றனர்.

பரீட்சார்த்திகள் வசதியான முறையில் பரீட்சை எழுதுவதற்கு 88 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன. இதில் கொழும்பில் 84 பரீட்சை நிலையங்களும் யாழ்ப்பாணத்தில் யாழ். இந்துக்கல்லூரி மற்றும் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் தலா இரண்டு பரீட்சை நிலையங்களுமாக 4 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன.

இதில் மூன்று, தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதுபவர்களுக்கும் ஒன்று, சிங்கள மொழி மூலம் பரீட்சை எழுதுபவர்களுக்கும் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் 6 பரீட்சை நிலையங்கள் தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகளுக்கும், 2 பரீட்சை நிலையங்கள் ஆங்கிலமொழி மூல பரீட்சார்திகளுக்கும் 78 பரீட்சை நிலையங்கள் சிங்கள மொழிமூலப் பரீட்சார்த்திகளுக்கும் அமைக்கப்பட்டுள்ளன.

இன்று சனிக்கிழமை பொது அறிவு, முகாமைத்துவ உளச்சார்பு ஆகிய இரண்டு பாடங்களும் நாளை ஞாயிற்றுக்கிழமை பொது நுண்ணறிவு, கட்டுரையும் சுருக்கமும் ஆகிய இரண்டு பாடங்களுக்கும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (த-11)

# முல்லைத்தீவு பஸ்ஸில் பயணியிடம் 20 ஆயிரம் ரூபா பணம் அபகரிப்பு

## சந்தேக நபர்களான 3 பெண்களுக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி,மே 21

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த பஸ்ஸில் பெண் ஒருவரின் 20 ஆயிரத்து 900 ரூபா ரொக்கப் பணத்தைத் திருடிய பெண்கள் மூவரையும் எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு சென்ற பஸ்ஸில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் பெண் ஒருவரும் பயணம் செய்தார்.

இந்த பஸ்ஸை இயக்கச்சிப் பகுதியில் மறித்த மூன்று பெண்கள் அதில் ஏறிக் கொண்டனர். பஸ் தனது பயணத்தைத் தொடர்ந்தது. இந்த வேளையில் பஸ்ஸில் பயணித்த கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் பெண்ணின் கைப்பையில் இருந்த 20 ஆயிரத்து 900 ரூபா காணாமற் போயிருந்தமை தெரியவந்தது.

இதனை அடுத்து இடையில் ஏறிக் கொண்ட மூன்று பெண்களிடம் சந்தேகம் கொண்ட பஸ் சாரதி அவர்களைக் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

கிளிநொச்சிப் பொலிஸார் அவர்களை நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றத்தில் ஆஜர் செய்தனர். இவர்கள் மூவரும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மூவரையும் எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)

# ஆலய பொதுச்சபை கூட்டத்தை நிறுத்த நீதிமன்று கட்டளை

தென்மராட்சி,மே 21

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பொதுச் சபைக் கூட்டத்தை நிறுத்துமாறு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றினால் இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாளை ஆலய பொதுக் கூட்டம் நடைபெறும் என்று தென்மராட்சிப் பிரதேச செயலரினால் பத்திகைகளில் விளம்பரம் செய்யப்பட்டதையடுத்து ஆலய பிரதம குரு த.வீரபத்திரக்குருக்கள் கூட்டத்தை தடை செய்யக் கோரி நீதிமன்றில் சட்டத்தைரணி மூலம் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா பொதுக்கூட்டம் நடத்துவதை நிறுத்துமாறும் இக்கட்டளை 15 நாள்கள் அமுலில் இருக்கும் என்றும் உத்தரவிட்டார். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முகம்



திருநெல்வேலி காளிகோயிலைப் பிறப்பிடமாகவும் பாற்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி செந்தில்ராஜன் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் திருநெல்வேலி சைவ வித்தியாசாலை, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும் திருநெல்வேலி பத்திர காளி அம்மன் கோயில், திருக்கேதீஸ்வரம், இலங்கை விஸ்வகர்மா ஆகியவற்றின் ஆயுள்கால அங்கத்தவரும் ஆவார். (9)



யா/வட்டு இந்துக் கல்லூரியின் இசை ஆசிரியரும் சங்கீத கலாவித்தகருமாகிய திருமதி மலர்விழி கனகசபை தீவக வலயக் கல்வி அலுவலகத்துக்கு அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நியமனம் பெற்றுள்ளார்.

வலி.மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் நுண்கலை வகுப்புக்களுக்குப் பொறுப்பாசிரியர் ஆவார். வலிகாமம் பிரிவு அறநெறிப் பாடசாலைகள் சில வற் றில் முன்னாள் பண்ணிசைப் போதனாசிரியராகவும் யாழ்.பல்கலைக்கழக மருதனார் மடம் நுண்கலைப் பீட முன்னாள் பகுதிநேர 'வீணை' போதனாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

4 ஆம், 5 ஆம் தர மாணவர்களுக்கு அழகியல் பாடத்துக்குரிய சில பாடல்களை ஒலி, ஒளி அமைப்பில் இறுவட்டாக 'மலரும் சந்தங்கள்' என்னும் பெயருடன் இவரின் நெறியாள்கையில் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கதாகும். (9)



தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளராகக் கடமையாற்றிய விசாகசுந்தரம் அருளானந்தம் வங்கியின் வடக்கு கிழக்கு வலய முகாமையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

1988ஆம் ஆண்டு வங்கி அதிகாரியாகக் காலடி வைத்து முகாமையாளராக, சிரேஷ்ட முகாமையாளராக பதவிகள் வகித்து தற்போது வலய முகாமையாளராக இவர் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இவரது சேவைக் காலத்தில்தான் யாழ். கிளை மேற்தரக் கிளையாகத் தரமுயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் வங்கியாளனாக மட்டும் சேவை வழங்காது பொருளியல் ஆசானாகப் பல்கலைக்கழக வெளிவாரி மற்றும் வங்கியியல் கற்கைநெறி மாணவர்களுக்கு கல்விச்சேவை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவுப் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நெடுந்தீவுப் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் நெடுந்தீவுப் பிரதேச சபையில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதித்திகதி 06.06.2011 பி.ப. 3 மணி வரை
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 08.06.2011 நண்பகல் 12 மணி வரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி 08.06.2011 பி.ப. 2 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்விகள் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்விகளை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் கேள்விக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.
7. கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதியை செயலாளர், பிரதேச சபை, நெடுந்தீவு என்ற விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு 08.06.2011 நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களை நெடுந்தீவுப் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ.இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா. | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக ) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | கொல்களம் அமைத்தல், நெடுந்தீவு மத்தி | 10,000.00 | 1000.00 | M09/C10 |
| 02 | நெல்வளைவிதானையார் வீதி புனரமைப்பு, நெடுந்தீவு மேற்கு | 2000.00 | 500.00 | M10/C10 |

நெடுந்தீவுப் பிரதேச சபை,
நெடுந்தீவு.
19.05.2011 (சி/110) (20-24)

[illegible],
செயலாளர்,
நெடுந்தீவுப் பிரதேச சபை.

# தனக்கென வாழாப் பெருந்தகையாளன்



சித்திபல தந்திடும் அத்தியடி விநாயகரிடம் முப்போதும் திருமேனி தீண்டி முழு மனதுடன் ஒரு நல்ல மக்கள் தொடர்பாளராகத் திகழ்ந்தவர் பிரம்மஸ்ரீ யோ.பிரபாகரேஸ் வரக் குருக்கள்.

எந்த நேரமும் சிரித்த முகத்துடன் ஆலய வாசலில் நெற்றியில் திரிபுண்டரந் துலங்க சைவாசார சீலராய்க் காட்சி தருகின்ற இவரது திடீர் மறைவு எல்லோருக்கும் வேதனையைத் தருகின்றது.

வேழ முகத்து விநாயகருக்குத் தொண்டு செய் வதையே தனது தொழி லாகக் கொண்டி ருந்த இவர் ஒரு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். ஆலயத்துக்கு வருகின்ற அடியவர்கள் தம்முடைய துன்பத்தைக் கூறி முறையிட வந்துள்ளார்கள் என்பதை நாசூக்காக அறிந்து கொள்ளும் இவர், அவர்களது மனப்பாரம் குறையத் தக்கவாறு உரையாடி, ''கவலைப்படவே தேவையில்லை. எல்லாம் பிள்ளையார் பார்த்துக் கொள்வார். நீங்கள் மனக்கவலையை விட்டுவிட்டுப் போங்கள். இனி எல்லாம் சரி'' என்று ஆறுதல் வார்த்தைகூறி தேறுதலளிக்கும் தன்மை இவருடைய ஒரு தனிப்பண்பு.

## நீத்தார் நயப்புரை

அந்தண சிவாச்சாரியார்களிடையே ஒரு தனித்துவமான பண்பும் நேர்மையும் நிறைந்த இவரது இழப்பு ஒரு பேரிழப்பாகும். அத்தியடி வாழ் மக்கள் அனை வரையுமே சோகத்திலாழ்த்தியுள்ள இவரது மறைவு கவலைக்குரியது. இந்துக் குருமார் ஒன்றியத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராதுழைத்த ஓர் அந் தணச் சிவாசாரியாரை நாம் இழந்து விட்டோம். 'அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' என்ற குறட்பாவுக்கமைய வாழ்ந்து மறைந்த இவருக்கு அவரது நன்னெறிப்பட்ட வழிகாட்டுதலைப் பின்பற்றி நடப்பதே நாம் செய்யும் கைமாறாகும்.

எல்லோராலும் ''பிரபா ஐயா'' என அன்போடு அழைக்கப்பட்டுவந்த இவரது பூதவுடல் மறைந்ததே தவிரப் புகழுடல் மறையவில்லை. அவரது சைவத் திருவுருவம் அவருடனே பழகிய ஒவ்வொருவரது உள்ளத்திலும் நீங்காது நிலைத்திருந்து வழிகாட்டி ஒளியூட்டிக் கொண்டேயிருக்கும். அன்னாரின் ஆத்மா அத்தியடியான் திருவடியில் சித்திபெற்றுச் சாந்தியுற வேண்டுகின்றோம்.

-சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்-

## கரபந்தாட்டப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம்,மே21

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை கரவெட்டி இமையாணன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

உரிய நேரத்திற்கு விளையாட்டு மைதானத்திற்கு வீர, வீராங்கனைகளை சமூகம் தருமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் கேட்டுள்ளார்.

(ஒ-23)

## அருணலு விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 21

கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' 2011 இற்கான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஸ்ரான்லி வீதி கிளைக் காரியால [illegible] உள்ளது.

(ற-313)

**Computer Express**
**Institute of Information Technology**

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

* Dip. in computer science. 4 Months 1000/=
* Dip. in web page Designing. 4 Months 1000/=
* Dip. in Graphic Designing. 4 Months 1000/=
* Dip. in Desk top publishing. 4 Months 1000/=
* Dip. in Hardware Engineering. 3 Months 1000/=
* Dip. in Auto CAD. 3 Months 1000/=
* Dip. in MicroSoft Office. 3 Months 1000/=
* Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) 3 Months 1000/=
* Honours Dip. in computer science. 5 Months 1000/=

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

31.05.2011 மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm
Course Fee 1000/=

Batch I - 21.05.2011 9Am or 3pm Batch II - 22.05.2011 9Am or 3pm
Batch III - 25.05.2011 9Am or 3pm Batch IV - 27.05.2011 9Am or 3pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



சின்னத்துரை
அன்னலட்சுமி (லீலா)

தோற்றம்
1928.03.19

மறைவு
2011.04.21

எனது அன்பின் திருவுருவாகிய அம்மா
எம்மை விட்டகன்று முப்பத்தொரு
நாள்கள் ஆகிய போதும் என்றும் எம்
மனதில் அணையாத் தீபமாக இருப்பார்.

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.05.2011) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் றோட்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய். மகள், மருமகன்.

(4464) (20-52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவலங்களுக்கு ஆளாகும் மக்களுக்கான நிவாரண உதவிக்கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, மே 21

திடீர் பாதிப்புக்கள் விபத்துக்களால் அவலங்களுக்கு ஆளாகும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிக் கொடுப்பனவுகளை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய அத்தகைய நிலைப்பாடு ஒன்றின் போது அரசால் வழங்கப்படும் சமைத்த உணவுகள், உலர் உணவுப் பங்கீட்டுக் கொடுப்பனவுகள், பயிர்ச் செய்கை நிவாரண உதவிகள், அழிவுற்ற வீடுகள் தொடர்பாக வழங்கப்படும் உதவிகள் போன்ற அனைத்து நிவாரண உதவிகளுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

அதற்கமைய நபரொருவருக்கான சமைத்த உணவுக் கொடுப்பனவு 100 ரூபாவிலிருந்து 150 ரூபாவாகவும் வாரம் ஒன்றுக்கான உலர் உணவுக் கொடுப்பனவு 245 ரூபாவில் இருந்து 385 ரூபாவாகவும் அதிகரிக்கப்படுகிறது.

இருஉறுப்பினர்களைக்கொண்டுள்ள குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்படும் உலர் உணவுப் பங்கீட்டுக் கொடுப்பனவு வாரம் ஒன்றுக்கு 315 ரூபாவில் இருந்து 490 ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது.

மூன்று உறுப்பினர்கள் அடங்கிய குடும்பம் ஒன்றுக்கு உலர் உணவுப் பங்கீட்டு கொடுப்பனவு 385 ரூபாவிலிருந்து 595 ரூபாவாகவும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ள குடும்பம் ஒன்றுக்கு உலர் உணவுப் பங்கீட்டுக் கொடுப்பனவு 455 ரூபாவிலிருந்து 700 ரூபாவாகவும் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குடும்பமொன்றுக்கு 525 ரூபாவிலிருந்து 805 ரூபாவாகவும் அதிகரிக்கப்படுகிறது.

பயிர்ச் சேதங்களுக்காக வழங்கப்படும் நிவாரணத் தொகை 20 ஆயிரம் ரூபாவில் இருந்து 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முழுமையாக அழிவுற்ற வீடு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபா வும் பகுதி சேத வீடொன்றுக்கு 25 ஆயிரம், 50 ஆயிரம் ரூபா வாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே திடீர் விபத்துக்கள் காரணமாக நலன்புரி நிலையங்களிலோ அல்லது சேதமுற்ற தமது வீடுகளில் அல்லது உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கிவாழும் அனைத்து மக்களுக்கும் அவர்களது வருமானங்களைக் கருத்தில் கொள்ளாது சமைத்த உணவுகள் மற்றும் உலர் உணவுப் பங்கீடுகளை வழங்குவதற்கும் அரசு தீர் மானித்துள்ளது.

(ம-22)

## கைத்தொலைபேசிப் பாவனை ஒன்றரைக் கோடியைத் தாண்டியது

கொழும்பு, மே 21

இலங்கையில் கைத்தொலைபேசிப் பாவனை ஒருகோடி 73 லட்சமாக அதிகரித்துள்ளதாக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நிலையான தொலைபேசிகளின் பாவனையும் 36 லட்சங்களாக அதிகரித்துள்ளதாகவும், விவசாயத்துறை, தச்சுவேலைத் துறை, மீன்பிடி மற்றும் கைத்தொழில் துறைகளில் கைத்தொலைபேசிப் பாவனை மிகப்பெரிய அபிவிருத்தி கண்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

கிராமங்கள் மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் தொலைத் தொடர்புச் சேவைகளின் அபிவிருத்திக்கு அரசு முன்னுரிமை வழங்கி வருவதே இதற்கு முக்கிய காரணி எனவும் அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (த-22)

## தென்மராட்சியில் 5 பாடசாலைகளுக்கு கட்டடம்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகளுக்கு இருமாடி வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கென உலக வங்கியிடமிருந்து மானியமாகப் பெற்ற நிதி உதவியுடன் இந்த மாடிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்தக் கட்டடங்களின் தரைமாடிக் கட்டட வேலைகள் தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாவற்குழி ம.வி, மீசாலை வீரசிங்கம் ம.வி, மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி, கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி- நாவற்குழி அ.த.க. பாடசாலை ஆகியவற்றிலேயே இரு மாடிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. (ம-207)

## வலி.தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 21

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் ''உள்ளூராட்சி வார விழா'' நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் ஆகியோரும் கலந்து கொள்வர்.

அத்துடன், இந்த நிகழ்வில் உள்ளூராட்சி சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தரின் சேவையைப் பாராட்டும் நிகழ்வும் 25 வருட சேவை வழங்கிய உத்தியோகத்தர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இசைக் கலைஞரைப் பாராட்டுதல் பரிசளிப்பு என்பனவும் நடைபெறவுள்ளன.

(ம-313)

## மரக்கறி விதைகள் விற்பனைக்குத் தயார்

அடுத்த போகத்துக்குத் தேவையான மரக்கறி விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு யாழ். குடாநாட்டு விதை உற்பத்திச் சங்கம் முன்வந்துள்ளது.

இதற்கென உள்ளூர் மரக்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கத்தரி, வெண்டி, பாகல், புடோல், தக் காளி, பூசணி, பயிற்றை போன்ற மரக்கறி விதைகள் சங்கத்தால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. விவசாயி கள் உற்பத்தி செய்த மரக்கறி விதைகளையும் கொள்வனவு செய்வதற்கும் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-26)

# மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கிராமங்களில் வேலைத்திட்டம்



கொழும்புத்துறை, மே 21

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராமங்களில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

வீதிகளைப் புனரமைத்தல், பொது இடங்களைச் சுத்தம் செய்தல் போன்ற பணிகள் இவ்வாறு இடம்பெற்று வருகின்றன.

மீளக்குடியமர்வுக்கு இந்தக் கிராமங்களைத் தயார்ப்படுத்தும் இந்தச்செயற்பாடுகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் கொழும்புத்துறை, எழிலூர், மகேந்திரபுரம், புனிதபுரம் பகுதிகளும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் நாவலடி, பூம்புகார், அரியாலைப் பகுதிகளும் அந்தந்தப் பகுதி மக்களால் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளருக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பணத்துக்கான வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட தொகை நாளாந்தம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-135)

# உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறியை இந்திய முன்னணி நிறுவனம் வழங்குகிறது

### துணைத்தூதரக அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், மே 21

உலகத்தரம் வாய்ந்த பட்டப் படிப்பு கற்கை நெறிகளை இந்தியாவிலுள்ள முன்னணி உயர் கல்வி நிறுவனங்கள் மிகக் குறைந்த செலவில் வழங்கி வருகின்றன.

இதன் காரணமாக உலகின் மூலை முடக்குகளிலிருந்து வருகைதரும் மாணவர்கள் இந்தியாவில் உயர்கல்வியைத் தொடர்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணத்திலிலுள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரி வெங்கடாச்சலம் மகாலிங்கம்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.பொதுநூலகத்தில் ஆரம்பமான இந்திய கல்விக் கண்காட்சி நிகழ்வின்போது தலைமை உரை நிகழ்த்துகையிலேயே இந்தியத் துணைத் தூதரக அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

இந்தியா ஏனைய துறைகளைப் போல் கல்வித் துறையிலும் முன்னேறிச் செல்கிறது.

இந்தியாவில் 305 பல்கலைக்கழகங்கள் 17 ஆயிரம் பட்டப் படிப்புக் கல்லூரிகள் உள்ளன. 65 தொலைக் கல்வி நிலையங்களும் 11 திறந்த வெளிப் பல்கலைக்கழகங்களும் உள்ளன.

உலகத் தரம் வாய்ந்த பட்டப் படிப்புக்களை இந்த உயர் கல்வி நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

மருத்துவம், பொறியியல், கட்டடக்கலை, விவசாயம், அறிவியல், கலை, தொழில்நுட்பம், தாதிய கற்கை உள்ளிட்ட பல்வேறு பட்டப்படிப்புக்களை அவை வழங்குகின்றன.

ஆங்கிலமொழி அறிவை விருத்தி செய்யவென விசேட கற்கை நெறிகளும் உள்ளன.

உலகத் தரம்வாய்ந்த கற்கை நெறிகளை மிகக் குறைந்த செலவில் நிறைவு செய்து கொள்ள முடிகிறது.

தங்குமிடம், கற்கை நெறிக் கட்டணம், அனுமதிக் கட்டணம் உள்ளடங்கலாக 100 தொடக்கம் 150 அமெரிக்க டொலரில் இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதன் காரணமாக உலகின் மூலை முடக்குகளிலிருந்து அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இந்தியாவிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களில் தமது உயர் கல்வியைத் தொடர்கின்றனர். - என்றார். (ம-14)

## மோதலில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 21

குடும்பத் தகராறு காரணமாக இரண்டு குழுவினரிடையே ஏற்பட்ட மோதலினால் இரண்டுபேர் படுகாயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கொக்குவில் பிறவுண் வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் இதே இடத் தைச் சேர்ந்த கி.தேவதாஸ் (வயது-55) தே. தயாளன் (வயது- 26) ஆகியோரே படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட இவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

## சிறுபோக வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிகம் ஆர்வம்

யாழ். குடாநாட்டில் சிறுபோக வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட விவசாய நிலங்களை மீளச்சீர்செய்து வெங்காயம் நடும் பணிகளில்ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்தமாதம் பெய்த மழையை அடுத்து வெங்காயம் நடும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, குடாநாட்டில் வெங்காயத்தின் விலை சடுதியாகக் குறைவடைந்து காணப்படுகிறது. தெற்கில் இருந்து வெங்காயம் எடுத்து வரப்படுகின்றமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் 100 ரூபா தொடக்கம் 120 ரூபா வரையில் விற்ப[illegible]ப்படுகின்றது.

(ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாயில் கழிவுப் பொருள்களை தீ மூட்டியதால் பெரும் புகை மூட்டம்

## நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் சிறிதுநேரம் பரபரப்பு

யாழ்ப்பாணம், மே 21

கல்லுண்டாய் வெளிப் பிரதேசத்தில் முறையற்ற விதத்தில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளைத் தீ மூட்டியதால் ஏற்பட்ட புகை மூட்டம் நவாலி, ஆனைக்கோட்டை மக்களை நேற்று முழுமையாகப் பாதித்தது. இந்தப் புகைமூட்டம் காரணமாக மக்கள் பெரிதும் சிரமப்பட்டனர்.

வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட கல்லுண்டாய் வெளி முறையான திண்மக் கழிவு முகாமைத்துவம் பின்பற்றப்படாமல் கழிவுகளால் நிரம்பி வழிகிறது.

வலி.மேற்கு, வலி.தென் மேற்கு, நல்லூர் மற்றும் யாழ். மாநகர சபை பிரதேசங்களில் இருந்து வகைதொகையற்ற ரீதியில் திண்மக் கழிவுகள், மலக் கழிவுகள் கொட்டப்படுகின்றன.

வீதியின் இரு மருங்கிலும் இந்தக் கழிவுகள் கொட்டப்படுகின்றன. ஒரு சரியான முகாமைத்துவம் இன்றியே இவை நடைபெறுவதாக அடிக்கடி குற்றஞ் சாட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறு கொட்டப்பட்ட கழிவுகள் நேற்றுத் தீ மூட்டப்பட்டன.


இதனால் ஏற்பட்ட புகை மூட்டம் நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகள் எங்கும் பரவியது. இதனால் அந்தப் பகுதி மக்கள் சிறிதுநேரம் பதற்றமடைந்தனர். பின்னர்தான் அவர்களுக்குக் கழிவுகள் தீ மூட்டப்பட்ட விடயம் தெரியவந்தது.

கல்லுண்டாய் வீட்டுத்திட்ட மக்கள் இப்புகை மூட்டத்தால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர். இந்தநிலை தொடர்வதால் தாம் அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயரவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று ஏற்பட்ட கடும் புகை மூட்டத்தால் மக்கள் தும்மல், வாந்தி போன்ற ஒவ்வாமை நோய்களுக்கும் ஆளாக வேண்டி ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

(த-302)

## மக்கள் பணிக்காக...



புதுப்பொலிவுடன்: நேற்று உடுவில் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன மங்கல விளக்கு ஏற்றுகிறார். (த-86)

# வடமராட்சி கிழக்கில் துப்புரவுப் பணிகள்

பருத்தித்துறை, மே21

வடமராட்சி கிழக்கில் விரைவில் மக்கள் மீளக்குடியமர்த்தப் படவுள்ள இடங்களைத் துப்புரவு செய்யும் பணியை பருத்தித்துறை பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் சுமார் 823 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளன.

அந்தப் பகுதிகளிலுள்ள நன்னீர்க் கிணறுகளை இறைத்து துப்புரவு செய்யும் பணியையும் மற்றும் பொது இடங்களைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையையும் பருத்தித்துறை பிரதேச சபை ஊழியர்கள் அந்தப் பகுதி மக்களின் உதவியுடன் மேற்கொண்டுள்ளனர். (த-190)

# மீள்குடியமர்வுக்காக இதய சுத்தியுடன் முஸ்லிம் சம்மேளனம் செயற்படவில்லை

## யாழ். முஸ்லிம்கள் அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், மே 21

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்.- கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் சம்மேளனம் வட பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களுக்கு எவ்வித உதவிகளையும் வழங்காமல் அவர்களை நடுக்கடலில் தத்தளிக்கவிட்டுள்ளது. அது இதய சுத்தியுடன் இயங்கவில்லை.

இவ்வாறு தெரிவித்து யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களில் 375 பேர் கையொப்பமிட்டு மீள்குடியேற்ற அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வட மாகாண ஆளுநர், யாழ். அரச அதிபர், யாழ். பிரதேச செயலர், யாழ்.மாநகர முதல்வர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

2011.03.25 அன்று பிற்பகல் 4 மணியளவில் யாழ்.மண்புஉவ் உலூம் முஸ்லிம் பாடசாலையில் யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துவரும் மக்கள் ஒன்று கூடி மீளக்குடியமர்வு நிலைமை குறித்துக் கலந்துரையாடினோம்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ்.- கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் சம்மேளனம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விதத்தில் முஸ்லிம் மக்களின் நலன் சார்ந்த எதையும் செய்யவில்லை.

இதன் காரணமாக முஸ்லிம் மக்களாகிய நாம் அந்த சம்மேளனம் மீது நம்பிக்கை இழந்து விட்டோம். மீளக்குடியேற்ற நடவடிக்கைகளில் சம்மேளனம் இதய சுத்தியுடன் செயற்படவில்லை என்றுள்ளது.

(த-14)

# பாடசாலை மாணவர்களுக்கான கூட்டுறவுப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், மே 21

89 ஆவது சர்வதேசப் கூட்டுறவு தினத்தை முன்னிட்டு வட மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மாகாண ரீதியில் பாடசாலை மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளது.

இன்று சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 9 மணி முதல் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

முற்பகல் 9 மணிக்கு நாடகம், கவிதை, பொது அறிவு ஆகிய போட்டிகளும் பிற்பகல் 1 மணிக்கு கலாசார நடனம், விவாதம் ஆகிய போட்டிகளும் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் நடை பெற்ற பாடசாலை மட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தெரிவான அனைத்து மாணவர்களையும் மாகாண மட்டப் போட்டிகளில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

(த-26-311)

# சந்தேக நபர் சமுகமளிக்காமையால் பிணைப்பணம் ஒரு லட்சம் மன்றால் பறிமுதல்

யாழ்ப்பாணம், மே 21

வழக்கின் சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாத இரு பிணையாளர்கள் பிணைப் பணமான தலா 50 ஆயிரம் ரூபாவை நீதிமன்றுக்குச் செலுத்தினர்.

மீசாலை வடக்கில் கடந்த 2010.05.21 திகதி 15 வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும் வர்ணகுலசிங்கம் நரேஸ்குமார் என்பவருக்கு எதிராகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்திருந்தனர். தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் கடந்த ஆண்டு ஜூன் 2ஆம் திகதி 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நபர் நீதிமன்றத் தவணைகளுக்குத் தொடர்ந்து சமுகமளிக்காதமையால் கடந்த 5 ஆம் திகதி இந்த நபருக்கு எதிராகப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப் பட்டது.

அத்துடன் நேற்று முன்தினம் சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டுமென உத்தரவிட்டு, பிணையாளர்கள் இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்லுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றுக்கு வருகை தந்த பிணையாளர்கள் சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியவில்லையெனத் தெரிவித்தனர். இதனையடுத்து இவ்விருவரும் பிணைப் பணமாகச் செலுத்திய தலா 50 ஆயிரம் ரூபாவையும் பறிமுதல் செய்யுமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.

(த-207)

# புதிய கட்டடங்களை நேற்று அமைச்சர் ஜோன் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், மே 21

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் அமைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட அரசினர் சுற்றுலா விடுதியையும், உடுவில் பிரதேச செயலகத்தையும், அமைச்சர் டபிள்யூ.டி.ஜோன் செனவிரத்ன நேற்று உத்தியோக பூர்வமாகத் திறத்து வைத்தார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பொது நிர்வாக உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜோன் செணவிரத்ன, பிரதி அமைச்சர், இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட செயலகத்துக்குச் சமீபமாக அமைக்கப்பட்டுள்ள அரசினர் சுற்றுலா விடுதி குவைத் நாட்டின் உதவியுடன் ஒருகோடி 30 லட்ச ரூபா செலவில் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. உடுவில் பிரதேச செயலகக்கட்டம் ஐந்து கோடி ரூபா செலவிலும் அமைக்கப்பட்டுள்ளது. (த-2)

# கட்டுடை இடிகுண்டுப் பகுதிக்கு மாத இறுதியில் மின் இணைப்பு

யாழ்ப்பாணம், மே 21

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுமார் 4 லட்சம் ரூபா செலவில் கட்டுடை இடிகுண்டுப் பிரதேசத்துக்கு மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கான வேலைத் திட்டத்தை இருவாரங்களில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக சுன்னாகம் மின்சார சபை அலுவலகம் அறிவித்துள்ளது.

கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்கம் மின் வெளிச்சம் இல்லாமையால் இரவுவேளைகளில் மிகவும் ஆபத்தானதாக உள்ளது எனப் பொது அமைப்புக்கள் சுட்டிக் காட்டியதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கட்டுடை இடிகுண்டுப் பிரதேசத்துக்கு மின் வழங்குமாறு கடந்த 5 வருட காலமாக விடுக்கப்பட்டுவந்த கோரிக்கை இந்த மாத இறுதியிலேயே பயன் தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபையின் வடக்கு அலுவலகத்துக்கான கட்டடத்தை அமைப்பதில் தொடர்ந்தும் இழுபறி

### நிலைமையை விளக்கிப் பொது முகாமையாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், மே 21

இலங்கை மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்துக்கான கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான இழுபறி நிலை நீடித்து வருகின்றது.

கட்டடத்தை அமைப்பதற்கான காணி விடயத்திலேயே இந்த இழுபறி நிலை நீடிப்பதாகவும் இதற்குத் தீர்வு காணுமாறு கோரி மின்சார சபையின் பொது முகாமையாளருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளதாகவும் மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் டி.கே.பி.யு குணதிலக்க தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சகல வசதிகளுடன் கூடிய வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகக் கட்டடத் தொகுதியொன்று 150 மில்லியன் ரூபா செலவில் யாழ் நகரில் விரைவில் அமைக்கப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே பத்திரிகைகள் மூலம் தெரியப்படுத்தியிருந்தேன்.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு அருகிலுள்ள 7.2 பரப்புக்காணியில் ஐந்து மாடிக் கட்டடமாக இந்த அலுவலகத்தை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டோம். நூறு வருடம் பழமை வாய்ந்த அந்தக் காணியில் புதிய அலுவலகத்தை அமைப்பதற்கான நிதியை மின்சார சபையின் இயக்குநர் சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் அடுத்த வருட இறுதிக்குள் இந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவு பெறவேண்டும் என்பதே எமது திட்டமாகும். எனினும் அதனை ஆரம்பித்து விரைவாகச் செயல்படுத்த கட்டடம் அமையவுள்ள காணி விவகாரம் தான் முட்டுக்கட்டையாக உள்ளது. இதற்கு முதலில் தீர்வுகாண வேண்டியுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்களுக்கான விடுதியை அமைப்பதற்கு எமது புதிய அலுவலகம் அமையவுள்ள காணியை வழங்குமாறு யாழ். அரச அதிபர் ஊடாக மின்சார சபையிடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. மின்சார சபையின் பொது முகாமையாளர் திருமதி பத்ரா ஜெயவீரவிடமே அரச அதிபர் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் எமது புதிய கட்டடம் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட காணியிலேயே அமைக்க வேண்டும் எனவும் அதற்கான நியாயமான காரணங்களைச் சுட்டிக்காட்டியும் பொது முகாமையாளருக்கு நான் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன்.

அந்தக் கடிதத்துக்கு சாதகமான பதில் கிடைத்ததும் மிக விரைவில் கட்டடம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும். இந்தப் புதிய அலுவலகத்தில் வாணிபம், கட்டுமானம், வழங்கலும் பராமரிப்பும், திட்டமிடலும் அபிவிருத்தியும், சக்தி முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான பிரதம பொறியிலாளர் அலுவலகங்கள் தனித்தனியாக



அமையவுள்ளன. அத்துடன் கணக்காளர் வருமானப்பிரிவு அலுவலகம், வாடிக்கையாளர் கவனிப்பு அலுவலகம், மின்கட்டணம் செலுத்தும் இடம் என்பனவும் இதில் அமைக்கப்படும்.

மின்சார சபையின் வடமாகாணபிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்துக்கென சொந்தக் கட்டடம் இதுவரை இல்லை. மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா வாடகை செலுத்தியே தனியார் கட்டடத்தில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தற்போது அலுவலகம் இயங்கி வருகிறது -என்றார். (த-14)

# இந்து - பௌத்த கலாசார சங்கம் திங்களன்று திறப்பு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத்தில் இந்து பௌத்த கலாசார சங்கம் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இல, 29, பழம் வீதி, கந்தர்மடம். என்னும் முகவரியில் திறந்த வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, விசேட விருந்தினராக யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்னதேரர் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாட்டாளராக யாழ். ஈ-யூலங்கா போரம் தலைவரும் இந்து கலாசார மற்றும் சமய விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளருமான எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் செயற்படுகின்றார். (த-122)

# வீதியோரப் பெட்டிக் கடைகளால் போக்குவரத்தில் பெரும் நெருக்கடி

வண்ணை, மே 21

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறிச் சந்தைப் பகுதி அமைந்துள்ள வீதியோரப் பெட்டிக் கடைகளால் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பெட்டிக்கடைகளின் முகப்பு உள்பக்கமாக அமையாமல் ஆஸ்பத்திரி வீதிப் பக்கமாக மாற்றப்பட்டிருப்பதன் காரணமாகவே அந்தப் பகுதியில் நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

முன்னர் இந்தப் பகுதியில் பெட்டிக்கடைகள் உள்பக்க முகப்பைக் கொண்டிருந்தன. சமீபத்தில் தென்பகுதி உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்ததை அடுத்து வடிகாலைப் பலகைகளால் மூடிக் கடைகள் ஆஸ்பத்திரி வீதிப் பக்கமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மிகவும் குறுகிய பகுதியில் இருவழிப் பாதையாக அமைந்துள்ள இடத்தில் இந்தக் கடைகளின் முகப்புப் வீதிப் பக்கமாக மாற்றப்பட்டிருக்கும் நிலையில் உல்லாசப் பயணிகள் கூட்டம் கூட்டமாக மேற்படி கடைகளை சுற்றி நின்றால் ஆஸ்பத்திரி வீதியால் அந்தப் பகுதியைக் கடப்பது மிகுந்த சிரமமாக உள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் விபத்துக்கள் ஏற்பட்டு உயிராபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளன எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பெட்டிக்கடை வியாபாரிகள் மாநகரசபையின் அனுமதி பெறாமல் இவ்வாறு தன்னிச்சையாகச் செயற்படும் நிலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-160)

### காலத்தின் தேவை...



புரிந்து கொள்ளுங்கள்: யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியின் முத்தமிழ்விழா கல்லூரி அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் தொடர்பாடல் மூலம் எமது சமூக, கலாசார, பண்பாடுகள் எவ்வாறு சீரழிக்கப்படுகின்றன என்பதையும், அவற்றால் உண்டாகும் விளைவுகளையும் பிரதிபலிக்கும் நாடகம் ஒன்று கல்வியியற் கல்லூரி மாணவர்களால் மேடையேற்றப்பட்டது.அந்த நாடகத்தின் ஒரு காட்சி இது. (த-4)

# யாழ்ப்பாணத்தில் வைத்தியர்களின் மேலதிகக் கொடுப்பனவில் பாரபட்சம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்ட வைத்திய சாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் மத்திய அரசின் போதனா வைத்திய சாலையும் மாகாண அரசின் ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் பிரதேச வைத்தியசாலைகள் என்பனவும் உள்ளன.

போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்களுக்குக் கட்டுப்பாடு எதுவுமின்றி மாதாந்தம் 120 மணித்தியாலங்கள் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. மாகாண வைத்திய சாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவதற்கு மாகாண சுகாதார அமைச்சு கட்டுப்பாடு விதித்துள்ளது.

ஒரே மாவட்டத்தில் பணிபுரியும் வைத்தியர்களுக்கு வெவ்வேறு வகையிலான கொடுப்பனவு வழங்குவது யாழ். மாவட்டத்தில் மட்டுமே நடைமுறையில் உள்ளது என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் மாவட்டத்தில் உள்ள ஏனைய வைத்திய சாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்று கடமையாற்றத் தயங்குகின்றனர்.

எனவே இவர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-207)

# மக்கள் கலை இலக்கிய அரங்கம் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மே 21

வடமாகாண மக்கள் கலை இலக்கிய அரங்கத்தின் அங்குரார்ப்பணம் மற்றும் கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு என்பன கடந்த 18 ஆம் திகதி யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

மக்கள் கலை இலக்கிய அரங்கத்தின் தலைவர் சொல்லின் செல்வர் இரா .செல்வடிவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதி வண கலாநிதி டானியல் தியாகராசா ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

வடமாகாணத்தின் கலைகளைப் பாதுகாக்கவும் கலைஞர்களை ஊக்குவிக்கவும் மக்கள் கலை இலக்கிய அரங்கம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்குரார்ப்பண நிகழ்வில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உட்படப் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் கலை ஆர்வலர்கள், கலைஞர்கள் கலந்து கொண்டனர். (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் வரவுக்காக பிள்ளைகளுடன் காத்திருக்கும் இளம் தாய்

## வன்னியிலிருந்து வந்தவருடன் ஒரு சந்திப்பு

வன்னியிலிருந்து வந்திருந்த இளம் சகோதரி ஒருவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சந்தித்தேன். தனது பிள்ளைகளில் ஒன்றுக்கு சரும வியாதி ஏற்பட்டிருப்பதால் இங்கு கொண்டு வந்திருக்கிறார் சிகிச்சைக்காக.

''வன்னியில் எப்படி இருக்கிறது வாழ்க்கை'' என்று கேட்டேன்.

''சொல்லவேண்டாம், எந்த விதமுன்னேற்றமும் இல்லை. மூன்று பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு கணவரின் வருகைக்காக காத்திருக்கிறேன்'' என்று கூறினார்.

கணவன் எங்கே, என்ன செய்கிறார்?

தடுப்பில் இருக்கிறார். இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன, விடுகிறார்கள் இல்லை''.

சந்திப்பது உண்டா.

''ஆம், சந்திக்க விடுகிறார்கள், அதில் பிரச்சினை இல்லை''.

''பிறகு ஏன் இன்னமும் தடுப்பில்?''

அது தான் தெரிய வில்லை. அவர் பெரிதாக இயக்கத்தில் ஒன்றும் செயற்பட்டவரில்லை.

வீட்டில் கோபித்துக் கொண்டு போய் இயக்கத்தில் சிறிது காலம் இருந்துவிட்டு திரும்பி வந்து விட்டார். யுத்தம் முடிந்தவுடன் புலிகளுடன் ஒருநாள் இருந்தவர்களானாலும் சரணடைய வேண்டும் என்று அறிவிக்கப் பட்டதால் போனார். இரண்டு வருடங்களுடன் தடுப்பில் இருக்கிறார். விடுவார்கள் என்கிறார்கள். ஆனால் விடுவிக்கக் காணோம் என்று கூறி கைக்குழந்தைகளைப் பார்த்து பெரிதாக மூச்சு விட்டார்.

''குடியிருக்க வீடு இருக்கிறதா? அந்த வசதிகள் எல்லாம் எப்படி?''

''முதலில் தறப்பாள் கொட்டில் அமைத்து கொடுத்தது ஒரு நிறுவனம். பின்னர் சிறிது காலம் கழித்து இன்னொரு நிறுவனம் தகரக் கூரையுடன் கொட்டில் போட்டுக் கொடுத்தது. குடியிருப்பு பரவாயில்லை. ஆனால் ஆபத்து குறையவில்லை. கொட்டிலுக்குள் ஓணான் வரும், தேரை வரும் அவைகளைத் தேடிப்பிடிக்க விஷப் பாம்புகளும் வந்து விடும். வந்தவை அங்கேயே தங்கிவிடுங்கள். சிறு குழந்தைகளுடன் பயந்தபடிதான் வாழ்க்கை''

'' குழந்தைகளுக்கு பால்மா, போஷாக்கு எல்லாம் எப்படி?''

''பால்மா பாக்கெட்டுகள் விலைக்கு கிடைக்கும். விலை இங்குபோல்தான், பசுப்பால் கால் போத்தல் தருவார்கள். வெகுதூரம் போகவேண்டும். நாங்கள் போகும் நேரம் எல்லாம் தீர்ந்து போய் விடும்''.

''பணத்துக்கு, உணவுப் பொருள்களுக்கு என்ன செய்கிறீர்கள்''

''பல மாதங்களுக்கு முன்பே நிவாரணத்தை நிறுத்தி விட்டார்கள். இங்கிருந்துதான் அம்மா அல்லது அக்கா வருவார்கள். அவர்கள் தான் உதவி''.


''இங்குவந்து விடலாமே நிரந்தரமாக''

ஆம் இங்குதான் எங்கள் சொந்த இடம். ஆனால் கணவர் வரும் வரை பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் வந்த பிறகுதான் ஒரு முடிவுக்குவருவோம் என்றார்.

இவ்வாறு நிர்க்கதிக்குள்ளான பல குடும்பங்கள் தம் பகுதிகளில் இருப்பதாகவும் அவர்களும் இவ்வாறே எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாமல் தம் உறவுகளின் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் அவ்விளம்தாய் மேலும் கூறினார்.

**ரம்யன்**

## மெல்ல, மெல்ல திரும்பும் சுமுக நிலை...



கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டில் நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் மக்களும் படிப்படியாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.
இந்த நிலையில் யுத்தத்தால் பெரும் அழிவுகளைச் சந்தித்த கிளிநொச்சி வாழ் மக்கள் மீண்டும் தங்களது இயல்பு வாழ்க்கையை நோக்கி நகர்வதைக் காணக் கூடியதாக உள்ளது. (ம)

# கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம், மே.21

கிளிநொச்சி நகர் வர்த்தக சங்கப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் விடுமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் வர்தகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (எ-313, 450)

# யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பிரதி அதிபர் செல்வி தேவராணி சங்கரப்பிள்ளை அவர்களின் மணிவிழாச் சிறப்புமலர்

### மணி விழா நாயகியே நீடு வாழி



இன்று நாம் மணிவிழா எடுத்து மகிழும் ஆசிரியப் பெருந்தகை செல்வி தேவராணி சங்கரப் பிள்ளை அவர்கள் நான்கு தசாப்த காலத்தை ஆசிரி யப் பணியுடன் இணைத்துக் கொண்டவர். விஞ்ஞானத்துறைப் பட்டதாரியான இவர் விஞ்ஞானத்துறைக் கற்கைகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பெருமைகளைப் பேசுவோர் நிச்சயம் இவரையும் நினைவுகூர்வர். இவர் இக் கல்லூரியின் ஆசிரியையாக, பிரதி ஆதிபராகக் கடமையாற்றிய காலங்கள் என்றுமே மறக்க முடியாதவை. இந்த ஒப்பற்ற மணிவிழா நாயகியை வாழ்த்தும் பல நல்ல உள்ளங்களுடன் வலிகாமம் கல்விச் சமூகமும் இணைந்து கொள்கிறது.

*ஆ.ராஜேந்திரன், வலயக்கல்விப் பணிப்பாளர்,*
*வலிகாமம் கல்வி வலயம்.*

### சிறந்த விஞ்ஞான ஆசிரியர்



இப்பாடசாலையில் சிறந்த விஞ்ஞான ஆசிரியராகக் கடைமையாற்றிப் பிரதி அதிபராக உயர்வடைந்து மாணவர்களை நல்வழிப்படுத்துவதிலும் நிர்வாக வேலைகளைத் திறம்படச் செய்வதிலும் இவராற்றிய பங்களிப்பை பாராட்டி ஓய்வு காலத்தில் நோய் நொடியின்றி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.செ.குபேரநாதன்**
*உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர்.*

### ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரின் செய்தி



எங்கள் கல்லூரி வரலாற்றில் முத்திரை பதித்த விஞ்ஞானத்துறை ஆசிரியர் செல்வி T. சங்கரப் பிள்ளை என்றால் மிகையாகாது. சிறந்த ஆசிரிய ராக விளங்கிப் பின் பகுதித் தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராகப் பணியாற்றி இன்று ஓய்வு பெறுகின்றார். கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறைகொண்டு செயற்பட்டவர். அர்ப்பணிப்பு மிக்க இவரது சேவையை என்றும் மாணவர்கள் போற்றிய வண்ணமுள்ளனர். எந்தவொரு பொறுப்பையும் ஏற்று அதனைப் பூரணமாக நிறைவேற்றும் ஆளுமைமிக்க இவரது ஆற்றலைப் பாராட்டாதவர்களில்லை. தனது சொந்தப் பணத்தில் மாணவர்களுக்குக் கற்பித்தல் சாதனங்களை உருவாக்கிக் கற்பித்தவர். உயர்தர மாணவர்களுக்கு உயிரியல் பாடம் கற்பிப்பதில் மிகுந்த ஆற்றல் மிக்கவராகப் பாராட்டுப் பெற்றவர். இளைய தலைமுறை ஆசிரியர்களை ஆற்றுப் படத்துவதில் வல்லவர். இவரது சேவையை ஸ்கந்தவரோதயாச் சமூகம் என்றும் நன்றியோடு வாழ்த்தும் என்பதில் ஐயமில்லை ஓய்வு நிலையிலும் அவரது பணி ஸ்கந்தாவில் தொடர வேண்டி அவரது எதிர்கால வாழ்வுக்கு ஸ்கந்தப் பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

*ஆறு.திருமுருகன், அதிபர்,*
*ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.*



**செல்வி தேவராணி சங்கரப்பிள்ளை**
(பிரதி அதிபர்)
B.Sc. (Hons), Dip.in Ed., Sp.Trd. (Science),
S.L.T.S-I

**ஆசிரியப் பணி:-**

| | |
|---|---|
| ★ க/கம்பளை முஸ்லிம் வித்தியாலயம் | 1972.02.01- 1972.10.04 |
| ★ க/கடுகண்ணாவ சி.சி. தமிழ் வித்தியாலயம் | 1972.10.05- 1977.02.28 |
| ★ பலாலி ஆசிரியர் கலாசாலை | 1977.03.01- 1978.12.31 |
| ★ யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம் | 1979.01.01- 1987.05.03 |
| ★ யா/நடேஸ்வராக் கல்லூரி | 1987.05.04- 1987.06.17 |
| ★ யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி | 1987.06.18- 2011.05.21 இன்றுவரை. |

**அதிபர், ஆசிரியர் கழகம்,**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.**

### திறன் மிக்க சேவையாளர்



ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 24வருடங்களாக ஆசிரியராக, பகுதித்தலைவராக, உபஅதிபராக, பிரதிஅதிபராக ஒழுங்கு முறையாகப் பதவி உயர்வைப் பெற்று ஓய்வுபெறுகின்ற செல்வி தேவராணி சங்கரப்பிள்ளை அவர்கள் இக் கல்லூரியில் நான் அதிபராகக் கடமையாற்றிய வேளையில் நிர்வாகத்துக்கு பெரும் ஒத்துழைப்பையும், பக்கபலத்தையும் அளித்தவர். இவர் அளப்பரிய கடமையுணர்வையும் மாணவர் மீது மிகுந்த அக்கறையும் உடையவர். மாணவரிடம் கண்டிப்பாக இருந்த அதே வேளை அதிக கருணை உள்ளத்தையும் கொண்டவராகவும் துடிப்புடன் தனது கடமைகளைத் திறன்படச் செய்தவர். மாணவர் வழிகாட்டியாகவும், உயர்தர மாணவர்களுக்குப் பொறுப்பாகவும் உயர்தர மாணவர்களுக்கு உயிரியற்பாடத்தை நுட்பமாகவும், செயல்முறை சார்ந்ததாகவும் ஆர்வமுடன் கற்பித்த ஆசானாவார். யாவருடனும் சரளமாக நன்கு மனம்திறந்து பழகியவர். இவ ரது அர்ப்பணிப்பான சேவை இக்கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது. இவரது ஓய்வுகாலம் பயன்மிக்கதாகவும், உடல், உள நலம் மிக்கதாகவும் அமைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

க.சிவாஜி, முன்னாள் அதிபர்,யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

### தூய்மையான சேவையாளர்



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் விஞ்ஞானத்துறை மேன்மைக்குத் தன்னை அர்ப்பணித்ததுடன் தூய்மையாக நிர்வாகப்பணிகளையும் மேற்கொண்டு ஓய்வுபெறும் பிரதிஅதிபர் செல்வி தே.சங்கரப்பிள்ளை அவர்களின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றேன். யான் இவரது மாணவன் என்பதையும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

**வ.நந்தீஸ்வரன்**
*அதிபர், யா/ஸ்கந்தவரோதய, ஆரம்பப் பாடசாலை.*

### நீடூழி வாழ்க



விஞ்ஞான பாடத்தை இலகுவாக மாணவர்களுக்குப்புரியும் வகையில் கற்பிப்பதில் சிறந்த அனுபவமுடைய ஓர் நல்லாசிரியர். எந்தஒரு மாணவரையும் விருப்புடன் கற்பதற்குத் தூண்டுபவர், மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்துவதில் இவருக்கு நிகர் இவரேதான். யான் இவரது மாணவன் என்பதை நன்றியுடன் நினைவுகூர்ந்து இவரது ஓய்வுகாலத்தில் நோய்நொடியின்றி வாழ இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

*சி.சதீஸ், தலைவர், ஆசிரியர் கழகம்,*
*யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.*

(49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறவலைப் பெற முடியாத நெருக்கடி வன்னியில் வீதிப் புனரமைப்பு பாதிப்பு

கிளிநொச்சி, மே 21

வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதிப் புனரமைப்புகளுக்கான கிறவலைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக பிரதேச சபையினரும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினரும் தெரிவிக்கின்றனர்.

இதனால் பல வீதிகளின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட்ட போதும் பணிகளை ஆரம்பிக்க முடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

வீதிப் புனரமைப்புக்கு தேவையான கிறவலைப் பெற்றுக் கொள்வதில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கிடையிலான நிர்வாக எல்லைப் பிரச்சினை ஒரு காரணமாக உள்ளது.

படையினரின் அனுமதி, கனியவளங்கள் திணைக்களம் மற்றும் வனத்திணைக்களம் ஆகியவற்றின் அனுமதிகள் கிடைப்பதிலும் இடர்பாடுகள் நிலவுவதால் நிலைமை மேலும் சிக்கலடைகின்றது என்று பிரதேச சபையினரும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் கூறுகின்றனர்.

கிறவலைப் பெறுவதில் உள்ள நெருக்கடியால் வீதிப் புனரமைப்புக்கான கால எல்லை முடிவடையும் நிலையிலும் கூட புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படாமலே உள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக அண்மையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் ஆராயப்பட்டபோதிலும், எந்தத் தீர்மானமும் இதுவரை எட்டப்படாமலே இருக்கிறது. (ம)

## பழக்கன்றுகள் விவசாயிகளுக்கு

மன்னார், மே.21

விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பண்டாரவன்னி கமக்கார அமைப்பினால் பழக் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தலா 20 கன்றுகள் வீதம் ஒவ்வொரு விவசாயிக்கும் பண்டாரவன்னி கமக்கார அமைப்பினால் வழங்கப்பட்டு வருகின்றன. கமக்கார அமைப்பின் அனுசரணையுடன் இதற்கு முன் தேசி, மா, மாதுளை என்பன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-500)

## மாந்தை கிழக்கு வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

முல்லைத்தீவு, மே 21

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் கீழ், சேதமடைந்துள்ள அனைத்து வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன என்று பிரதேச சபையின் தலைவர் எஸ்.தனிநாயகம் தெரிவித்தார்.

பிரதேச சபையின் முதலாவது கூட்டத் தொடரில் இது குறித்தே முக்கியமாக ஆராயப்பட்டதாகவும் அவர் கூறினார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒட்டங்குளம் பொதுச் சந்தையைத் திறப்பது குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பிரதேச சபையின் முதலாவது அமர்வு நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் சார்பில் தெரிவான ஆறு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் தெரிவான மூவரும் அமர்வில் கலந்து கொண்டனர். (ம)

## வெடிபொருள்கள் விழிப்புணர்வுக்கு போட்டிகள்




வவுனியா, மே 21

வெடிபொருள்கள் தொடர்பாக மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்குடன் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கண்ணி வெடி அகற்றலுக்கான சுவிஸ் மன்றம் போட்டிகளை நடத்தியது.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் கிண்ணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த 14 பாடசாலைகளின் மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றினர்.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ், கண்ணி வெடி அகற்றலுக்கான சுவிஸ் மன்றத்தின் அதிகாரி கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம)

## போரினால் பெற்றோரை இழந்த பூநகரி மாணவர்களுக்கு உதவி

கனடாவில் இயங்கும் கனடா பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்கு உதவ முன்வந்துள்ளது.

பூநகரிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் கடந்த கால போர் நடவடிக்கையின் போது தந்தையையும் தாயையும் இழந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவ மேற்படி நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் பொருட்டு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை அந்த நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

பூநகரி மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் பூநகரி - கனடா அபிவிருத்திச் சங்கத் தலைவருமான கே.என்.இராஜகுலசிங்கம் பூநகரி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினூடாக பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்த மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றலுக்குத் தேவையான உபகரணங்கள், காலணிகள் என்பன வழங்கப்படவுள்ளன என்று பூநகரி மகா வித்தியாலய வலய பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர். (எ)

## அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வவுனியா தெற்கில் ஆரம்பம்

வவுனியா, மே.21

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் இவ்வாண்டுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சபையின் உறுப்பினர் க.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

கோதண்ட நொச்சிக்குளத்தில் ஆரம்பிக்கப்பட்ட உள்ளக வீதிகளின் புனரமைப்புடன் தமது சபையின் இவ்வாண்டுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சபையின் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் கிராமங்கள் ரீதியாகச் சென்று தேவைகளை இனங்கண்டு கொண்டதற்கமையவே வேலைத் திட்டங்களை முன்னுரிமைப் படுத்தி சபையின் தலைவர் க. சிவலிங்கத்தின் தலைமையில் செயற்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இவ்வாறான வேலைத்திட்டங்கள் 100 நாள் வேலைத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். (த-எ)

## மீனவர் பாதிப்பு

மன்னார் வளைகுடா ஆழ்கடல் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களின் வலைகள் அப் பகுதியினூடாகச் செல்லும் கப்பல்களினால் வெட்டப்படுவதனால் மன்னார் மாவட்ட ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்துள்ளதாக கடற் றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் வளைகுடாப் பகுதிகளில் எண்ணெய் அகழ்வதில் பெரும் கப்பல்கள் ஈடுபட்டிப்பதாலே மீன்பிடித் தொழில் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இக் கடற்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபடும் வேளையில் பல லட்சம் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வெட்டப்பட்டும் காணாமல் போயுள்ளதாகவும் இந்நிலை தொடர்ந்தால் பட்டினிச் சாவை தாம் எதிர் நோக்க வேண்டிவரும் என தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சு உயர் அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பேசவுள்ளதாகத் தெரிவித்தார். (எ)

# தறப்பாள் கொட்டில்களில் வாழும் அவலநிலை வன்னியில் தொடர்கிறது

மீள்குடியமர்த்தப்படும் போது உடனடியாகத் தங்குவதற்கு வழங்கப்பட்ட தறப்பாளைக் கொண்டு கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கு அடுத்தபடியாக தற்காலிக வீடும் அதற்கு அடுத்ததாக நிரந்தர வீடமைப்புக்கான உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் இந்த உதவிகள் மீள்குடியமர்ந்துள்ள அனைவருக்கும் கிடைக்கவில்லை என மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வன்னியில் யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும் போரினால் இடம்பெயர்ந்திருந்த மக்களின் புனர் வாழ்வு நடவடிக்கைகள் திருப்தியளிக்கும் வகையில் இடம்பெறவில்லை என தெரிவிக்கின்றனர்.

போரினால் இடம் பெயர்ந்த சுமார் 3 லட்சம் பேர் மெனிக் பாம் இடைத்தங்கல் முகாமில் தஞ்சமடைந்திருந்தனர். இவர்களின் சுமார் 17 ஆயிரம் பேரைத் தவிர ஏனையயோர் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது.

மீளக்குடியமர்வு நடவடிக்கை மேற்கொண்டு ஒரு ஆண்டுக்கு மேலாகின்ற போதிலும் இன்னும் பலர் தறப்பாள் கொட்டிலிலேயே வசிக்க நேர்ந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியமர்வு பிரதேசங்களில் வாழ்வாதார உதவிகளும் சீராக வழங்கப்படவில்லை. உட்கட்டமைப்பு வசதிகளில் குறிப்பாக போக்குவரத்துக்குரிய வீதிகள் முறையாக திருத்தப்படவில்லை. பொதுமக்களுக்கு போரினால் ஏற்பட்ட இழப்புக்கான இழப்பீடுகள்வழங்கப்படவில்லை.

மேலும் இராணுவத்தினர் சரணடைந்து தடுப்பு காவலில் வைக்கப்பட்டு பின்னர் நீதி மன்றின் ஊடாக விடுதலை செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆகியோருக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளிலும் போதிய கவனம் செலுத்தப்படவில்லையென்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியமரப்பட்ட பகுதிகளில் சர்வதேச நிதி நிறுவனங்களின் நிதியுதவி மற்றும் அரசு நிதி ஒதுக்கீட்டின் கீழ் வீதிப் புனரமைப்பு உட்பட உட்கட்டமைப்பு [illegible] கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் புனர்வாழ்வு மற்றும் வாழ்வாதார உதவிகள் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்களில் எவரையும் அரசு புறக்கணிக்கவில்லை. கிடைக்கின்ற உதவித் திட்டங்களுக்கமைய அனைவருக்கும் படிப்படியாக உதவிகள் வழங்கப்படும் என்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அப்படியிருந்தும் மீளக்குடியமர்ந்து ஒரு வருடம் கழித்த நிலையிலும் அப்பகுதி மக்களுக்கு முழுமையான எந்த உதவிகளும் கிடைக்கவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் சம்பளத்தை உயர்த்த வழிசெய்யுங்கள் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் உருக்கம்

மஸ்கெலியா, மே 21

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தப் பேச்சுகள் நடைபெற்றுவரும் இந்த நேரத்தில், தமது பெற்றோரின் சம்பளத்தை உயர்த்துவதற்கு ஜனாதிபதி உத்தரவிட வேண்டும் என தொழிலாளர்களின் பிள்ளைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் தமது இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சுமார் பத்தாயிரம் தபாலட்டைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பும் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

ஹட்டன் சமூக சேவைகள் மன்றத்தினூடாக இந்தத் தபாலட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

''எங்களது பெற்றோரின் சம்பளம் மிகவும் குறைவு. அதைக் கொண்டு அன்றாட வாழ்க்கையைக் கூடக் கொண்டு செல்ல முடியவில்லை. இதனால் எமது கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எமது பெற்றோரின் நாளாந்தச் சம்பளத்தை இன்றைய வாழ்க்கைச் செலவுக்கேற்ப உயர்த்திக் கொடுக்க முதலாளிமார் சம்மேளனத்துக்கு ஜனாதிபதி உத்தரவிடவேண்டும்'' என்று பிள்ளைகள் கோரியுள்ளனர். (உ-ச)

# அம்பாறை ஆதார வைத்தியசாலைகளில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகளை நிறுவுக

## தேசிய முஸ்லிம் கவுன்ஸில் கோரிக்கை

அம்பாறை, மே 21

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஆதார வைத்தியசாலைகளில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தேசிய முஸ்லிம் கவுன்ஸில் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களிலும் ஆதார வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன. எனினும் ஒரு வைத்தியசாலையில் கூட இதுவரை சிறுநீரக சிகிச்சைப்பிரிவு ஏற்படுத்தப்படவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும் என முஸ்லிம் கவுன்ஸில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

''இந்தப் பகுதிகளில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தூர இடங்களுக்குச் சென்றே சிகிச்சை பெறவேண்டியுள்ளது. இதனால் இவர்கள் பல்வேறு இடர்பாடுகளையும் பெரும் பணச் செலவையும் எதிர்நோக்கி வருகின்றனர். அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசங்களில் அமைந்துள்ள ஆதார வைத்தியசாலைகளில் சகல வசதிகளும் கொண்ட சிறு நீரக சிகிச்சைப் பிரிவுகளை ஏற் படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும்'' - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ச)

# செயலிழந்துள்ள வீதி விளக்குகளை புனரமைக்க துரித நடவடிக்கைகள்

மட்டக்களப்பு,மே21

அட்டாளைச்சேனை பிரதேச நிர்வாகப் பிரிவில் செயலிழந்துள்ள வீதி மின் விளக்குகளைப் புனரமைப்பதற்கான அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை நிர்வாகப் பிரிவில் நீண்ட காலமாகச் செயலிழந்துள்ள வீதி மின் விளக்குகள் குறித்து வினவிய போதே தவிசாளர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

''அட்டாளைச்சேனை பிரதேச சபைக் கூட்டத்தில் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி, வீதி மின் விளக்குகள் பொருத்துதல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

புதிய வீதி மின்விளக்கு கொள்வனவுக்கு ரூபா 9 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்றார் அவர். (உ-ச)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பொன்னையா விஸ்வலிங்கம்

(கணுக்கேணி கிழக்கு, முள்ளியவளை)

மலர்வு 17.08.1921

உதிர்வு 21.04.2011

நாள்கள் சென்றாலும் அப்பா
உங்கள் நினைவுகள்
ஓயாத அலைகளாக மோதுதப்பா
எம்மோடு இருந்த காலங்களில்
எமக்காக உங்களை அர்ப்பணித்தீர்கள்
மீண்டும் உங்கள் அன்பையும்
அரவணைப்பையும் அறிவுரைகளையும்
கேட்கும் காலம் கிடைத்திடுமா என்று
ஏங்குகின்றோம், தவிக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
வி.சிவகுமார்
(மகன் - லண்டன்)

(4400)

# அக்கரைப்பற்று வீதிகள் 'காப்பெற்'றாக மாறும்

மட்டக்களப்பு,மே21

அக்கரைப்பற்று மாநகரசபை நிர்வாகப் பிரிவிலுள்ள உள் வீதிகள் காப்பெற் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இது தொடர்பாக ஆராயும் உயர்மட்ட அதிகாரிகளின் கூட்டமொன்றும் அக்கரைப்பற்று மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

மாநகர முதல்வர் அதாஉல்லா அஹமட்சக்கி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை, உலக வங்கியின் திட்டப் பணிப்பாளர் சந்திரதாஸ், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர், ஏ.கருணநாதன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம்.றிஸ்வி, பிரதி முதல்வர் எம்.எம்.எம். நிஸாம் உட்படப் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தப் பணியை உடனடியாக ஆரம்பித்து எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னர் நிறைவு செய்வதற்கான சாத்தியங்கள் குறித்தும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் வீதிகளில் மேலதிக மழை நீர் தேங்கி நிற்பதற்கு வாய்ப்புக்கள் இருக்காது.

அக்கரைப்பற்று பிரதேசத்தின் எந்தவொரு இடத்திலும் மழை நீர் தேங்காது வடிகால்கள் வலையமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ள வீதிகளின் அகலத்தைப் பொறுத்து காப்பெற் வீதி அமையவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கிழக்கு பல்கலைக்கழக மாணவன் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,மே 21

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிபாளையம் பிரதேச வீடொன்றில் இளைஞன் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்தில் இரண்டாம் வருடம் கற்று வந்த நாகராசா சபேஷ்ரூபன் (வயது-23)என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் மயில்வாகனம் மகேந்திரராஜா

தோற்றம் 02.02.1953

மறைவு 22.04.2011

கடந்த 22.04.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. (49,19,25) -குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை ஜோண் குலசேகரன்



குளமங்கால், மல்லாகம் புனித பிரான்சீஸ் சவேரியார் ஆலய பங்கைச் சேர்ந்தவரும் தற்போது இத்தாலியில் வசிப்பவருமான ஜோண் குலசேகரன் 19.05.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - ஞானசோதி தம்பதியரின் இரண்டாவது மகனும் ரெலின் ஸ்ரீமதியின் அன்புக் கணவரும் ஞானசேகரன், சந்திரசேகரன், குமாரசேகரன், ராஜசேகரன், றட்னசேகரன், திலகஜோதி, புனிதஜோதி, வசந்தஜோதி, அமலஜோதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் எமில் ஜேம்ஸ், தேவதாசன், பெர்னடெற், A.V.ஆனந்தன் ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21.05.2011) சனிக்கிழமை இத்தாலியில் நடைபெறும். அதே தினம் இன்று காலை குளமங்கால் சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இரங்கல் நிகழ்வுகள் அவரது குளமங்கால் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால்,
மல்லாகம். (4456)

தகவல்:
A.V.ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினப் படுகொலைக்கு இந்திய அரசும் பொறுப்பு

## மட்டு. மாவட்ட எம்.பி. யோகேஸ்வரன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மே 21

ஈழத்தமிழினம் மீதான படுகொலைகளுக்கு இந்தியாவும் காரணம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியத் துக்க நாளின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் உள்ள சக்தி இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:-

2009 ஆம் ஆண்டு மேமாதம் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை ஐக் கிய நாடுகள் சபையே ஒப்புக் கொண்டிருக்கின்றது.

இந்தியா உட்பட இன்னும் பல நாடுகளின் உதவியுடன் இலங்கை அரசு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களைப் பொதுமக்கள் மீது மேற்கொண்டமையால் தான் அதிக மனிதப்படுகொலைகள் அங்கு இடம்பெற்றன.

எனவே இந்தப் பேரவலமான படுகொலைகளுக்கு இந்தியாவும் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு உண்டு.

தமிழ்நாடு முதல்வராகத் தெரிவாகியுள்ள செல்வி ஜெயலலிதா ஈழத் தமிழர்களுக்கு விடிவு கிடைக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் - என்றார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இன்றைய நாளை வாழ்க்கையில் எந்த ஒரு தமிழனாலும் மறக்கமுடியாது; அப்படி மறந்தால் அவன் தமிழனாக இருக்க முடியாது.

போரில் எண்பதாயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது தற்போது உறுதியாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஐ.நாவின் அறிக்கையிலும் இது தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகள் விசாரிக்கப்படவேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இதில் எந்தவொரு மாற்றுக் கருத்துக்கும் இடம் இல்லை.

அன்று கொல்லப்பட்ட பொது மக்கள், போராளிகளின் ஏக்கம் அவர்களின் கனவு நிறைவேற வேண்டும் என நாம் இன்று பிரார்த்தனை செய்கின்றோம்.

ஆனால் இந்த அஞ்சலிக் கூட்டத்தைக் கூடத் தகுந்த முறையில் செய்ய முடியாமல் நாம் இன்று உள்ளோம். எனவே உயிர் நீத்த அந்த உறவுகளின் ஏக்கம், எதிர்பார்ப்பு நிறைவேற நாம் அனைவரும் இன்று சபதம் எடுப்போம்- என்றார். (உ-ச)

### ஆர்ப்பாட்டம்.....



வெருகல் துவாரகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைக் கண்டித்து பெற்றோர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்தப் பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் தங்களது பாடசாலைக்கு இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பட்டினிப் போர் நடத்திய தேரர் ஆஸ்பத்திரியில்

திருகோணமலை,மே21

மதுபான நிலையங்களுக்கு அனுமதி வழங்குவதை அரசு நிறுத்த வேண்டும் என கோரி கடந்த புதன்கிழமை தொடக்கம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த சேருவில ரஜமகா விகாராதிபதி சரண கீர்த்தி உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடற்படைப் படகு மூலம் அவர் திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்டு, பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் இரவு அவரது உடல் நிலை மோசமடைந்ததாக அதிகாரிகள் கூறினர்.

வைத்தியாலையில் தான் உள்ளபோதிலும் தற்போதும் உண்ணாவிரதத்தைத் தொடர்கிறார் என்று தேரர் தெரிவித்தார். (உ-ச)

# வேலைப் பிரிப்பில் இனப் பாகுபாடா?

## களுத்துறை தோட்ட தொழிலாளர்கள் முறையீடு

களுத்துறை, மே21

களுத்துறை மாவட்டத்திலுள்ள ஒரு சில தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும்போது இனப்பாகுபாடு காட்டப்பட்டு வருகின்றது என தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் காலையில் தொழிலாளர்கள் ஒன்றுகூடும் பிரட்டுக்களம் எனப்படும் வேலைகளைப் பிரித்துக் வழங்கும் இடத்திலேயே இவ்வாறான பாகுபாடு காட்டப்படுகின்றன எனத் தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.சம்பந்தப்பட்ட தோட்டங்களின் நிர்வாக அதிகாரிகள் வேலைகளைப் பிரித்து வழங்கும்போது தமிழ்த் தொழி லாளர்களுக்கு கஷ்டமான வேலைகளையும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு சுலபமான வேலைகளையும் வழங்குகின்றனர் எனத் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் தட்டிக் கேட்ட வேண்டிய தொழிற் சங்கவாதிகள் தோட்ட நிர்வாகங்களுக்கு சார்பாக நடந்து கொண்டு மௌனம் காத்து வருகின்றனர் என விசனிக்கும் தொழிலாளார்கள், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோருகின் றனர். (உ-ச)

# நுவரெலியா மாவட்ட இளைஞர்களுக்கு இலவசமாக சாரதி அனுமதிப் பத்திரம்

நுவரெலியா, மே 21

மத்திய மாகாணசபை உறுப்பினர் ஜயரத்ன திஸாநாயக்கவின் பன்முகபடுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து நுவரெலியா மாவட்ட இளைஞர்களுக்கு இலவசமாக சாரதி அனுமதிபத்திரங்களைப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வாகனப் பயிற்சிகளை இலவசமாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக மாவட்ட இளைஞர் கழகத்தின் உறுப்புரிமை பெற்றவர்களில் பத்துப் பேருக்கு பயிற்சியும், சாரதி அனுமதிப் பத்திரமும் பெற்றுக் கொடுப்பதற்கென மத்திய மாகாணசபை உறுப்பினர் ஜயரத்ன திஸாநாயக்க 75,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

# பாடசாலைக்கு கொங்கிறீட் பாதை

களுத்துறை, மே 21

ஹொரணை கல்வி வலயத்தின் கீழ்வரும் கீக்கினியாகந்த தமிழ் வித்தியாலயத்திற்கு பெருந்தெருக்கள் மற்றும் துறைமுக பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவலவின் வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 9 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு பாடசாலைக்கு 242 அடி நீளமான புதிய கொங்கிறீட் வீதி அமைக்கப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு மண்சரி வினால் பாதிக்கப்பட்ட இந்தப் பாடசாலைக்கு வேறு இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு கோடி 20 லட்சம் செலவில் அங்கு புதிய மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுக் கடந்த மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் இங்கு பிரதான வாயிலொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

(உ-ச)

# இலவசமாக ஒரு 'கப்' பால்

நுவரெலியா, மே 21

நுவரெலியா மாவட்ட பெருந்தோட்டங்களில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் தினமும் ஒரு கப் பால் இலவசமாக வழங்குவதற்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஏற்பாடு செய்துள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிக் குழந்தைகளை இரத்த சோகை ஆபத்திலிருந்து பாதுகாக்கும் நோக்குடனேயே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அம்பகமுவ, கொத்மலை, வலப்பனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த போஷாக்குத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் இந்த வேலைத் திட்டம் கொண்டு செல்லப்படும் என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார். (உ-ச)

# துப்பாக்கி முனையில் பஸ்ஸில் கொள்ளை

அம்பாறை,மே21

கொழும்பிலிருந்து அம்பாறை நோக்கி வந்த பயணிகள் பஸ்ஸொன்றினுள் துப்பாக்கி முனையில் நடத்துநரிடமிருந்து பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது என தனமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுத் துப்பாக்கிகளுடன் பஸ்ஸில் ஏறிய நால்வர் சாரதி மற்றும் நடத்துநர்களைப் பயமுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்தனர் என்கிறது பொலிஸ். கொள்ளையடிக்க வந்த நால்வரும் தப்பிச் சென்றுவிட்டனர்.

இது தொடர்பான விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-ச)

# மரமுந்திரிகை செய்கை மட்டக்களப்பில் மீண்டும்

மட்டக்களப்பு,மே21

மட்டக்களப்பில் அழிந்து போயுள்ள மரமுந்திரிகைச் செய்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக ஆராய்ந்து நவீன முறைகளை அறிமுகப்படுத்திக் கொடுப்பதற்காக சிறு பயிர்கள் அபிவிருத்தி மற் றும் ஊக்குவிப்பு அமைச்சர் ரெஜினோல்ட் குரே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்புக்குச் சென்றுள்ளார்.

இவர் மாங்கேணி, புதுக்குடியிருப்பு, கிரான், கும்புறுமூலை உள்ளிட்ட பல பிரதேசங்களைப் பார்வையிட்டதுடன் மரமுந்திரிகைச் செய்கையாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடந்த காலத்தில் 40ஆயிரம் ஏக்கர் மரமுந்திரிகை செய்கை பண்ணப்பட்டபோதும் இப்போது 8ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மாத்திரமே மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படுவதாக மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றார் பிரதி அமைச்சர். (உ-ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
நெடுநாள்களாக மறைத்து வைத்திருந்த ரகசியத்தை மற்றவர்களிடம் சொல்வீர்கள். வேலையாள்களால் எதிர் பாராத தொல்லைகளைச் சந்திக்கலாம். நீண்ட நாள் ஆசையொன்று எளிதில் நிறைவேறலாம். கோயில் தொடர்பான காரியங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவு செய்வீர் கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**இடபம்:**
தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய கடன் மிகுதி கள் வராமல் இழுத்தடிக்கலாம். புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சொல்வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். மற்ற வர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். உங் களிடம் உதவி பெற்ற சிலரே உதாசீனமாக நடந்து கொள்ளலாம்.

**மிதுனம்:**
புதுமையான அனுபவங்களைப் பெறலாம். கல கலப்பு, உற்சாகமாக செயற்படுவீர்கள். வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடக்கலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத் துச் செல்வீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள்.

**கடகம்:**
நீங்கள் நேரில் சென்று முடிக்க நினைத்த வேலை ஒன்றை மற்றொருவர் மூலம் முடிக்கலாம். பண விட யங்களில் சிலர் உங்களுக்காக பிணை கொடுக்கலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். தந்தை வழியில் எதிர்பாராத உதவி கிடைக்கலாம்.

**சிங்கம்:**
உறவினர்கள் சிலரைச் சந்தித்துப் பழங்கதைகள் பேசுவீர்கள். சிறிய தவறு ஒன்றுக்காகப் பெரியளவில் வருத்தம் அடையலாம். திட்டமிட்ட காரியங்களில் மட்டு மின்றித் திட்டமிடாத காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். முக்கியமான ஆலயங்களுக்கு சென்று வழிபாடு நடத்தலாம். சிலரி டம் சாமர்த்தியமாகப் பேசி அவர்களின் நட்பைப் பெறுவீர்கள்.

**கன்னி:**
உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கை நிறைவேறும். நண்பர்கள் சிலர் உங்களிடம் யோசனை கேட்கலாம். சிலர் மீது கடும் கோபம் ஏற்பட்டாலும், அதை வெளிக்காட்டிக் கொள் ளாமல் நடந்து கொள்வீர்கள். பிள்ளைகள் விரும்பிய பொருள் களை வாங்கிக் கொடுப்பீர்கள். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம்.

**துலாம்:**
நல்லவர், கெட்டவர் எனப் பார்க்காமல் நாடி வந்த வர்களுக்கு உதவி செய்யும் நாள். வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். குறுக்கு வழி சிந்தனைகளை விரட்டி நேர்வழியில் செயற்பட முற்படுவீர்கள். மாமன், மைத்துனர்களின் அன்பான உபசரிப்புகளுக்கு ஆள்படலாம். தொழில் ரீதியான பணவரவு களைப் பெறலாம்.

**விருச்சிகம்:**
மற்றவர்களுக்காக சில வேலைகளைச் செய்வீர் கள். வீட்டுச் செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ற பணவரவுகள் வரலாம். நோய் உபாதைகளைத் தவிர்க்க, எதையும் அளவுக்கு அதிகமாக சாப்பிட வேண்டாம். நினைத்த காரியங்களை முடித்துக் கொள்வதில் சிறு தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். சிலருடன் வாக்கு வாதங்களில் ஈடுபடலாம்.

**தனுசு:**
வெறுப்பு, விரக்தி விலகி சந்தோஷம் குடிகொள் ளும் நாள். காலையில் வரும் என நினைத்த பண வரவு ஒன்று மாலையில் வரலாம். உங்களிடம் வாக் குக் கொடுத்தவர்கள் அதை காப்பாற்றிப் பெருமை சேர்ப்பர். பிள்ளைகள் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லிப் பெருமை அடைவீர்கள். எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**மகரம்:**
குடும்ப உறுப்பினர்களுக்கு நல்ல ஆலோசனை சொல் வீர்கள். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வியாபாரிகள் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். நீண்ட நாள்களாக உங்களுடன் இருந்த சில ரைப் பிரிய நேரிடலாம். சில விடயங்களில் தீவிரமாக இறங்கி விட் டுப் பின்னர் யோசிக்கலாம். மாற்று மதத்தினர் அனுகூலம் உண்டு.

**கும்பம்:**
எதிலும் தெம்பு, தன்னம்பிக்கையுடன் செயற்படு வீர்கள். எதிர்பாராத பணஉதவிகள் கிடைக்கலாம். வீண் பழிகள் அகன்று பாராட்டுக்களைப் பெறலாம். சுபச் செய்திகள் வீடு தேடி வரும் நாள். சில வேலைகளைக் கால தாமதமாக ஆரம்பித்தாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். இலாப நட்ட கணக்கு பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள்.

**மீனம்:**
சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள் வர். எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் வந்து சேரும். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். நாளைய சில காரியங்களுக்காக இன்றே முன்னேற்பாடு செய்வீர்கள். தனிமையில் இனிமை காண முற்படுவீர்கள்.

# அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மூலம் மாற்றம் வரும் அறிகுறி

பி.பி.சி. செய்தியாளர் Charles Haviland கொழும்பில் இருந்து எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

இலங்கை அரசு தனது எதிரிகளான பிரிவினைவாத தமிழ்ப் புலிகளைத் தோற்கடித்ததன் மூலம் பல உயிர் களைப் பலியெடுத்த ஓர் உள்நாட்டுப் போர் நிறைவுக்கு வந்து இரண்டாண்டு கள் ஆகிவிட்டன.

இலங்கையில் 26 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்ற இனங்களுக்கிடையிலான இந்த கொலை வெறி யுத்தம் அரங்கேறியிருந்தது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், சிறுவர் ஆள் கடத்தல், சர்வாதிகாரம் போன்றவற்றில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருந்தனர்.

மறுபக்கத்தில், மனித உரிமை மீறல்கள், ஆள்கள் காணாமற்போதல் போன்ற குற்றங்களில் சிங்கள ஆட்சியாளர்கள் ஈடுபட்டனர்.

யுத்தம் முடிவுற்று இரண்டாண்டுகள் நிறைவுற்ற நிலையில் இலங்கைத் தீவில் சமாதானமும் அமைதி யும் நிலவுகின்றனவா?

இவ்வாறான கேள்விகள் இன்று ஆயிரக் கணக்கானோர் மனங்களில் குடிகொண்டுள்ளன.

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் மைதானத்தில் கூடைப்பந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அதன் ஒரு பகுதி கடந்த காலத்தை நினைவுபடுத்துவ தாக அமைந்திருந்தது.

தமிழ்ப் புலிகள் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் அடையாளமாக அது அமைந்திருந்தது. இரு base-ball மட்டைகள் கல்லில் செதுக்கப்பட்டிருந்ததை அந்தப் பாடசாலை மைதானத்தின் ஒரு மூலையில் பார்க்கலாம்.

''2008 பெப்ரவரி 3 அன்று குண்டுத் தாக்குதல் ஒன்றில் டி.எஸ்.எஸ்.கல்லூரியின் baseball அணி யைச் சேர்ந்த 07 மாணவர்களும், அவர்களுக்கான பயிற்றுவிப்பாளரும் கொல்லப்பட்டதை நினைவு கூரும்'' முகமாகவே இந்த நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது.

தமது 17 மற்றும்18 வயதுகளில் சாகடிக்கப்பட்ட இந்த இளம் குருத்துக்களின் baseball அணிக்கு சம்பா டீ சில்வா என்ற பெண் ஆசிரியையே பொறுப்பாக இருந்தார்.

ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அந் தக் குண்டுத் தாக்குதலில் ஒரு தமிழ் மாணவன், ஒரு முஸ்லீம் மாணவன் மற்றும் 05 சிங்கள மாண வர்களுடன் தனது சக ஆசிரியரும் கொல்லப் பட்டுவிட்டார் என்ற செய்தியைக் கேட்ட அந்தக் கணம் நினைவு கூர மிகக் கடினமானது என சம்பா டீ சில்வா கூறுகிறார்.

''உண்மையில் எனது உணர்வுகளைச் சொல் வது என்பது மிகவும் கடினமானது. ஏனெனில் சிறுவர்களாக இருந்த அவர்களுக்கும் எனக்குமான உறவு விளையாட்டின் நிமித்தம் ஆரம்பமாகியது. அவர்களின் இழப்பு என்னைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஆனால் தற்போது புலிகள் அழிக் கப்பட்ட பின்னர் நாம் மிகவும் சந்தோசமாக இருக் கிறோம். ஏனெனில் இனிவருங் காலங்களில் பயங் கர்வாதச் செயல்களை நாம் சந்திக்கத் தேவை யில்லை'' என்கிறார் ஆசிரியை.

இரு ஆண்டுகளின் முன்னர் போர் ஓய்வுக்கு வந்ததை அடுத்து பெரும்பாலான இலங்கையர் கள் மிகவும் மகிழ்வுடன் வாழ்கிறார்கள். ஆனால் சிலர் தற்போதும் இது தொடர்பாக எதுவும் சொல்லத் தோன்றாதவர்களாக உள்ளனர்.

கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் அதிகம் நெருக்கமாக இருந்தவர்கள் தற்போது தனது நிலைப்பாட்டைத் திருத்திக் கொண்டதுமான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் பின்வருமாறு கூறுகிறார்.

''போர் ஓய்வுக்கு வந்தது மிகவும் வரவேற் கத்தக்க விடயமே. ஆனால் வட கிழக்குப் பகுதி களில் வாழும் தமிழ் மக்களின் மனங்களில் உள்ள வடுக்களும் காயங்களும் இன்னமும் ஆற்றப் படாத ஒன்றாகவே காணப்படுகின்றன.

பலர் தமது பிள்ளைகளை, பெற்றோரை, சகோ தரர்களை இழந்துள்ளனர். அவர்களது துன்பம் தொடர் கதையாகவே உள்ளது'' என்று குறிப் பிட்டுள்ளார்.

''இன்னும் பலர் தமது உறவுகள் இன்னமும் உயிருடன் உள்ளனரா அல்லது இறந்துவிட்டனரா என்ற உண்மை நிலைப்பாடு தெரியாமல் அவர் களுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காத் திருக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க ஆயிரக்கணக்கான மக்கள் தமது அங்கங்களை இழந்தும் வாழ்கின்றனர். உறைவிட வசதிகளற்று இந்த மக்கள் நிர்க்கதி யாக்கப்பட்டுள்ளனர்'' என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இரு தரப்புக் குற்றங்களையும் உள்ளடக்கிய அறிக்கை ஒன்று ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான்கிமூனின் உறுதிப்பாட்டுடன் கடந்த மாதம் வெளியிடப் பட்டிருந்தது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சில பேரதிர்ச்சியைக் கொடுப்பதாகவும் உள்ளன.

தமது கட்டுப்பாட்டில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற மக்கள் புலிகளால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வைத்திய சாலைகள் மீது படையினர் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான உண்மைத் தன்மை விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று அனைத்துலக மனித உரிமைச் சபை அறிவித்துள்ளது.

''தமிழர்களின் அவலத்துக்குக் காரணமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உண்மையான குற்றவாளிகள் யாரென்பது கண்டு பிடிக்கப்பட வேண்டும். அவ்வாறு அவர்கள் அடையாளம் காணப்படாத சந்தர்ப்பத்தில் தமிழர்களுக்கான எந்தவொரு இணக்கப்பாட்டு முயற்சிகளும் வெற்றியைத் தரமாட்டாது'' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஐ.நாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்தவொரு பொது மக்களையும் படையினர் கொல்லவில்லை என்று அறிவித்துள்ளார்.

வெப்பமான மாலை நேரப் பொழுதில், புத்தபகவான் முக்தி பெற்று 2600 ஆண்டுகள் நிறைவுற்ற நாளைக் கொண்டாடும் நோக்குடன் ஆயிரக்கணக்கான மக்கள் கொழும்பு மாநகரில் பேரணி ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதில் நடனமாடுபவர்கள், மாணவர்கள், மேளம் அடிப்பவர்கள், புத்த பிக்குகள் மற்றும் கடற்படையினர் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்கள மக்களே பெரும்பான்மையாகக் கலந்துகொண்டிருந்தனர். பௌத்த தேசிய வாதத்தைப் பெற்றுத் தந்த யுத்த வெற்றியைக் கொண்டாடுவதாகவும் இது அமைந்திருந்தது.

ஐ.நாவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு மீதான குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் இல்லை என்று இந்தப் பேரணியில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

''நாம் எந்தவொரு குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை என்று இலங்கை வாழ் மக்கள் நம்புகிறார்கள். நாம் எமது நாட்டுக்கு அமைதியைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். மிக ஆபத்தான பயங்கரவாதக் குழு தோற்கடிக்கப்பட்டுவிட்டது.

**போர் ஓய்வுக்கு வந்தது மிகவும் வரவேற்கத்தக்க விடயமே. ஆனால் வட கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் மனங்களில் உள்ள வடுக்களும் காயங்களும் இன்னமும் ஆற்றப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றன. பலர் தமது பிள்ளைகளை, பெற்றோரை, சகோதரர்களை இழந்துள்ளனர். அவர்களது துன்பம் தொடர் கதையாகவே உள்ளது.**

இது சிங்களவர்களுக்கோ அல்லது அரசுக்கு மட்டுமோ கிடைத்த வெற்றியாகப் பார்க்கப்படவில்லை. தமிழ்த் தலைவர்கள் அவர்களது சொந்த மக்களாலேயே கொல்லப்பட்டு விட்டனர். நாங்கள் நம்பிக்கையையும் செழுமையையும் கொண்டுவருவோம்'' என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

''மக்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த அச்சப்படுகிறார்கள். இறுதிக் கட்ட யுத்தத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பதை எம்மால் வெளிப்படுத்த முடியாமல் உள்ளது'' என்று மனித உரிமை சட்டத்தரணி லக்சன் டயஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் ஆசிரியை சம்பா டீ சில்வா, தாம் வடக்கில் உள்ள மாணவர்கள் மத்தியில் baseball ஐ அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து வருவதாகவும் இது வரை இரு யாழ் மாவட்ட கல்லூரிகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுடன் இது தொடர்பாகக் கலந்தாலோசித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

''இது ஒரு நட்பு ரீதியான ஓர் ஏற்பாடாகும். ஏனெனில் தற்போது நாங்கள் நண்பர்கள்'' என்கிறார் ஆசிரியை.

இந்த பெண் ஆசிரியைப் போல் பலர் நட்புடன் வாழ வேண்டும் என்று நினைக்கின்றார்கள். ஆனால் தாம் பெற்ற கசப்பான அனுபவங்களை மறப்பதற்கு நீண்ட நாள்கள் தேவை என பலர் நினைக்கிறார்கள்.

தற்போது அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இந்தச் சிறிய நாட்டில் ஏதோ ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான அறிகுறியாக உள்ளது.

(நன்றி: புதினப்பலகை)



# நான் நான் என்று ஏன் மார் தட்டுகிறோம்



கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது இந்த இருபது வருடங்களில் பெரிதாக எனக்கு என்ன செய்து விட்டீர்கள்...? ஏதாவது சந்தோஷப் படும்படியாக வாங்கித் தந்தது உண்டா?'' என்று பொருமுகிறாள் மனைவி. ''உன் மனதில் கை வைத்துச் சொல்'' என்று கணவன் அலறுகிறான். ஒரு நிமிடம்! ஏன் நெஞ்சில் கை வைக்க வேண்டும் என்று யோசியுங்கள்;

மரணத்தால் கணவனைப் பிரிந்த துயரத்தில்அழுகிற மனைவி ''என்னைவிட்டுப் போய்விட்டீர்களே'' என்று அலறுகிறபோது 'என்னை' என்கிற பாவனைக்கு அடையாளமாக நெஞ்சில் அறைந்து கொள்கிறாளே ஏன்? கொஞ்சநேரம் யோசியுங்கள்.

'' நானா ஏமாற்றுகிறேன்?'' என்று வருந்துகின்ற நண்பன் நான் என்கின்ற போதெல்லாம் இதயத்தில் கை வைத்துக் பேசுவது ஏன்? சற்றுச் சிந்தியுங்கள்.

நான் என்னை என்கிற பாவங்கள் நெஞ்சுடன் தொடர்புடையவையா? மனித உணர்ச்சியின் மொத்த வடிவம், உணர்ச்சியின் மையப்புள்ளி நெஞ்சு. கோபம், வேகம், தாபம், காமம், கொடூரம், வஞ்சனை என்கின்ற உணர்ச்சிகளின் வேறுபாட்டைத் துல்லியமாக உணர்த்தும் சதைத்துண்டின் மையவட்டம் நெஞ்சு.

இதயத்தில் அன்பு, கருணை பாய்ச்சுபவர்கள் உலகெங்கும் அதை வழிந்தோட விடுவர் அநாகத நிலையில் உள்ளவர்கள். அநாகத நிலைவரை குண்டலினி மேல் எழுந்து இறங்குவது சுலபம். பலருக்கு இந்த நிலை வாய்க்கும். ஆனால் அநாகதம் கடப்பது என்பது சிலருக்கே சாத்தியம். காரணம் மூலாதாரம் சுவாதிஷ்டானம் என்ற இரண்டு கரங்களும் பஞ்ச பூதங்களோடு பூமியுடன் தொடர்புடையவை. மணிபூரகம், அநாகம் இரண்டும் தண்ணீருடன் தொடர்புடையவை. விசுக்கி காற்றுடனும் ஆக்ஞா நெருப்புடனும் சம்பந்தம் உடையவை.

மண்ணும் தண்ணீரும் கீழ் நோக்கிப் பாயும் வலிமை மிக்கவை. அநாகதம் கீழ் மேல் நிலைகளின் சங்கமம். இங்கிருந்து மனிதன் கீழ் நோக்கிப் பயணித்துக் கடவுளாவதும் உண்டு. எனவே கடவுள்; விலங்கு என்பதன் மையப் புள்ளியாக மனிதன் நெஞ்சைத் தட்டித்தட்டி நான் நான் என்று மார்தட்டிக் கொள்கிறான்.

விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ரம் என்று மேல்நோக்கிப் போய் விட்ட ஏசு, புத்தர், மகாவீரர், வள்ளலார் போன்ற மகான்கள் கூட அநாகதம் வரை கீழ் இறங்கி வந்து மனித நிலையில் நம்முடன் வாழ்ந்து அன்பு காட்டுவார்கள். அதைவிடக் கீழ் இறங்கி மணிபூரகம், சுவாதிஷ்டானம், மூலாதாரத்தில் இருந்து கீழான வாழ்வு வாழமாட்டார்கள்.

இதயத்தின் நான்கு அறைகளில் தனித்தனியாக நல்ல இரத்தமும் கெட்ட இரத்தமும் உண்டு. மொத்தமாகப் பார்த்தால் நல்லதும் கெட்டதும் சுமந்தது இதயம். நல்லது கெட்டதின் மையப்புள்ளியாக இதயம் விளங்குகின்றது. மருத்துவம் கடந்து ஆன்மிகமாக இதயத்தைக் கவனித்தால் நல்லது கெட்டது கலந்த மனிதனின் மையம் இதயம் என்பது தெளிவாகும். எவ்வளவு பொருத்தம் பார்த்தீர்களா?

நெருப்பாய் எரியும் ஞானத்தில் நிற்பவர்கள் கூட கருணை காரணமாக அநாகதத்தில் நின்று தண்ணீராய்க் குளிர்வார்கள். கருணை மழை பொழிவார்.

மூலாதாரம் முதல் அநாகதம் வரை உணர்ச்சி மையம். அநாகதம் முதல் துரியம் துரியாகீதம் வரை அறிவு மையம். எனவே அநாகதம் அறிவும் உணர்ச்சியும் சந்திக்கும் மையப்புள்ளி இதயம். கழிவுப் பொருள்கள் சுமந்த சுத்திகரித்து நல்ல இரத்தமாய் ஆக்கி உடம்பு முழுமைக்கும் அனுப்புகின்ற தசை இயந்திரம் தான் இதயம் அது.

விலங்கு நிலையில் இருப்பவர்களின் உச்சியாகிய மனித நிலையும் தேவ நிலையில் இருப்பவர்களின் கீழாகிய மனித நிலையும் ஹிருதயம் என்கிற அநாகத சக்கரத்தில் சந்திக்கின்றன.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் 49ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட பரிசுக் குலுக்கலில் வங்கியின் சுன்னாகம் கிளையில் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தங்க நாணயம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கிளை முகாமையாளர் சு.இராச மனோகரன் வெற்றியாளர்களான ஞானசேகரம் றஞ்சினி தம்பதியரிடம் பரிசைக் கையளிக்கின்றார். உதவி முகாமையாளர் சி.சிவகுமாரும் வங்கி உத்தியோகத்தர்களும் அருகில் உள்ளனர்.

# உயரிய சேவையை வழங்கும்போது சமூகத்தில் மதிப்பும் தானாக வரும்

## செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்

யாழ்ப்பாணம், மே 20

நாட்டுக்காவும் சமயத்துக்காகவும் சேவைகளை வழங்குபவர்கள் தமக்குக் கிடைக்கும் பாராட்டுக்களையும் கௌரவத்தையும் பெரிதாக நினைத்தால் உயர்வான நிலையை அடைய முடியாது. உயரிய சேவைகளை வழங்கும் போது அவர்களுக்குரிய மதிப்பும் கௌரவமும் தானாகவே கிடைக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயத்தின் தலைவரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபருமான செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி அம்மன் ஆலயத்தின் தர்ம கர்த்தா, நிர்வாக சபையினரின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க் கிழமை செஞ்சொற் செல்வரின் 50ஆவது அகவையை முன்னிட்டு அவரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆரம்ப காலங்களில் ஆலயங்களில் சொற்பொழிவை நிகழத்தும் போது எனக்கு கிடைத்த பரிசு 'காளாஞ்சி' மட்டும் தான். அன்று நான் அதனை நினைத்து வருத்தப்படவில்லை. தொடர்ந்து எனது முயற்சியில் ஈடுபட்டேன்.

அதன் பின் 500 இற்கும் மேற்பட்ட பட்டிமன்றங்களை நடத்தியுள்ளேன். லண்டன், அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளேன்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாய்கள் அனைத்தையும் சமூகப் பணிகளுக்காகவே பயன்படுத்தினேன். குறிப்பாக மகளிர் இல்லம், சிவபூமி மன விருத்திப் பாடசாலை, துர்க்கை அம்மன் ஆலயத்தின் அறிவாலயம், யாத்திரிகள் விடுதி என்பவற்றின் வளர்ச்சிக்கே இந்த நிதி பயன்படுத்தப்பட்டன.

சிவபூமி முதியோர் இல்லத்தில் ஏராளமான முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதுபோன்ற நற்காரியங்களைச் செய்வதற்கு எனது பேச்சாற்றலைப் பயன்படுத்தினேன்.

தொடர்ந்தும் நாட்டுக்காகவும் சமயத்துக்காகவும் சேவைகளை வழங்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் - என்றார். (ம-313)

# வடமாகாணத்திலுள்ள மூத்த கலைஞர்கள் பராமரிப்பு இன்றி ஒதுக்கப்பட்டு விட்டனர்

## இரா.செல்வழிவேல் கவலை தெரிவிப்பு

யாழ்பபாணம், மே 20

வடமாகாணத்திலுள்ள மூத்த கலைஞர்கள் பலர் பராமரிப்பு எதுவுமின்றி ஒதுக்கப்பட்டு விட்டார்கள் என்று கவலைப்படுகிறார் வட மாகாண மக்கள் கலை இலக்கிய அரங்கத்தின் தலைவர் இரா.செல்வவடிவேல்.

மூத்த கலைஞர்கள் பலரின் வாழ்வாதாரத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அவர்கள் அல்லல்பட்டு வருகின்றனர். அத்தகைய உதவிகளை வழங்குவதற்காகத்தான் 'வடமாகாண மக்கள் கலை இலக்கிய அரங்கம்' அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வடமாகாண மக்கள் கலை இலக்கிய அரங்கத்தின் அங்கம் அண்மையில் யாழ். நாவலர் கலாசாரமண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் மாநகர முதல்வர் மற்றும் பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இரா.செல்வவடிவேல் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தின் பாரம்பரிய கலை பண்பாடுகளை பேணுவது கலைஞர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இத்தகைய கலைஞர்கள் ஒவ்வொரு துறைகளுக்குள்ளும் உள்வாங்கப்படவேண்டும். பாரம்பரியக் கலைகள் என்றும் காக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கலைஞர்கள் முழுநேரமாகவும், பகுதிநேரமாகவும் சேவை புரிந்தாலும் இவர்களது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் ஏதும் முறையாக இல்லை.

இந்த நிலையில் கலைஞர்கள் முற்றுமுழுதாக தமது கலைத் தொழிலை கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்காக மாவட்ட ரீதியிலும் பிரதேச ரீதியிலும் உள்ள இளம் கலைஞர்களை ஒன்றுதிரட்டி பிரதேச ரீதியாகப் பயிற்சிப்பட்டறைகளை நடத்தி பாரம்பரிய கலைகளை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-313)

# இலக்கியப் போட்டி ஆக்கங்கள் அனுப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 20

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் இந்த வருடத்துக்கான தேசிய கலை இலக்கியப் போட்டிக்கு ஆக்கங்கள் அனுப்பும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஆக்கங்கள் அனுப்பப்படலாம் என்று பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. கடந்த 13 ஆம் திகதியே ஆக்கங்கள் ஏற்பதற்கு இறுதித் தினமாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ம-207)

# கலாவதியான பொருள்கள் விற்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 21

காலாவதியான பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 13 ஆம் திகதி யாழ் நகர் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது விற்பனை உரிமையாளர் ஒருவர் காலாவதியான பொருள்கள் மற்றும் சுட்டுத்துண்டு இல்லாத பொருள்களை விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினரால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து யாழ். நீதிமன்றம் இந்த அபராதத்தை விதித்தது. (ம-313)

# காத்தவராயன் சிந்து நடைக்கூத்து

வடமராட்சி, மே.21

ஜெயவசீகரனின் நெறியாழ்கையில் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து நாளை மறுதினம் திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு சக்கோட்டை பிள்ளையார் ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளது. (ம)

# வலிகாமம் வலய எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

யாழ்பபாணம், மே 20

வலிகாமம் வலயத்தில் நடந்த எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

**எழுத்து - தரம் - 4,5**

கஜலக்சி கிருபானந்தன் (மானிப்பாய் விவேகாந்தா வித்தியாலயம்), சானுஜா பாக்கியநாதன் (ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை), ஜனனி மதனமோகன் (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி).

**கட்டுரை - தரம் - 6,7**

ப.திவியா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ரூபிசா குலோந்திரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), துஷாந்தினி ஞானச்சந்திரன் (இளவாலை கன்னியர் மடம் ம.வி).

**கட்டுரை - தரம் - 8,9**

தே.உமையாழினி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), காருண்யா குணரத்தினம் (உடுவில் மகளிர் கல்லூரி), குணரட்னம் பிரதாப் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

**கட்டுரை - தரம் - 10,11**

விமலாம்பிகைபாகன் திவாகரன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ம.கோகுலசாயி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), து.மேதுஷா (தெல்லிப்பழை மகாஜன கல்லூரி).

**தமிழியற் கட்டுரை, இலக்கியம் - தரம் - 12,13**

தர்சிகா பஞ்சாபிகேசன் (இணுவில் மத்திய கல்லூரி), [illegible]ணுஜா பிலேந்திரன் (இளவாலை கன்னியர் மடம் ம.வி), துரைசிங்கம் வசிகரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

**இலக்கணம் - தரம் - 10,11**

கரிகரன் அகில்வேல் (சென் ஹென்றிஸ் கல்லூரி), ஜோன் பிரான்சிஸ் டண்ஸ்ரன் (சில்லாலை றோ.க.த.கபாடசாலை), கி.கோபிதா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி).

**இலக்கணம் - தரம் - 12,13**

சுலக்சனா சூரியகுமார் (சங்கானை சிவப்பிரகாச ம.வி), வ.மோகனரூபி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), தர்சினி நித்தியானந்தம் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**திறனாய்வு - தரம் - 10,11**

[illegible] (மானிப்பாய் இந்துக் கல்லூரி), வரதராஜா துவாரகன் (இணுவில் இந்துக் கல்லூரி) சு.தசாங்கன் (தெல்லிப்பழையூனியன்கல்லூரி).

**குறுநாடகம் - தரம் - 10,11**

ஜெ.கௌதமி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), சன்சிகா சதீஸ்கந்தராசா (ஏழாலை ம.வி), க.கௌசலை (அளவெட்டி அருணாசலம் வித்தி).

**குறுநாடகம் - தரம் - 12,13**

யசோதா இராசையா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), தர்சனா (ஜெயரத்தினம் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), திவ்யா மகேந்திரன் (சங்கானை சிவப்பிரகாச ம.வி).

**கவிதை - தரம் - 10,11**

டெனா இராகுலதேவன் (ஏழாலை சைவ மகாஜன வித்தி), கோ.சங்கீதா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), சுபாஜினி துதிகரன் (மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.கபாடசாலை).

**கவிதை - தரம் - 12,13**

கௌதமி யோகநான் (மகளிர் கல்லூரி), சுகன்ஜா டலிக்குமார் (சண்டிப்பாய் இந்துக்கல்லூரி), ச.சர்வகா (தெல்லிப்பழை மகாஜண கல்லூரி).

**சிறுகதை - தரம் - 10,11**

த.திலக்சன் (அளவெட்டி அருணாசலம் வித்தி), விதுஷா கிருபாகரன் (சங்கானை சிவப்பிரகாச ம.வி), சிதம்பரபாலினி கதிர்காமநாதன் (விக்ரோறியாக் கல்லூரி).

**சிறுகதை - தரம் - 10,11**

ரபிதா கண்ணதாசன் (இணுவில் இந்துக் கல்லூரி), நிந்துஜா வேல்முருகன் (பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), குணரட்ணம் பிரதீப் (மானிப்பாய் இந்துக் கல்லூரி). (ம-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளை வெளியிடுவேன்

## நான் ஊமையல்ல என்கிறார் பொன்சேகா

கொழும்பு,மே 21

''நான் ஊமையன் அல்லன்; மிக விரைவில் உண்மைகளை வெளியிடுவேன்'' என்று சீறியுள்ளார் இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கின் விசாரணைக்காக நேற்றுமுன்தினம் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார் பொன்சேகா.

நீதிமன்றிலிருந்து சிறைக்குத் திரும்புவதற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொண்டையில் ஏற்பட்டுள்ள அசௌகரியம் காரணமாக, தான் மௌனம் காக்க வேண்டி இருக்கிறது என்றார்.

தொண்டையில் ஏற்பட்டுள்ள வியாதி சுகமானதும் அனைத்து உண் மைகளையும் வெளியிடப் போகிறார் என்றும் அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். சரத்பொன்சேகாவின் தொண்டைமற்றும் நுரையீரலில் ஏற் பட்டுள்ள பிரச்சினைகளுக்கு



தேவையான மருத்துவ சிகிச்சையை அவர் பெற ஏற்பாடு செய்து கொடுக்குமாறு பணித்துள்ள நீதிமன்றம், எதிர்வரும் 23ஆம்திகதிவரை வழக்கை ஒத்திவைத்தது. (ச)

# 500 பிக்குகளுக்கு நேற்று அன்னதானம்

## ஜனாதிபதி வழங்கினார்

கொழும்பு,மே21

புத்தரின் 2,600 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 500 புத்த பிக்குமாருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை அன்னதானம் வழங்கினார். இதற்காக இந்தப் புத்த பிக்குகள் கொழும்பு கங்காராம விகாரையிலிருந்து அலரி மாளிகைக்குக் கால்நடையாகச் சென்றுள்ளனர்.

அன்னதானம் வழங்கும் நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச)

## பார்வை...



யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ளமையை நினைவுகூரும் முகமாக சிறைச்சாலையிலுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஜனநாயகத் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க, ஜயந்த கெட்டகொட, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சென்று பார்வையிட்டனர்.

# பிரிட்டன் தூதுவராக கிறிஸ் நோனிஸ்

கொழும்பு,மே 21

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராகப் பிரபல வைத்தியர் கிறிஸ் நோனிஸ் நியமிக்கப்படவுள்ளார்.

மக்வூட்ஸ் என்ற தனியார் துறை நிறுவனமொன்றில் உயர் பதவி வகித்துவரும் டாக்டர் நோனிஸ் விரைவில் தூதுவராக நியமிக்கப்படுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டனின் அரசியல் தலைவர்களுடன் நோனிஸ் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகிறார் என்பதால் அவர் இந்தப் பதவியில் நியமிக்கப்பட உள்ளார் என்று வெளிவிவகாரத்துறை



அமைச்சு தெரிவித்தது.

பிரிட்டனுக்கான இலங் கைத் தூதுவராகக் கடமையாற்றிய நிஹால் ஜயசிங்க பதவி விலகுவதால் அவரது இடத்துக்கு நோனிஸ் நியமிக்கப்பட உள்ளார். (ச)

# பெற்றோலிய களஞ்சிய துறையின் ஆலோசகர்கள் மூவர் பதவிநீக்கம்

## டீசல் மோசடியில் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 21

பெற்றோலிய களஞ்சியத் துறையில் ஒருகோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான டீசல் மோசடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் அங்கு வேலையாற்றி வந்த 3 ஆலோ சகர்கள் தற்காலிகமாகப் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவ ரும் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவால் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். முத்துராஜவெல பிரதேசத்தில் அமைந்துள்ள பெற்றோலிய களஞ்சியத்துறையில் 2005 - 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆவணங்களில் மாற்றங்களைச் செய்து இவர்கள் இந்த ஊழல் மோசடியில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# கற்றாக் நோயினால் 5 லட்சம்பேர் பாதிப்பு

## சுகாதார அமைச்சு விஷன் திட்டம் மதிப்பீடு

கொழும்பு,மே21

இலங்கையில் கற்றாக் நோயினால் ஐந்து லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் 'விஷன் 2020' வேலைத் திட்டம் மதிப்பிட்டுள்ளது. இந்த நோய்க்கு உள்ளாகியுள்ளவர்களில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேருக்கு இரு கண்களிலும் இந்த நோய் ஏற்பட்டு அவர்கள் பார்வையை இழந்திருக்கின்றனர் என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நாட்டில் கற்றாக் நோய்க்கு உள்ளாகி இருப்பவர்களில் பெரும் பகுதியினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் என்றும் தெரி விக்கப்படுகின்றது. இலங்கையில் கற்றாக் நோய்க்கு உள்ளாகி இருப்பவர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிப்பதற்காக சுகாதார அமைச்சு 'விஷன் 2020' வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த நோய் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நோயாளிகளுக்குச் சிறந்த சிகிச்சையைப் பெற்றுக் கொடுக்கவும், அவர்களுக்கு மீண்டும் கண் பார்வை கிடைக்கவும் இந்தத் திட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கண் சத்திர சிகிச்சை நிபுணர் சமிந்த அமரதுங்க தெரிவித்தார்.

# எத்தகைய தடை வந்தாலும் ராணுவப் பயிற்சி நிற்காது

## உயர் கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மே 21

எத்தனை தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமைத்துவ பயிற்சி வழங்கும் திட்டம் நிறுத்தப்படாது என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க அடித்துக் கூறினார்.

திட்டமிட்டபடி பயிற்சி வழங்கப்பட உள்ளதாகக் குறிப்பட்டுள்ள அவர், இராணுவ முகாம்களில் பயிற்சி நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டதனால் மட்டும் அது இராணுவ பயிற்சியாக அமைந்து விடாது எனவும் குறிப்பிட்டார்.

இத்தகைய பயிற்சிகளின் மூலம் மாணவர்களுக்கு ஒழுக்கத்தை கற்பிக்க முடியும் என்கிறார் அமைச்சர்.

எதிர்வரும் ஜூன் மாதம் 23ஆம் திகதி பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.



முதல் கட்டமாக பத்தாயிரம் மாணவர்களுக்கு 21 நாள் பயிற்சி வழங்கப்பட உள்ளது. (ச)

# போர்க் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பவே கூட்டமைப்புடன் பேச்சு நடத்துகிறது அரசு

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, மே 21

''குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சுகளைத் தொடர்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஒருபோதும் ஈடுபடாது. தமிழ் மக்களை அரசு ஏமாற்ற முயன்றால் பேச்சு மேசையிலிருந்து விலகவும் தயங்க மாட்டோம்.''

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

கடந்த புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய துக்கதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனது உரையில் அவர் தெரிவித்ததாவது:-

இன்று உலக நாடுகள் எமது பக்கம் திருப்பியிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை எம் மீது அக்கறை கொண்டு ஒரு தீர்வைப் பெற்றுத் தரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கையில் அதனைத் தட்டிப் பறிக்கும் முயற்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் பட்ட துன்பத்தை விடவும் அதிகமான துன்பத்தை எமது மக்கள் இன்று செட்டிகுளம் முகாமில் அனுபவித்து வருகின்றார்கள்.

நாங்களும் இந்த நாட்டில் சகல உரிமைகளுடனும் வாழ உரித்துடையவர்கள் என்பதைத்தான் திரும்பத் திரும்ப, எத்தகைய போராட்டங்களூடாகவும் சொல்கின்றோம்.

ஆயுத பலம் எம்மை விட்டு போய் விட்டதால் நாம் அடிமைப்பட்டு வாழ வேண்டும் என்ற நினைத்துவிடக் கூடாது.

ஐ.நா. அறிக்கைக்கு கூட்டமைப்பு ஆதரவளித்ததால் அரச தரப்பில் பேச்சில் கலந்துகொண்ட ஒரு பிரதான தலைவர் விலகிக்கொண்டார். பேரினவாத இனக்கட்சிகள் எல்லாம் இன்றைக்கு இந்த அறிக்கைக்கு எதிராக குரல்கொடுப்பதற்காக ஓரணியில் திரண்டு விட்டன.

ஆனால் எங்களிடம் ஒற்றுமை இல்லை. எமது பக்கத்திலும் ஒற்றுமை ஏற்பட வேண்டும்.

எப்படி ஐ.நாவிற்கு எதிராக பேரினவாதக் கட்சியினர் ஒற்றுமைப்பட்டுள்ளனரோ அதனைவிடவும் அதிகமாக நாம் ஒற்றுமைப்படவேண்டும்.

அடுத்த கூட்டம் எமது ஒற்றுமையை வெளிப்படுத்துகின்ற வகையிலே இருக்க வேண்டும்- என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயமான சுவாசம்



புனிதத் தன்மையான கருணையுள்ளம் படைத்த ஸ்ரீ ரவிசங்கர் உலகப்பிரசித்தி வாய்ந்த ஆன்மிகத் தலைவர். 'சுதர்சன கிரியா' என்ற ஒரு தனித்துவமான சுவாசச் செயன் முறையை உருவாக்கினார். இந்தச் சுவாசச் செயன்முறையானது எண்ணற்ற அளவிட முடியாத ஆனந்தத்தையும் அழுத்தமற்ற உள்ளம், ஆரோக்கியமான உடல் மற்றும் மலர்ச்சியான வாழ்க்கையையும் எமக்கு அளிக்கின்றது. வாழ்வின் ஆழமான இரகசியம் இந்தச் சுவாசச் செயன்முறையில் உள்ளார்ந்துள்ளது. இதனைப் பயிற்சியின் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். உலகில் 20 மில்லியன் மக்களுக்கு மேலாக வயது, பால், சாதி, சமய, பொருளாதார மற்றும் சமய அந்தஸ்து வேறுபாடின்றித் தங்களுடைய வாழ்க்கையை வாழும் கலைப்பயிற்சி மூலம் இளமையூட்டினார்கள்.

இந்தப் பயிற்சியின் தொடர் 1 ஆனது வாழும் கலைப்பயிற்சியின் முதலாவது பாகம். இந்தப் பயிற்சியானது எமது உடலிலுள்ள நச்சுப்பதார்த்தங்களைச் சுத்திகரிப்பதுடன் உடலில் ஆழமாகப் பதிந்த உடல், உள மற்றும் மன வெழுச்சியான தடைகள் என்பவற்றை உடலிலிருந்து அகற்றுவதுடன் எமது உடலையும் உள்ளத்தையும் ஒரு சீரான சுவாசச் செயன்முறை மூலம் ஒன்றிணைக்கின்றது. இந்தப் பயிற்சி 6 நாள்களில் பயிலக்கூடிய ஓர் இலகுவான ஆழமான பயிற்சி என்பதுடன் செயன்முறை ரீதியான ஆன்மிக அறிவைய்ும் ஆழமான தியானத்தையும் ஓர் உயிரோட்டமான தாக்க செயற்பாட்டின் மூலம் எமக்கு அளிக்கின்றது.

**பயிற்சியின் நன்மைகள்**

அழுத்தமற்ற சமாதானமான, அமைதியான உள்ளம், ஆரோக்கியமான உடல், சிறந்த நித்திரை, அளவு கடந்த ஆனந்தம், ஆர்வம் மற்றும் சுறுசுறுப்பான நிலை, தன்னிலை உணரும் நிலை, புதிய மலர்ச்சியான வாழ்க்கை, மன அழுத்தம், கவலை, அதிக ஆர்வம் என்பவற்றிலிருந்து விடுதலை, வீட்டிலும் வேலைத்தளத்திலும் ஒற்றுமையான உறவுநிலை, சிறந்த ஆக்கும் திறன், தெளிவான உணரும் திறன் மற்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் திறன், அதிகரித்த இயக்க சக்தி மற்றும் சகிப்புத்தன்மை, மற்றவர்களுக்கிடையேயான தொடர்பை அதிகரித்தல், கவனம், நம்பிக்கை மற்றும் கூடியளவு பொறுப்புக்களைக் கையாளும் திறன் அதிகரித்தல், கோபத்தை அடக்குதல், எதிர்மறையான தன்மையை இல்லாமல் செய்தல் என்பவற்றுக்குச் சிறந்ததாகும்.

**ஆராய்ச்சி**

''சுதர்சன கிரியா'' பற்றிய மருத்துவ ஆய்வு எமக்கு வெளிப்படுத்துவது யாதெனில், எமது உடலிலுள்ள அழுத்தத்துக்கு காரணமான Cortisol என்னும் Hormone இன் அளவைக் குறைக்கும். குருதியிலுள்ள Lactate என்னும் நொதியத்தின் அளவைக் குறைக்கும். எமது உடலிலுள்ள கூடாத கொலஸ்திரோலின் அளவைக் குறைப்பதுடன் நல்ல கொலஸ்திரோலின் அளவை அதிகரிக்கும்.

Prolactin என்னும் Hormone இன் அளவை அதிகரிக்கும். எமது உடலினுள் நடைபெறும் ஒட்சியேற்ற செயன்முறைக்கு எதிரான நொதியத்தின் அளவை அதிகரிக்கிறது. நிர்ப்பீடனத் தொகுதியைப் பலப்படுத்துகிறது. மனச்சோர்வை இல்லாமல் செய்கிறது.

# உங்களுக்குத் தெரிந்தவையா என்று பாருங்கள்...

நாம் எண்ணிப்பார்க்காத 20 பொதுவான உண்மைகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவற்றில் எவையெல்லாம் உங்களுக்குத் தெரிந்தவை எனப் பாருங்கள்.

* நீங்கள் மின்னல் தாக்கத்துக்கு உள்ளானால் உங்களுடைய உடல் 28,000 டிகிரி சென்டிகிரேட் வரை சூடாகிறது. இது சூரியனின் மேற்பரப்பை விட அதிக வெப்ப அளவு.
* இந்த உலகிலிருந்த அனைத்து டைனோசர்களும் அழிக்கப்பட்டுவிட்ட போதிலும் தேரை அல்லது பல்லியினுடைய இனம் அழிக்கப்படவில்லை. முதலைகள், ஆமைகள் போன்றவை பிழைத்துக்கொண்டதற்கான காரணமும் யாருக்கும் தெரியாது.
* ஹவாய் நாட்டவருடைய அகர வரிசையில் 12 எழுத்துக்கள் மாத்திரமே உள்ளன.
* நீங்கள் ஒவ்வொரு முறை தும்முகின்றபோதும் உங்கள் இதயம் ஒரு நொடி துடிப்பதை நிறுத்துகின்றது.
* விண்வெளியில் ஈர்ப்பு விசை இல்லாத காரணத்தால் விண்வெளி வீரர்களால் அழ முடியாது.
* ஹம்மிங் எனப்படும் பறவை மட்டுமே பின்புறமாகப் பறக்கக்கூடியது.
* நெருப்புக் கோழியினுடைய கண் அதனுடைய மூளையைவிடப் பெரியது.
* கரப்பான் பூச்சிகள் தலையில்லாமல் 9 நாள்கள் உயிர்வாழக் கூடியவை.
* செந்நாரைக்கு அதனுடைய தலை தலைகீழாக இருக்கும்போது மட்டுமே உணவு உட்கொள்ள முடியும்.
* தீப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டதற்கு முன்னமே தீமூட்டி (லைட்டர்) கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.
* வலது கைப்பழக்கமுடைய நபர்களை விட இடது கைப் பழக்கமுடைய நபர்கள் 7 ஆண்டுகள் குறைவான வாழ்நாளைக் கொண்டுள்ளனர்.
* அதிவேக கமராக்களைக் கொண்டு மழை நீர் கண்ணீர் வடிவத்தில் இல்லை என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
* 1985 மார்ச் மாதம் 15ஆம் திகதி தான் முதலாவது இன்டர்நெட் டொமைன் Symbolics.com என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டது.
* 1876ஆம் ஆண்டு அலெக்சாண்டர் கிராகம்பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்த முதல் மாதத்தில் 6 தொலைபேசிகள் மட்டுமே விற்கப்பட்டன.
* 7.5 மில்லியன் டொலர்களுக்கு விற்கப்பட்ட மிக விலையுயர்ந்த டொமைனாக தற்போது Business.com உள்ளது.
* சிக்காக்கோ பல்கலைக்கழகத்தால் 1907ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் மஞ்சள் நிறம் தான் மிக எளிதாக அடையாளப்படக்கூடியது என கண்டுபிடித்தனர்.
* இந்திய ரயில்வேத் துறைதான் உலகின் மிக அதிக எண்ணிக்கையுடைய தொழிலாளர்களைக் கொண்டுள்ளது. இதில் 1.6 மில்லியன் பேர் தொழில்புரிகின்றனர்.
* Happy Birthday பாடலின் சொந்தக்காரர் வார்னர் செப்பல். ஒவ்வோராண்டும் ஒரு மில்லியன் டொலர்வரை இந்தப் பாடலை வர்த்தகப் பாவனைக்குப் பயன்படுத்துவதற்கென வழங்கப்படுகிறது.
* பிறக்கும்போது எல்லாக் குழந்தைகளும் நிறக்குருட்டுடன் தான் பிறக்கின்றன.

# சங்ககால மக்கள் வாழ்வியல் (இல்) ஆடல்கள்



அ.உமாமகேஸ்வரி,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

சங்ககால போர் மரபை ஒட்டியதாகத் துணங்கைக் கூத்து, குர வைக் கூத்து, களவேள்வி, வாடவள்ளிக் கூத்து மற்றும் காதல் நோயால் மேற்கொள்ளப் பட்ட வெறியாடல் என்பன இந்தக் கால மக்கள் வாழ்வியலுடன் இணைந்த கூத்து வகைகளாகும். அந்தவகையில், குரவைக்கூத்துப் பற்றி கடந்த வாரம் பிரசுரமானது.

குரவைக் கூத்துக்கு அடுத்ததாக சங்க இலக்கியங்களில் அதிக இடம்பிடித்தது துணங்கைக் கூத்தாகும். இந்தக்கூத்தானது இலக்கியங்களில் பேசப்பட்டிருப்பதைப் பொறுத்து மகளிர் துணங்கை, பேய்த் துணங்கை, போர்த் துணங்கை என்ற மூன்று விதங்களில் கூறப்பட்டுள்ளது. பெண்களே அதிகமாக இந்தக்கூத்தை ஆடுவர். கைப்புனைந்து ஆடுவது, தோல் பெயர்த்து ஆடுவது, கால் பெயர்த்து ஆடுவது எனப் பலவிதமாக இந்தக் கூத்தின் ஆட்டமுறைபற்றிக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

*''.... கலிகெழு துணங்கை யாடிய மருங்கில்*

*வழை தலை மூதா ஆம்பல் ஆர்ணவும்''* துணங்கைக் கூத்தாடும்.

மகளிரது தலையுடைய காலில் ஆம்பற் பூக்கள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். அவர்கள் ஆடியபோது அவை உதிர்ந்த வண்ணம் பற்றிப் பதிற்றுப்பத்து கூறியுள்ளது. அதேவேளை, போரில் வெற்றி பெற்ற மன்னன் துணங்கை மகளிருடன் தானும் இணைந்து தனது கையை அவர்கள் கையுடன் புனைந்து துணங்கைக் கூத்தாடியது பற்றியும் கூறப்பட்டுள்ளது. பெண்கள் இருவர் ஆடும்போது விரல்களாலே அடித்தடித்து குதித்தாடும் ஒரு வகை மகிழ்ச்சி கூத்து என்பது புலியூர்கேசிகனின் கருத் தாகும். மேலும்

*''சுடரும் பாண்பின் திருநாறு விளக்கத்து*
*ழளா இமிழ் துணங்கைக்கு தழுவ புனையாக*
*சிலைப்புகழ் ஏற்றின் தலைக் கை தந்து ''*

என்பதாலும்

*''....துணங்கை ஆடிய வலம்படு கோமான்*
*கென்றுதோல் ஒச்சிய வென்றாடு துணங்கை''* என்பதாலும் போர்த்துணங்கை பற்றிய செய்திகளை அறிகிறோம். குறுந்தொகையின் 31 ஆவது பாடல் கூறுவதைப் பார்த்தால் பசுமை படர்ந்து சேரிப்பகுதியில் கிராம மக்கள் துணங்கைக் கூத்தாடுகின்றனர். வீரம் மிக்க இளைஞர்கள் தாம் விரும்பிய பெண்களுடன் துணங்கை ஆடினர். நானும் அவர்களுடன் துணங்கை ஆடினேன். அதன் பின்னர் அவரை எங்கும் காணவில்லை என்று அகத்துறையுடன் இணைந்ததான துணங்கைக் கூத்துப் பற்றி கூறியிருப்பதைக் காணலாம். மதுரைக் காஞ்சி 159, 160, 161, 162, 163 பேய் மகளீர் என்ற தலைப்பின் கீழ் பேய்கள் ஆடும் (துணங்கை) கூத்துப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. மேற் கூறப்பட்ட குரவை மற்றும் துணங்கைக் கூத்துக்கள் பிற்காலத்தில் விவசாயத்துடன் இணைந்த வளர்ச்சியில் கும்மி, கோலாட்டம் என்ற வடிவில் வளர்ச்சி அடைந்துள்ளது எனலாம்.

குரவை, துணங்கை போன்ற கூத்துக்களைத் தொடர்ந்து சங்ககால மக்கள் வாழ்வியலில் இடம்பெற்ற ஆடல் வடிவம் வேலன் வெறியாட்டு ஆகும். இது அகத்துறைக்கே சொந்தமானது. இதன் கட்டமைப்பு பலரால் பல கோணங்களில் விளக்கப்பட்டாலும், இது இளம்பெண்களுக்கும் கடவுள் நம்பிக்கைக்கும் இடையில் நடைபெறும் ஒரு கூத்தாகும். இதன் வளர்ச்சிப் படியை என்றும் இலங்கையின் கிழக்குப் பகுதியில் ஓரிரு இடங்களில் நோய் விரட்டல் சடங்காக இடம்பெறுவதைக் காணலாம். வெறியமர்தல், வெறிசெறிதல், வெறி உறுத்தல், வெறிகொள்ளுதல் போன்ற சொற்றொடர்கள் வேலன் வெறியாடுதலையே குறிக்கின்றன. இவற்றை விட காந்தாட் கூத்து, வேலன் ஆட்டு என்பவையும் இவையாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் முதற் பெண் கவிஞர்



ஈழத்தின் முதற் பெண் கவிஞராகப் ண்டிதை பத்மாசனி அம்மாளை முதன் தலில் இனங்கண்டு இந்தக் கட்டுரை சிரியரால் முன்வைக்கப்பட்ட கருத்து நானம் நூறாவது இதழில் இடம்பெற்ற லோலியின் பெண் கல்விப் பாரம்பரியம் னும் கட்டுரை) இன்று பலராலும் ஏற்றுக் காள்ளப்பட்டுள்ளது. ஈழத்தின் நவீன விதை பற்றிய முனைப்பான ஆய்வுகளை ற்கொண்டுவரும் கலாநிதி செ.யோகராசா வர்களும் 'தமது ஈழத்துப் பெண்கள்- ளர்ச்சியும் தளர்ச்சியும் வளமும்' என்னும் ட்டுரையில்-

ஈழத்தில் மரபுக்கவிதை எழுதிய முதற் பண் கவிஞர் பண்டிதை இ.பத்மாசனி ம்மாள். அவர் எழுதிய முக்கியமான நூல் லோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி கும் என்று இந்தக் கருத்தை முழுமையாக றுக் கொள்கிறார். (ஜீவநதி-கார்த்திகை- ர்கழி 2009)

ஈழத்தின் முதற் பெண் கவிஞராகப் பண் தை பத்மாசனி இராசேந்திரம் ஏற்றுக்கொள் ப்பட்டதை அடுத்து, அவர் பற்றிய தாடர்ச்சியான தேடுதல்களின் விளைவாக வரை ஈழத்தின் முதற்பெண் மொழி பயர்ப்பாளராகவும் நூல் வெளியீட்டா ராகவும் கொள்வதற்கான ஆதாரங்கள், வர் எழுதிய கட்டுரைகள் எனப் பல விட ங்கள் இன்று சேகரிக்கப்பட்டுள்ளன.

எனது மாணவர்களின் விடாமுயற்சியால் ஸ்திரேலியாவில் வசிக்கும் பத்மாசனியின் கன் டாக்டர் இரவீந்திரன் மூலம் அம்மை ரின் புகைப்படம், பிறந்த, இறந்த கதிகள் பற்றிய தகவல்கள் முதலியவற் றப் பெறவும் முடிந்துள்ளது. கிடைத்த கவல்களை ஒரேபார்வையில் தொகுத்துத் நவதாக இந்தக் கட்டுரை அமைந்துள்ளது

**பிறப்பும் கல்விப்பின்னணியும்**

பத்மாசனி புலோலியிலே நமசிவாயம் தங்கரத்தினம் தம்பதிகளின் மகளாக 06.06.1903 இல் பிறந்தார். சைவத்தமிழ்ப் பெண்கள் கல்விகற்பதற்கெனப் பாடசாலைகள் இல்லாத அந்தக் காலத்தில் தமது வீட்டுச் சூழலிற் கிடைத்த திண்ணைக் கல்வி மூலமே தமது அறிவையும் கவித்துவத்தையும் வளர்த்துக் கொண்டார். பத்மாசனியின் தாயாரான தங்கரத்தினத்தின் குடும்பம் சிறந்த கல்விப் பாரம்பரியம் கொண்ட குடும்பம் ஆகும். திருவனந்தபுரம் மகாராஜாக்கல்லூரியின் சமஸ்கிருதப் பேராசிரியரும் இரகுவம்சம், பில்கணீயம் முதலிய வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவருமான வ.கணபதிப்பிள்ளை, இலக்கணக் கொட்டர் என்று அழைக்கப்பட்டவரும் நன்னூற் காண்டிகை உரை விளக்கம், பாரத உரை என்பவற்றை எழுதியவருமான வ. குமாரசாமிப்புலவர் ஆகியோர் தங்கரத்தினத்தின் மாமன்மார்.

**ம.பா.மகாலிங்கசிவம்**

இந்த இருவரின் சகோதரியான பாறாய்ச்சி என்று அழைக்கப்பட்ட பார்வதி அம்மையார் பேரப்பிள்ளைகளான பத்மாசனி, பாலாம்பிகை ஆகிய இருவரையும் தமது கற்பித்தல் மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதைகள் ஆக்கியவர். மருமகனான சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார், பேரனான குருகவி ம. வே. மகாலிங்கசிவம் ஆகியோரும் பார்வதி அம்மையாரிடம் கல்வி கற்றவர்களே.

பார்வதி அம்மையார் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளையும் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் கற்றவர். வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணச் சுலோகங்களை வாசித்துத் தமிழில் விளக்கம் சொல்வதிலும், தொல்காப்பிய இலக்கணத்தைக் கதைசொல்வது போலக் கற்பிப்பதிலும் வல்லவர். பத்மாசினி, பாலாம்பிகை ஆகிய இருவரும் பார்வதியிடம் கல்விகற்றதையும் பண்டிதர் பட்டம் பெற்றதையும்,

*திருந்து செந்தமிழ்நூல் பல எனக்கு*
*அருள்செய்த*
*அருந்தவக் கலைக் கடல்நிகர் பார்வதியார்*
*பால்*
*பரந்த மாமதுரைத் தமிழ்ச் சங்க*
*பண்டிதையாய்*
*பொருந்துகின்ற பாலாம்பிகையொடும்*
*தமிழ் பயின்றாள்.*
*மாடமாளிகை வான் நிமிர் மதுரையம் பதியில்*
*கூடுகின்ற நாலாம் தமிழ்ச்சங்கத்திற்*
*குழீஇய*
*ஞாடு சீர்சைப் புலவர்கள் நயந்து இனிது*
*அளித்த*
*பாடு செந்தமிழ்ப் பண்டிதைப் பட்டமும்*
*படைத்தாள்*

என ம. வே. மகாலிங்கசிவம் குறிப்பிடுகின்றார். (புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி பாயிரம்) பண்டிதை பத்மாசனி புலோலியைச் சேர்ந்த இராஜேந்திரா என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு இரவீந்திரன், இந்துமதி ஆகிய இரு பிள்ளைகள். மகனான இரவீந்திரன் இப்போது ஆஸ்திரேலியாவில் மருத்துவராகப் பணிபுரிகிறார். பண்டிதை பத்மாசனி அம்மையார் 1978.10.11 இல் தமது 75 ஆவது வயதிற் காலமானார்.

**ஈழத்தின் முதற் பெண் கவிஞர்**

அண்மைக்காலம் வரை ஈழத்தின் முதற் பெண் கவிஞராக மலையகத்தைச் சேர்ந்த திருமதி மீனாட்சி நடேசையரையே கொள்ளும் மரபு இருந்து வந்தது. இவர் மலையகத் தொழிற்சங்க வாதியும் இலக்கியவாதியுமான கோ. நடேசையரின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், இவர் 1930 களி லேயே கவிதைகளை இயற்றினார். ஆனால், 1925 இல் வெளிவந்த பண்டிதை பத்மா சனியின் புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி பற்றிய தகவல் வெளிவந்த பின்னர் ஈழத்தின் முதற்பெண் புலவருக்குரிய மதிப்பை அவர் பெறத் தொடங்கியுள்ளார்.

பண்டிதை பத்மாசனியின் புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப் பத்தந்தாதி புலோலியிலே கோயில் கொண்டுள்ள பசுபதீஸ்வரர் மீது பாடப் பெற்ற 100 பாடல்களைக் கொண்டது. இவற்றுடன் கடவுள் வாழ்த்தாக ஒரு பாடலும் உள்ளது.

(தொடரும்)

## மனிதனுக்கு மட்டுமானது



நாயிடம் கொடுத்தேன்
நாவால் துப்பியது
தெருவோரத்து
சிலத்தியிடம் நீட்டினேன்
சீ....
கொண்டு போ என்றது
பக்கத்து வீட்டுப்
பசுவிடம் கொடுத்தேன்
பார்க்காமலே தூக்கியெறிந்தது
பாசமோடு வளர்க்கும்
பசுங்கிளிக்கு கொடுத்தேன்
பைத்தியக்காரா என்று
பரிகாசம் செய்தது
நான்...
பொக்கட்டில் வைத்துக் கொண்டேன்
நாம் மட்டுதானே
நம்புகிறோம் பணத்தை

யோ.புரட்சி

## தியாகம்



என்
குருதி தோய்ந்து
சிவந்த போதிலும்
உன்னை
உரிமையுடன்
அணைத்து...
முத்தமிடத்துடிக்கின்றேன்
என்
மரணத்தையும்
மறந்து.....

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.




# பாவம் ஓரிடம் பழி இன்னொரிடமா?

03.05.2011 அன்று காலை 6.15 முதல் 7.15 மணிவரை அம்மன் ஆலய துறையூரில் காத்திருந்து சிவனே! என்ர பிள்ளை வெற்றிபெற வேண்டும் என்று வேண்டுதலுடன் ப்ரியமான நடனபாட ரீச்சரிடம் தனது 10 வயது மகளை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டிக்காக ஒப்படைத்தார்.

''நான் பொறுப்பு நீங்கள் வரவேண்டாம்'' என்று அந்தத் தந்தையையும் வீட்டுக்கனுப்பிவிட்டார் ரீச்சர்.

பின்னேரமும் அதேயிடத்தில் வந்து தனது மகளின் வெற்றிச் செய்தியைக் கேட்பதற்காக எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் தந்தை.

''ஏனம்மா அழுகிறாய். இடம் கிடைக்கேலயா?'' அவள் மேலும் விம்மி... விம்மி அழுகிறாள். ''ஏனம்மா என்ன நடந்தது பிள்ளைக்கு'' பதற்றத்துடன்.

''இடம் கிடைக்காதுக்குப் போய் அழுகிறதா? இன்னொரு போட்டியில பார்க்கலாம்'' என்று ஆறுதல்படுத்தினார்.

பிள்ளை சொன்ன காரணம் தந்தைக்கு தூக்கி வாரிப்போட்டது. அப்படி என்னதான் நடந்தது? என்பதை அறிய ஆவலாக இருக்கிறீர்களா?

பிள்ளை போட்டியில பங்குபற்றவில்லையாம்! வேலணை மத்திய கல்லூரியில் தான் போட்டி இடம்பெற்றது.

தந்தை எந்தச் ரீச்சரிடம் பிள்ளையை ஒப்படைத்தாரோ! அதே 'ரீச்சர்' மேற்பிரிவுக்குப் போட்டி நடைபெறுகின்ற மண்டபத்தில் விடியக்காத்தால கொண்டு போய் இருத்திப்போட்டு ''நான் சொல்றவரைக்கும் இந்த இடத்தை விட்டு எழும்பக் கூடாது'' என்று கூறி அங்கிருந்து போய்விட்டாராம்.

நண்பகலையும் தாண்டி 2 மணியாச்சு தனக்கேன் இன்னும் போட்டி நடக்கவில்லை என்று அங்கிருந்த நடுவர்களிடம் போய் ''எனக்கு எப்ப பாவோதல் போட்டி நடக்கும்''

''இதுக்க பெரியாக்களுக்கு மட்டும் தான் நடக்குது. நீங்கள் மற்ற மண்டபத்துக்குத்தான் போகவேணும்.

பிள்ளை அந்த மண்டபத்தை நோக்கி ஓடியது... அங்கிருந்த நடுவர்களிடம் போய்...

எனக்குப் போட்டி எப்போ? என்று தனது பெயரையும் கூறியது.

''உங்கட பெயரைப் பல தடவை கூப்பிட்டனாங்கள். நீங்கள் வரவில்லையென்று ''அப்ஸன் போட்டாச்சு'' என்று நடுவர்கள் கூறியதும்-

பிள்ளை பதற்றத்துடன் தனது ரீச்சரைத் தேடி தனக்கு நடந்ததைச் சொல்ல,

''இனியொண்டும் செய்ய ஏலாது நீ பேசாமல் வீட்ட போ...'' என்று பொறுப்பற்ற விதத்தில் பதில் சொல்லியிருக்கிறார்.

பாவம் பிள்ளை இரவு, பகலாக பயிற்சியெடுத்து போட்டியில கலந்து கொள்ளப் போயிருக்கு ரீச்சரின் 'அசண்டையீனத்தால்' இப்போ மனம் உடைஞ்சு போய் நிக்குது.

போட்டியெல்லாம் முடிஞ்சதன் பின்னர் இவர்களோடு போன அந்தப் பிள்ளைக்குப் பாவோதல் பயிற்சி கொடுத்த ரீச்சர் ஆவலாக ஓடி வந்து குறித்த பிள்ளையின் பெயரைக்கூறி பாவோதலில் கிடைத்ததா? என்று மற்ற ரீச்சரை நோக்கி கேட்க-

''போட்டியில பங்குபற்றேல!''

''ஏன்...''

''எங்க போட்டி நடக்குது என்று தெரியேல. இதைப்பற்றி எனக்கொண்டும் தெரியாது'' என்று வெறுப்பாகப் பதில் கூறினாராம்.

பார்த்தீர்களா? பிள்ளையைப் போட்டிக்குப் பொறுப்பேற்றுக் கூட்டிக் கொண்டு வந்து பக்குவமாய் பங்கு பற்றாமல் வைத்துக் கொண்டு இப்போ கூட்டிக் கொண்டு போகிறா?

ஆஹா... என்ன - பொறுப்பு ரீச ரெண்டா இப்படியெல்லோ இருக்கவேணும். இப்படி ஒரு சம்பவம் நயினாதீவில் உள்ள பாடசாலை மாணவிக்கு நடந்துள்ளது.

10 வயதுப் பிஞ்சு உள்ளத்தைப் பொறுப்போடு கூட்டிக் கொண்டு போன ரீச்சர் போட்டி நடக்கிற இடம்தெரியேல பிள்ளை பங்குபற்றேல என்று பதில் சொல்வது யாராலும் ஏற்றுக் கொள்ள முடியுமா? சொல்லுவார் சொன்னால் கேட்பார்க்கு என்ன மதி. கோட்டமட்டத் தமிழ்த் தினப் போட்டி தானே இதையெல்லாம் பெரிசுபடுத்தக்கூடாதென்று நீங்கள் நினைக்கலாம். அந்தப் பத்து வயது பிள்ளையைப் பொறுத்தவரை அது பெரிய விடயம். மன உளைச்சலுக்குள்ளாகியுள்ளது அந்தப் பிள்ளையின் பெற்றோரும்தான்.

ரீச்சருக்குப் போட்டி நடக்கிற இடம் உண்மையிலேயே தெரியாதா? அல்லது 'பிளான்' பண்ணி செய்யப் பட்டதா? என்ற கேள்விகள் சந்தேகத்துடன் எழுகின்றன.

குறித்த பிள்ளையின் தந்தை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் ஓர் உறுப்பினராக இருந்து அங்கு நடக்கின்ற அநியாயங்களைத் தட்டிக் கேட்கும் நியாயவாதியாம். அதனால் பாவம் ஓரிடம் பழி இன்னொரு பக்கம் தீர்க்கப்பட்டதா?

''கறந்தபால் முலையில் ஏறாதென்று'' சொல்லுவார்கள். நடந்தது நடந்துபோயிட்டுது. இனிமேலாவது இது போன்ற சம்பவங்கள் நடக்காது ஆசிரியர்கள் பொறுப்புடன் நடக்க வேண்டும். தீவக வலயக் கல்விப் பணிப்பாளரே இது உங்களின் கவனத்துக்கு- விசாரணைகளுக்காக!

கவிநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்நாடக இசைப்பெருவிழா-2011

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணத்தில் உள்ள இசைக்கலைஞர்களை ஒருங்கிணைத்து, பிரமாண்டமான மேடையில் நடத்தும் மாபெரும் கர்நாடக இசைப்பெருவிழா.

**இடம்:** யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவின் முன் உள்ள மைதானம்

**காலம்:** நாளை (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி

**அனுமதி இலவசம்**

அனைவரையும் இவ் விழாவைக் கண்டுகளிக்குமாறு விழாக்குழு சார்பாக அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளரும்,
கலாசார உத்தியோகத்தர்களும்.

(19,24,49)-(4334)

## கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை வகுப்புகள்

யாழ்ப்பாணம், மே 21

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் அனுசரணையுடன் கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் கல்விப்புலம்சார் அலுவலர்களுக்கான கருத்தரங்குத் தொடரில் இவ்வாரத்துக்கான வகுப்புக்கள் இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கல்வித்துறைப் பேராசிரியர் மா.கருணாநிதி ஆகியோர் கருத்துப் பகிர்வை மேற்கொள்ளவுள்ளனர். (ஐ)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் [ரூபா 80/=] 26.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை- 0778996085
★ சன்வதி பாம் சென்ரர், தொண்டமானாறு- 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி- 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை- 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19,முருகேசர் லேன், நல்லூர், தொ.பே.இல:- 021 222 6944.

(4383)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

பிறப்பு: 20.07.1955
இறப்பு: 21.11.2010

### கணேசபிள்ளை சிவதாஸ்
(நாதஸ்வரம்)



காலத்தைப் பொன்னாகக் கருதி கடமைகளைக்
கண்ணாகக் கருதி வாழ்ந்தீர்கள் அப்பா
கண்ணை இமை காப்பதுபோல்
எம்மைக் காத்து வந்தீர்கள் அப்பா
கணப்பொழுதில் எமைப் பிரிந்து எமையெல்லாம்
சோகத்தில் ஆழ்த்தினீர்கள் அப்பா
காலன் உங்களை அணுகாமல் காக்கும்
சக்தியின்றிக் காலமெல்லாம் கலங்குகின்றோம் அப்பா

எமது குடும்பத்தில் குலவிளக்காய்
அன்போடும் பண்போடும்
வாழ்ந்து எமக்கெல்லாம் வாழ வழி
காட்டிய எமதருமைத் தந்தையே!
என்றும் உங்கள் நினைவுகளுடன்
வாழ்கின்றோம்

குடும்பத்தினர்

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(48,19,24)

## படைவீரர் மாதம் பிரகடனம்

கொழும்பு, மே 21

கடந்த வியாழக் கிழமை முதல் ஜூன் மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரையான காலப்பகுதியை படை வீரர் மாதமாக இலங்கை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் படை வீரரைக் கௌரவப் படுத்தும் முகமாக படையினர் கொடி வார நிகழ்வை நேற்று முன்தினம் வியாழக் கிழமை அலரி மாளி கையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம் பித்து வைத்தார். (த-323)

## 7 ஆவது ஆண்டு நினைவலைகள்

மண்ணக வாழ்வில்:
29.05.1928

விண்ணக வாழ்வில்:
21.05.2004



### அமரர் இராசையா குமாரசாமி
(முன்னாள் உரிமையாளர் - இராசையா அன்சன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

அன்பு ஐயா நீங்கள் மறைந்து
ஆண்டுகள் ஏழாகிவிட்டாலும்
உங்கள் சிறப்பான வழிகாட்டல்கள்
எங்கள் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல்
எங்களுடன் என்றும் நிழலாடிக் கொண்டேயிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் பாசமுள்ள:
மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

17/1, புகையிரத வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(48,19,24)

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08.11.1931
திதி: 21.05.2011
மறைவு: 21.05.1992

### அமரர் க.லம்போதரன்
(ஓய்வுபெற்ற அரச கணக்காளர்)

புல்லாய் புழுவாய் பல பிறப்புக்கள் எடுத்து
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்தில் மிக இளைத்தேன்
இன்று உன் பொன்னடிகள் கண்டுவீடுற்றேன்
என்றும் இந்த உத்தமர் எமது காவல் தெய்வமாய்
இருக்க விநாயகரையும் வீரபத்திரரையும் வேண்டும்

126/4, அரசடி வீதி, மீசாலை கிழக்கு,
யாழ்ப்பாணம். மீசாலை.

குடும்பத்தினர்

(48,27)

## வீடு காணி விற்பனைக்கு

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதி; யாழ்ப்பாணத்தில் 1¾ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: சி.சி.நாதன்,
16/3, விதானையார் வீதி,சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். 0776146434

## துரை டியிற்றல் கலர் லாப் (கரிசன்)

**சகல விதமான படங்களையும் 20 நிமிடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

இல.41, பிரதேச சபை முன்பாக,
திருநகர் வீதி
(கச்சேரி அருகில்), கிளிநொச்சி

(4235)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன்,நல்லூர்.

## German Institute

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. German Embassyல் கேட்கப்படும் A1 Certificate. க்கு ஏற்றவாறு. 10, Palaly Road, Jaffna. 077 160 4823.

## காணி விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறுவிளானில் மெயின்றோட் அருகில் 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மத்தேசு அருளப்பு
பெரியவிளான், ஆத்தியோலை. T.P.No: 0779459186

## வீடு/ காணி தேவை

நல்லூர் அல்லது அதை அண்டிய பிரதேசத்தில் 2பரப்புக்குள் வீட்டுடன் அல்லது வெறும் காணி தேவை.

தொடர்புகளுக்கு: 0779963186.

## கார் விற்பனைக்கு

வெள்ளை நிற FB14 Nissan Suny (Auto Gear) ... விற்பனைக்கு உண்டு. விலை 12½ லட்சம்.

தொடர்புகளுக்கு: 0779963186

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்:
18.04.1938

விண்ணில்:
25.05.2008

திதி: பஞ்சமி
21.05.2011

### திருமதி பூபதி சிவசுப்பிரமணியம்

எங்கள் குடும்பத் தலைவியாய் எமக்கு நல் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! எம்மைவிட்டுப் பிரிந்து எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உமது நினைவு எம்மைவிட்டுப் பிரியாது.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

(48,19,20)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1938
04
23



மறைவு
2010
05
23

### அமரர் மனோன்மணி சின்னத்தம்பி (மணி ரீச்சர்)
(ஓய்வுபெற்ற ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி)

மண்ணும் விண்ணும் விரைவில் அழியும் மறவோமே !
காற்றும் கடலும் அசைவற்று நிற்கும் அந்நேரமே !
புதிய வானம் புதிய பூமி தோன்றும் அவ்வேளையே !
மேகங்கள் மேலே சுந்தர் சூழ இயேசு வருவாரே !
அம்மா! எம் முன்னோரோடு நீங்களும் சேர்ந்தே வருவீரே !
கண்கள் காண முகமாகபார்த்து தாயே! அகமகிழ்வோமே !


அரசடி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (19,24,49)

குடும்பத்தினர்.

(4385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மக்களுக்கு வழி பிறக்குமா....?



இதை வெட்ட முடியாது. தேவை எனில் முழுதாகவே எடுத்துக் கொள்ளுங்கள் என்றபோது கந்தையர் கொஞ்சம் ஆடித்தான் போனார்.

அவருக்குத் தேவைப்பட்டது ஒரு ரெண்டு கிலோ மீன் மட்டுமே. முழுமையாக எடுங்கள் எனக் கூறியது சுமார் ஏழு கிலோ வரையான ஒரு பாரை மீன்.

அந்த அளவுக்கு அது அவருக்குத் தேவையுமில்லை. ஏழு கிலோ என்றால் சும்மாவா ஆயிரத்து 400 இற்கு மேல் பணமும் இருக்க வேண்டும்.

இப்படித்தான் நெடுந்தீவு மக்கள் தாம் விரும்பும் நல்ல ரக மீன்களைப் பெறமுடியாமல் சூடை, செவ்வு என குஞ்சு குருமன் மீன்களை வாங்கிச் சென்று அன்றாட உணவுத் தேவை யைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

நெடுந்தீவு மீன் வளம் மிக்க பகுதி. கடலுக்குப் போவோர் வெறுங்கையுடன் திரும்புவதென்பது கிடையாது. அந்தக் காலத்தில் பிடாரி கோயில் பக்கத்துக் கடலில் உள்ள பாறையில் பொழுது போக்க வென உட்கார்ந்து பிராக்காக ஒரு சிறிய தூண்டிலைப் போட்டாலே ஏதாவது ஒன்று சிக்காமல் போனது கிடையாது.

அப்படி இருக்க பெருந்தொழிலாளர்கள் ஒன்றுமில்லை என்றால் அது கொஞ்சம் யோசிக்கத்தான் வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் வெளியிடங்களைச் சேர்ந்த மீனவர்கள் இங்கு வாடிய மைத்துத் தொழிலில் ஈடுபடவில்லை.

எனினும், இந்தப் பிரதேசம் மீன் வளம் நிறைந்த பகுதி என்பதால் முன்னர் மயிலிட்டி, காங்கேசன்துறை, பருத்தித்துறை போன்ற பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெருந்தொகையான மீனவர்கள் இங்கு வாடியமைத்துத் தங்கியிருந்து தொழில் செய்தனர்.

தினமும் பெருமளவு வருமானம் பெறுபவர்கள் என்பதும் மறுப்பதற்கில்லை.

அதேசமயம் அன்றைய உள்ளூர் மீனவர்களும் கணிசமான வருமானத்தைப் பெற்று வந்ததுடன் நல்ல ரக மீன்களையும் உள்ளூர் மக்களின் தேவைக் கென வழங்கினர். பின்னரே வெளியிடங்களுக்கு அனுப்பினர். கருவாடு பாடம் பண்ணுவதிலும் ஈடுபட்டனர்.

இன்று நிலை மாறிவிட்டது. யுத்தம், கடல் தடை என்று எல்லாமுமே முடிவடைந்துவிட்டது. மீனவர்கள் நல்ல ரக மீன்களைத் தாராளமே பிடிக்கின்றார்கள்.

ஒவ்வொரு சீசனுக்கும் சாதாரண மீன்களுடன் நல்ல ரக மீன்களும் பிடிபடத்தான் செய்கின்றன.

இருந்தாலும் நெடுந்தீவு மக்களுக்குத்தான் அவற்றை வாங்குவதற்குப் பலன் இல்லை. இப்போது நெடுந்தீவில் மீன் வாங்குவது என்பது முயல் கொம்பாகிவிட்டது. அடிவலை, வீச்சுவலை என்று தொழில் செய்யும் சிறிய தொழிலாளர்களே ஓரளவு கைகொடுக்கின்றார்கள். ஒரு காலத்தில் களங்கட்டிகளும் உதவின. இன்று இவற்றைக் காண்பதும் அரிது. சந்தையில் கிடைக்கும் குஞ்சு மீன்களை மட்டுமே மக்கள் வாங்க முடிகிறது.

உண்மையும் அதுதான். நெடுந்தீவு மீன்சந்தைக்குள் நுழைந்தால் சூடை, கத்தலை எனச் சிறிய மீன்களையே காணலாம். மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை முதலில் சந்தைக்குக் கொண்டு வர வேண்டும் என்பது விதிமுறை. ஆனால் மீனவர்கள் நிறைய மீன்பிடித்தாலும் சந்தைக்குக் கொண்டு வருவதில்லை. நல்ல ரக மீன்களை இப்போதெல்லாம் கடலில் வைத்தே தனிப்பட்ட வியாபாரிகளுக்குக் கொடுத்துவிடுகின்றனர். பின்னர் மீன்கள் படவில்லை எனக் கை விரித்து விடுகின்றனர் என்று சந்தைக் குத்தகைக்காரர்கள் கூறுகின்றனர். இந்த விடயத்தில் பிரதேச சபை மௌன மாக உள்ளது எனவும் குறைபடுகின்றனர்.

அரசும் சரி அரசசார்பற்ற நிறுவனங்களும் சரி ஏனையோருக்கு வழங்காத அளவு சலுகைகளை மீனவர்களுக்கு வழங்குகின்றன. ஏனையவர்களுக்கு இது போன்ற உதவிகள் கிடைப்பது அரிதே.

இத்தனை சலுகைகளைப் பெறும் மீனவர்கள் மூலதனமின்றி நல்ல வருமானத்தைப் பெறுகின்றனர். ஆனால் உள்ளூர் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்த பின்னரே வெளியிடங்களுக்கு அனுப்புவது பற்றிச் சிந்திப்பதில்லை.

முதலில் உள்ளூர் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முன்வரவேண்டும் எனவும் மக்கள் கூறுகின்றார்கள்.

மீனவர்களுக்கென ஐந்து சங்கமும் ஒரு சமாசமும் இங்கு உள்ளன. சமாசத்தால் நெடுந்தீவு மக்களுக்கு என்ன நன்மை என்றும் கேட்கின்றனர். சமாசம் மீன்களைக் கொள்வனவு செய்து மக்களுக்கு வழங்கக் கூடியதான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்.

மீன்களைப் பாதுகாக்கவும் எஞ்சிய வற்றை வெளியிடத்துக்கு அனுப்பி வைக்கக் கூடியதாகவும் குளிரூட்டி மற்றும் குளிரூட்டியுடன் கூடிய படகு என்பன அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

வசதிகள் இருந்தும் நெடுந்தீவு சமாசம் உறங்கிக்கிடக்க வேலணை மீன்பிடிச் சங்கம் இங்கு மீன், கருவாடு போன்றவற்றைக் கொள்வனவு செய்கின்றது.

நெடுந்தீவுச் சங்கம் மீன்களைக் கொள்வனவு செய்வதுடன் கருவாடு பாடம் பண்ணும் செயற்பாடுகளை முன்னெடுத்தால் ஒரு சில வேலை வாய்ப்புக்களையும் வழங்க முடியும்.

வெளியில் இருந்து வரும் தனியார் வியாபாரிகள் நல்லரக மீன்களை கிலோ 150 ரூபாவுக்கும் கருவாடு ஒரு கிலோ 400 ரூபா முதல் ரூபா 450 ரூபா வரையும் கொள்வனவு செய்கின்றனர்.

ஆனால் நெடுந்தீவு மக்கள் சாதாரண மீனுக்கு கிலோ ஒன்றுக்கு 200 ரூபாவும் கருவாடு 500 ரூபாவும் கொடுத்து வாங்க வேண்டிய நிலையுள்ளது.

இது விடயத்தில் பிரதேச சபை மீதும் மக்களுக்கு எரிச்சல் ஏற்படுகிறது. சந்தைக்கு மீன்கள் உரிய முறையில் வந்து சேர்வதில்லை என்பது டன் நடுக்கடல் வியாபாரங்களையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதாக கூறுகின்றார்கள். பிரதேச சபையின் வருமானமும் கணிசமாக இழக்கப்படுகின்றது.

அரச அதிபர், உதவி அரச அதிபர், பொலிஸார் கடற்படையினரின் உதவியை இதற்காக நாடி தீர்வு காணக் கோருகின்றனர் மக்கள்.

மக்களுக்கு உதவும் வகையில் கூட்டுறொழிலாளர்கள் சமாசத்தின் செயற்பாடுகள் இடம் பெற வேண்டும் என்பதும் மக்களின் கருத்தாகும்.

நாடோடி

**மணமகள் தேவை**

யாழ்.கௌரவமான R.C.பெற்றோர் தமது 38 வயதுடைய கொழும்பில் கல்வி கற்று கௌரவமான தொழில் புரியும் மகனுக்குத் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.

தொடர்பு: 0786173610.

**நிதியறிக்கைகள்**

வங்கிக் கடன் சம்பந்தமான திட்ட அறிக்கை, நிதி அறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகள் தேர்ச்சிமிக்க நிதி முகாமையாளரினால் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

Man - Acc Associates
Suthumalai North, Manipay
T.P- 021 225 5137, 077 3144861

## மரண அறிவித்தல்

### திருமதி பகவதி முதலியார்

(B.Sc., விஞ்ஞான பட்டதாரி)



கல்வியங்காடு, இலங்கை நாயகி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பகவதி முதலியார் 18.05.2011 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை முதலியார் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஓங்கார வடிவேல் கதிர்காம முதலியார் (சிரேஷ்ட விரிவுரையாளர், வணிகத்துறை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிஜயா, கனகசுந்தரம், வேலாயுதபிள்ளை, யோகநாதன் ஆகியோரின் சகோதரியும் S.V.C.M.K. முதலியார் (யாழ்.மாவட்ட விவசாய சம்மேளன தலைவரும் (ஜே.பி) வடமாகாண விவசாய சம்மேளனத் தலைவரும்) மங்கையர்க்கரசி ஆகியோரின் மைத்துனியும் செந்தூர்செல்வி (ஜேர்மனி), செந்தூர்செல்வன் (சுவிஸ் - தமிழ் பண்பாட்டு செயலாளர், அரசியல் சாராதது), செந்தூர்செழியன் (கனடா), செந்தூர்வாசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரகுமார் (ஜேர்மனி), கௌரி (சுவிஸ்), தர்சினி (கனடா), கீத்தா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் லக்சன், லவணன், லயனி, லயாளினி, பவித்திரா, கேஷிகா, மாதினி, திலக்சன், கீர்த்தனா, யதுசன், பானுயன், பிரணவ், மித்துரான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 0019058282012,
0041787406630

தகவல்:
மகன்- முதலியார் செந்தூர்செல்வன்
(கண்ணன் - சுவிஸ்)

(40-25-19) (சி/109)

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 751 திகதி 19-05-2011

வெற்றி எண்கள்

12 14 15 22 M (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 11,805,170/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,805,170/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | 600,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 257 | 1,000/= | 257,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 496 | 1,000/= | 496,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11816 | 60/= | 708,960/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6199 | 40/= | 247,960/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155525 | 20/= | 3,110,500/= |
| ஆங்கில எழுத்து | 22571 | 20/= | 451,420/= |
| | | மொத்தம் ரூ. | 6,271,840/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அநுராதபுரம் | 700046745-0-40 |
| அம்பாந்தோட்டை | 700044293-1-01 |
| மட்டக்களப்பு | 700056170-3-43 |
| கேகாலை | 700056666-6-06 |
| இரத்தினபுரி | 700050460-6-26 |
| கம்பஹா | 700056476-7-47 |
| காலி | 700048386-9-29 |
| யாழ்ப்பாணம் | 700043167-3-03 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,671,840/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 12,109,410/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 மே 23 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல் இறையாண்மையை பாதிக்கும் செயல்

## - சீனா கருத்து -

இஸ்லாமபாத், மே 21

பாகிஸ்தான் மீது நடத்தப்படும் எந்த தாக்குதலும் சீனா மீது நடத்துவது போன்றது. பாகிஸ்தான் நாட்டின் இறையாண்மைக்கு அமெரிக்கா மதிப்பு அளிக்க வேண்டும் என்று அமெரிக்காவிடம் சீனா வலியுறுத்தியுள்ளது.

வாஷிங்டனில் கடந்த வாரம் அமெரிக்கா-சீனா இடையே பொருளாதார மற்றும் இரு நாட்டு உறவுகள் தொடர்பான பேச்சு நடந்தது. இதில் சீன வெளியுறவுத் துறை அமைச் சர் கலந்து கொண்டார். அப்போது பாகிஸ்தான் நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அமெரிக்கா மரியாதை அளிக்க வேண்டும். பாகிஸ்தான் மீது நடத்தப்படும் எந்தத் தாக்குதலும் சீனா மீது நடத்தப்படுவது போன்றது என்று அமெரிக்க பிரதிநிதியிடம் சீன வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்ததாக தி நியூ டெய்லி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் இஸ்லாமாபாத்தில் சீனா மற்றும் பாகிஸ்தான் பிரதமர்கள் இடையே கடந்த புதன்கிழமை பேச்சு வார்த்தை நடந்தது. அப்போது பாகிஸ்தான் மீதான அமெரிக்கா தாக்குதல் பற்றி வாஷிங்டனில் நடந்த பேச்சு வார்த்தையின் போது அந்நாட்டிடம் எடுத்துரைக்கப்பட்டதாக பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானியிடம் சீன பிரதமர் வென் ஜியாபோ தெரிவித்தார்.

இரு நாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் பிரதமர்கள் கலந்து கொண்ட கூட்டம் 45 நிமிடம் நீடித்தது. இதில் இரு நாட்டு உறவுகள், பாகிஸ்தான் நாட்டு பாதுகாப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தேவையான அனைத்து ஆதரவுகளையும் சீனா வழங்கும் என்று கிலானிக்கு வென்ஜியாபோ உறுதி அளித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் பத்திரிகையாளர்களுக்கு பாகிஸ்தான் பிரதமர் கிலானி அளித்த பேட்டியில் கூறியதாவது: தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தானின் தியாகத்தை சீனா அங்கீகரித்துள்ளது. சர்வதேச அளவில் பாகிஸ்தானின் இந்த நோக்கத்துக்கு சீனா ஆதரவு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் நாட்டுடன் உறவுகளை மேம்படுத்த வேண்டும் என்று அமெரிக்காவிடம் சீனா வலியுறுத்தியுள்ளது. தைவான், திபெத் தொடர்பான சீனாவின் கொள்கைகளை ஆதரிக்கிறோம். ஐ.நா மறுசீரமைப்பு தொடர்பாக இரு நாடுகளும் தொடர்ந்து ஆலோசிக்கும். பாகிஸ்தானில் இரு நாடுகளும் இணைந்து அணு சக்தி, மின்சாரம் உட்பட பல்வேறு மின் உற்பத்திகளை நீண்ட கால திட்ட அடிப்படையில் மேற்கொள்ளும். இவ்வாறு கிலானி கூறினார்.



ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடினை சர்வதேச நிறுவனத்தின் வர்த்தகப் பிரதிநிதிகள் தலைநகர் மாஸ்கோவில் சந்தித்தனர்.

# ஈராக்கில் குண்டுவெடிப்பு 17 பேர் பலி பலர் படுகாயம்

ஈராக்கின், கிர்குக் நகரில், மூன்று குண்டுகள் வெடித்ததில், 17 பேர் பலியாயினர்.ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து, 250 கி.மீ., தொலைவில் உள்ளது கிர்குக்.

எண்ணெய் வளம் மிக்க இந்நகரில், நேற்றுமுன்தினம் பொலிஸ் நிலையம் அருகே, முதல் குண்டு வெடித்தது. சிறிது நேரத்திற்குப் பின், பொலிஸ் வாகனத்தில் வைக்கப்பட்ட, மற்றொரு குண்டு வெடித்தது.அதே பகுதியில், மூன்றாவது குண்டும் வெடித்தது.

இச்சம்பவத்தில், 17 பேர், உடல் சிதறி பலியாயினர்; 45 பேர் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தால், அருகே இருந்த கட்டடங்கள் சேதமடைந்தன. ஏராளமான கார்கள் தீக்கிரையாயின.

# நேட்டோ படைகளின் தாக்குதலில் போர்க் கப்பல்கள் மூழ்கடிப்பு

திரிபோலி, மே 21

லிபிய சர்வாதிகாரி கேணல் கடாபியின் 8 போர்க்கப்பல்களை நேட்டோ படைகள் தாக்குதல் நடத்தி மூழ்கடித்தன.

தலைநகர் திரிபோலி, அல் கும்ஸ் மற்றும் சிர்தே பகுதிகளில் வியாழக்கிழமை இரவு நடந்த தாக்குதலில் இந்தப் போர்க் கப்பல்கள் நொறுங்கின. இது கடாபி ராணுவத்திற்கு மிகப் பெரும் பின்னடைவாக உள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து நேட்டோ படைகளின் கடற்படை பிரிவு அதிகாரி கூறுகையில், ''லிபியாவில் அப்பாவி மக்களை காப்பாற்றுவதற்காக எமது படைகள் கடலில் முகாமிட்டுள்ளன. இதைத் தவிர வேறு வழி இல்லை'' என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வியாழக்கிழமை அரபு நாடுகளின் போராட்டம் குறித்து உரை நிகழ்த்தினார். அப்போது ''கடாபி நீண்ட நாள் லிபியாவில் ஆட்சியில் நீடிக்க முடியாது என்றார்.

லிபியாவில் பல ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வரும் கடாபி பதவி விலக வேண்டிய தருணம் வந்து விட்டது. லிபிய மக்கள் ஆட்சி மாற்றத்தை எதிர் நோக்கியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேட்டோ பொதுச் செயலாளர் ஆண்டர்ஸ் போக் ரஸ்முசன் கூறுகையில், ''கடாபியின் படைகள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக அவரது ஆட்சியும் முடிவுக்கு வருகிறது'' என்றார். ஒவ்வொரு நாளும் கடாபி ஆட்சி தனித்து விடப்படுகிறது என்றார்.

லிபியாவில் கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் கடாபிக்கு எதிரான போராட்டங்கள் நடந்து வருகின்றன. அப்பாவி மக்களை பாதுகாக்க நேட்டோ படையில் அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, நோர்வே, பிரிட்டன் படைகளும் உள்ளன. போராட்டக்காரர்கள் மிஸ்ரட்டா உள்ளிட்ட பல நகரங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.


## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 228 | சீட்டிழுப்புத் திகதி 19.05.2011

வெற்றி இலக்கங்கள்: 36 45 55 60 — சுப்பர் இலக்கம்: 09

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,546,420/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 56595 | ரூ. 20/= | ரூ. 1,131,900 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 5112 | ரூ. 40/= | ரூ. 204,480 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 4493 | ரூ. 100/= | ரூ. 449,300 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 398 | ரூ. 200/= | ரூ. 79,600 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 102 | ரூ. 1,500/= | ரூ. 153,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 10 | ரூ. 3,000/= | ரூ. 30,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 5,546,420/= | |
| மொத்த எண்ணிக்கை | 66711 | | ரூ. 3,048,280/= |

ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,719,430/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, சுகாதிபதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


# பெண் பத்திரிகையாளர் விடுதலை

சிரியா அரசால் கைது செய்யப்பட்ட அல் ஜசீரா என்ற பெண் பத்திரிகையாளர் விடுவிக்கப்பட்டார். கட்டார் நாட்டில், தோகா நகரில் பத்திரிகையாளராக பணியாற்றி வந்த இவர், கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி, சிரியா தலைநகர் டமாஸ்கஸில் வைத்து கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இவரின் விடுதலை குறித்து, அல்ஜசீரா விடுத்துள்ள அறிக்கையில், பத்திரிகையாளர் டோரத்தி பர்வாசை சிரியா விடுவித்தது. அவர் பாதுகாப்பாக, ஆரோக்கியமான நிலையில் உள்ளார். அந்நாட்டில் தொடரும் அரசியல் நெருக்கடி குறித்த செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


## அரசாங்க அறிவித்தல்
## யாழ்.மாவட்டச் செயலகம்

காகிதாதிகள், எழுதுபொருள்கள், ஏனையவை கொள்வனவு செய்வதற்கான
**கேள்வி விலை கோரல்-2011**

மாவட்டச் செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காகக் காகிதாதிகள், எழுதுபொருள்கள், ஏனைய பொருள்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இச் செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப தாயரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **தலைவர், மாவட்டச் செயலகப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"2011ஆம் ஆண்டுக்கான காகிதாதிகள் வழங்கலுக்கான கூறுவிலைகள்"** எனக் குறிப்பிட்டு 2011.06.21 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு நேரடியாக மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**விண்ணப்பப் படிவங்களை 25.05.2011ஆம் திகதி தொடக்கம் மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரி கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.**

**இமெல்டா சுகுமார்,**
**அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலரும்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(19,24,49)



## அன்புடன் அழைக்கின்றோம்



அமல மரித் தியாகிகள் சபையின்
நிறுவுநர், தூய
**இயுஜின்டி மசனட்டின்**
150 ஆவது விண்ணக பிறப்பு விழாவையொட்டி, இறைவனுக்கு நன்றி கூருமுகமாக இன்று (21.05.2011) சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.தூய மரியன்னை பேராலயத்தில் யாழ்.மறை மாவட்டக் குருமுதல்வர் அதிவணக்கத்துக்குரிய யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் தலைமையில் ஆடம்பர நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இந்தத் திருப்பலியில் பங்குபற்ற அனைத்துக் குருக்களையும் அருட்சகோதரிகளையும் அருட்சகோதரர்களையும் இறை மக்களையும் அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

'தொடர்பகம்'
657/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.மாகாண முதல்வர்,
அமதிகள் குழுமம்.



## 27 ஆவது ஆண்டு திருமண நிறைவு நாள்

வாழ்த்துக்கள்



இன்று (21.05.2011) சனிக்கிழமை தமது 27 ஆவது திருமண நிறைவு நாளைக் கொண்டாடும்
**வேதவனம்-விமலாம்பிகை**
தம்பதியினருக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்கள்.
எமது தெய்வங்களான இவர்கள் இருவரும் இன்னும் பல ஆண்டுகாலம் வாழவேண்டும் என்று ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: பி.கஜேந்தினி (மகள்),
ப.பிரபு (மருமகன்),
வே.[illegible] (மகன்),
வே.[illegible] (மகன்)
வே.நிவேதிக்ன் (மகன்)
சி.புவனேஸ்வரி (அப்பம்மா)

'நிருபவனம்'
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

(48,19,24)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல ஆலோசனை...



அமெரிக்காவில் தொடங்கியுள்ள ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் ஜப்பான் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் சிகாய்ட காஷி (இடது) மற்றும் நிதித்துறை அமைச்சர் கோஷிகட் சுநகமயாமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பின்லேடனின் குடும்பத்தை ஆதரிக்க சவுதியிடம் பாகிஸ்தான் உதவி கோரவில்லை

இஸ்லாமாபாத், மே 21

ஒசாமா பின்லேடனின் மனைவி மற்றும் குழந்தைகளை ஏற்றுக்கொள்ளும் படி சவுதி அரேபியாவிடம் கேட்கப்படவில்லை என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் இரண்டு வாரங்களுக்கு முன் அமெரிக்க அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் ஒசாமாவின் ஒரு மகனும் பலியானார். அபோதாபாத்தில் தங்கியிருந்த ஒசாமாவின் மூன்று மனைவிகளும், குழந்தைகளும், பேரக்குழந்தைகளும் தற்போது பாகிஸ்தான் அரசின் வசம் உள்ளனர்.

இவர்களை சவுதியிடம் ஒப்படைக்க பாகிஸ்தான் முயற்சிப்பதாக அந்த நாட்டுப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இது குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் தெரிவிக்கையில்;

''ஒசாமாவின் மனைவி மற்றும் குழந்தைகளை சவுதி அரேபியாவிடம் ஒப்படைப்பது குறித்த பேச்சே எழவில்லை. சவுதியும் இது குறித்து எங்களிடம் விவாதிக்கவில்லை. நாங்களும் இது குறித்து அவர்களிடம் ஏதும் பேசவில்லை'' - என்றார்.

# அயர்லாந்தில் நடந்த வன்முறைகளுக்கு மகாராணி எலிசாபத் வருத்தம் தெரிவிப்பு

அயர்லாந்தில் பிரிட்டன் நிகழ்த்திய வன்முறைகளுக்காக வருத்தம் தெரிவித்துள்ளார் மகாராணி 2ஆம் எலிசபெத்.

அயர்லாந்துக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தை பிரிட்டன் மகாராணி எலிசபெத் மேற்கொண்டுள்ளார். கடந்த 100 ஆண்டு காலத்தில் அயர்லாந்துக்குப் பயணம் மேற்கொண்ட முதல் அரச குடும்ப நபராக மகாராணி எலிச்பெத் உள்ளார். கடந்த காலத்தில் பிரிட்டன் மற்றும் அயர்லாந்து இடையே கடுமையாக கருத்து வேறுபாடுகளும் போர்களும் நடந்துள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே தற்போது மீண்டும் நட்புறவை வலுப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் பிரிட்டிஷ் ராணி அயர்லாந்து சென்றுள்ளார்.

மகா ராணிக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. அயர்லாந்து அரச நிர்வாகம் சார்பில் நடந்த விருந்துபசார நிகழ்வில் வரலாற்று சிறப்பு மிக்க உரையை ராணி நிகழ்த்தினார். "கடந்த கால கசப்பு அனுபவங்களை எண்ணி வேதனைப் படுகிறேன். இரு தரப்பிலும் தவறுகள் நடந்துள்ளன. இதில் பிரிட்டன் எடுத்த நிலைப்பாடுகளுக்காக நான் வருத்தம் தெரிவிக்கிறேன்'' - என்றார். அயர்லாந்தின் அந்த தாக்குதல் பிரிட்டன் அரச குடும்பத்திலும் உயிரிழப்பு ஏற்படுத்தியதை சுட்டிக் காட்டிய ராணி கடந்த காலத் தவறுகளை எண்ணி வருந்துவதாக தெரிவித்தார்.

# தலிபான்களின் அட்டூழியம் தொடர்கிறது

தலிபான், மே 21

ஆப்கானிஸ்தானில் குழந்தைகள் தற்கொலைப் படையை தலிபான் தீவிரவாதிகள் உருவாக்கி வருகின்றனர். அவர்களின் அட்டூழியம் தொடர்ந்து வருகின்றது.

இதனால், அவர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் அவர்களை அழிக்கவும், அரசுக்கு நெருக்கடி கொடுக்கவும் இளைஞர்கள், பெண்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் மீது தலிபான் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். தற்போது இளைஞர்கள் மட்டுமின்றி குழந்தைகளையும் தற்கொலைப் படையில் சேர்த்து வருகின்றனர்.

அவர்களிடம் இன வெறியை தூண்டி மூளைச் சலவை செய்து தற்கொலை படையில் சேர்த்து அவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

ஒன்றும் அறியாத மனதில் தீவிரவாதம் என்ற நஞ்சைக் கலக்குகின்றனர். அவர்களுக்கு துப்பாக்கி சுடுதல், வெடிகுண்டுகளைக் கையாளுதல் போன்ற பயிற்சிகளை அளிக்கின்றனர். இறுதியில் தற்கொலை தாக்குதல் நடத்தும் போது உடைகள் அணிவது, வெடி குண்டுகளை இயக்கி வெடிக்க வைக்கவும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

இதற்காக வறுமையில் வாடும் 10 முதல் 16 வயது குழந்தைகளை தேர்ந்தெடுத்து குழந்தை தற்கொலைப் படை உருவாக்கி வருகின்றனர். பெரும்பாலும் இந்த முகாம்கள் நகர்ப் புறங்களில் இருந்து மிக உள்ளடங்கிய கிராமப்புறங்களிலேயே செயல்படுகின்றன. இங்கு அமெரிக்கப் படையினர் சென்று அதிரடித் தாக்குதல் நடத்தி குழந்தை தற்கொலைப் படைத் தீவிரவாதிகளை மீட்டு வருகின்றனர்.

இப்போது விற்பனையில்

பெண்ணாட்சித் தொழில்



இது ஏன்? தலைமைக் கதிரையைப் பெண் அலங்கரித்தாலும் சூழ இருப்பது ஆண் கதிரைகள் தானே.

வெசாக் மாமிச விருந்து



அரை-மணித்தியாலக் காத்திருப்புக்குப் பின்னர் விடுதலை கிடைத்தது. எல்லோரும் வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகளாயினர்.



கரையேற்றுமா இந்தியா?

இன்று பௌத்த சங்கம் நாளை...?



துணைவேந்தர் இனியும் வாளாவிருப்பாரா? அல்லது பின்னால் வரப்போகும் எதிர்மறையான விளைவுகளைத் தடுக்க இப்போதே காரியத்தில் இறங்கப்போகிறாரா? என்ற கேள்விகள் நீளத் தான் செய்கின்றன.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
21 மே 2011 சனிக்கிழமை

# மரண அறிவித்தல்

## இராமநாதன் லோகநாதன்

(அப்புளி - நயினாதீவு)

**(செயலாளர், காரைநகர் பிரதேச சபை)**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் லோகநாதன் (18.05.2011) புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் கனகம்மா தம்பதியரின் புதல்வனும் காராளபிள்ளை- வடிவாம்பிகை தம்பதியரின் மருமகனும் ரதீஸ்வரியின் அன்புக் கணவரும் விஜயராணி (சுவிஸ்), சிவநாதன் (அவுஸ்திரேலியா), சியாமளாதேவி (கனடா), சிதம்பரேஸ்வரி (பிரான்ஸ்), பரமேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற திருபாகரன் (யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்) மற்றும் சிவாகரன் (ஜேர்மனி), பிறேமா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சதாநந்தன் (சுவிஸ்) மற்றும் சியாமளா (அவுஸ்திரேலியா), துரைராசா (கனடா), வல்லிபுரம் (பிரான்ஸ்), யோகநாதன் (பிரான்ஸ்), சுசீலா (ஜேர்மனி), ஓங்காரலிங்கம் (கனடா), சர்வானந்தசிவம் (கனடா), கிருபானந்தசிவம் (விக்னேஸ்வரா ஸ்ரோர்), நீலானந்தசிவம் (கனடா), காலஞ்சென்ற விநாயக சிவம் (பிரான்ஸ்) மற்றும் பாலேஸ்வரி (கனடா), நித்தியானந்த சிவம் (கனடா), குகனேஸ்வரி (கனடா), கோபாலசிவம் (விக்கினேஸ்வரா படகுச் சேவை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை ந.ப.12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**லோ.ரதீஸ்வரி**
(மனைவி).
**5ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4482)-(49,22)

# 8 படங்களுக்கு தேசிய விருது கிடைத்துள்ளன

சன் பிக்சர்ஸ் தயாரித்த எந்திரன், ஆடுகளம் படங்கள் 8 தேசிய விருதுகளை குவித்தன. மொத்தம் அறிவிக்கப்பட்ட 36 விருதுகளில் 14ஐ தமிழ்ப்படங்கள் தட்டிச்சென்றன. சிறந்த நடிகர் விருதை தனுஷ், இயக்குநர், திரைக்கதைக்கான விருதை வெற்றிமாறன், எந்திரன் படத்துக்கான தயாரிப்பு வடிவமைப்புக்காக சாபுசிரில் பெற்றுள்ளனர்.

58வது தேசிய திரைப்பட விருதுகள் டெல்லியில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த, எந்திரன் படத்துக்கு 2 விருதுகளும் சன் பிக்சர்ஸ் வெளியிட்ட ஆடுகளம் படத்துக்கு 6 விருதுகளும் கிடைத்தன. சிறந்த நடிகர் விருதை மலையாள நடிகர் சலீம் குமாருடன் இணைந்து தனுஷும், சிறந்த இயக்கம், திரைக்கதைக்கான விருதை வெற்றிமாறனும் பெற்றுள்ளனர்.

ஆடுகளம் படத்தில் குணசித்திர வேடத்தில் நடித்த கவிஞர் ஜெயபாலன், ஜூரி விருதை பெற்றார். தமிழில் சிறந்த படமாக, தென்மேற்கு பருவக் காற்று தேர்வு பெற்றுள்ளது. தேசிய விருதுகளில் கணிசமான விருதுகளை தமிழ்ப்படங்கள் பெற்றது மட்டுமின்றி, மலையாள படத்துக்கு 4 விருதுகள் கிடைத்துள்ளன. இதன் மூலம், தென் இந்திய படங்கள் தான் இந்த முறை அதிகமான விருதுகளை தட்டிச் சென்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

விருது பெற்றவர்கள் விவரம்

**சிறந்த படம்:**
ஆதாமின்டே மகன் அபு (மலையாளம்)

**சிறந்த நடிகர் :**
தனுஷ் (ஆடுகளம்), சலீம் குமார் (ஆதாமின்டே மகன் அபு)

**சிறந்த இயக்குனர் :**
வெற்றிமாறன் (ஆடுகளம்)

**சிறந்த திரைக்கதை:**
வெற்றிமாறன் (ஆடுகளம்)

**சிறந்த நடன அமைப்பு:**
தினேஷ் (ஒத்த சொல் லால... ஆடுகளம்).

**சிறந்த எடிட்டிங்:**
கிஷோர் (ஆடுகளம்)

**சிவராம் காரந்த் விருது:**
ஆடுகளம்

**சிறந்த பொழுதுபோக்கு படம்:**
தபங் (இந்தி)

**சமூக பிரச்சினை பற்றிய படம்:**
சாம்பியன்ஸ்(மராட்டி).

**ஒளிப்பதிவு:**
மது அம்பாட் (ஆதாமின்டே மகன் அபு).

**சிறந்த நடிகை:**
சரண்யா பொன்வண்ணன் (தென்மேற்கு பருவக்காற்று), மித்தாலி (பபு பஞ்ச் பாச்சா, மராட்டி).

**சிறந்த குணசித்திர நடிகர்:**
தம்ப ராமய்யா(மைனா).

**சிறந்த பாடலாசிரியர்:**
வைரமுத்து (கள்ளிக்காட்டில் பொறந்த தாயே, தென்மேற்கு பருவக்காற்று).

**துணை நடிகை:**
சுகுமாரி (நம்ம கிராமம்).

**தயாரிப்பு வடிவமைப்பு:**
சாபுசிரில் (எந்திரன்)

**ஸ்பெஷல் எபெக்ட்ஸ்:**
ஸ்ரீனிவாஸ் மோகன் (எந்திரன்).

**சிறந்த குழந்தைகள் படம்:**
ஹெச்சேகாலு (கன்னடம்).

**இசைஅமைப்பாளர்:**
விஷால் பரத்வாஜ் (இஷ்க்யா), ஐசக் தோமஸ் (ஆதாமின்டே மகன் அபு).

**ஜூரி விருது:**
வ.ஐ.ச. ஜெயபாலன் (ஆடுகளம்).

## எல்லைப் பகுதியில் பாக். படைகள் குவிப்பு

பாகிஸ்தான் ராணுவம் திடீரென இந்திய எல்லைப் பகுதிகளில் தங்களது படைகளை குவித்து வருகிறது. இதன் காரணமாக எல்லைப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம், தேவைப்படும் பட்சத்தில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம். எல்லைப் பகுதிகளில் இந்திய ராணுவம் விழிப்புடன் இருக்கிறது என்றார்.

இதனிடையே, பாகிஸ்தானில் பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தை திசை திருப்பும் முயற்சியாக எல்லைப் பகுதியில் அந்நாடு படைகளை குவித்து வருவதாக அதிகார பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.




பாக்., சிறையில் கடந்த 21 ஆண்டுகளாக வாடும் இந்தியரான சரப்ஜித், விரைவில் மரண தண்டனையைச் சந்திக்க இருக்கிறார்.உடனடியாக மத்திய அரசு தலையிட்டு, சரப்ஜித்தை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, டில்லியில் உண்ணாவிரதமிருக்கின்றனர்.

## என் இலட்சியம் நிறைவேறும் போதுதான் பார்வதி அம்மாளின் சாம்பலைக் கரைப்பேன்

### சீமான் சூளுரை

பிரபாகரனை பெற்றெடுத்த வீர மாதா திருமதி பார்வதி அம்மாள் அவர்களுடைய புனித சாம்பல் எனக்கு வந்தது. என்னைப் போலவே அண்ணன் நெடுமாறன், அண்ணன் வைகோ அவர்களுக்கும் வந்தது. அவர்கள் இருவரும் கடல் நீரிலே கரைத்தார்கள்.

ஆனால் நான் பத்திரமாக இன்னும் என் அறையில் வைத்திருக்கிறேன். என்றைக்கு என் லட்சியத்தை தொடுகிறேனோ, அன்று தான் என் தாயின் சாம்பலை நான் கரைப்பேன்.

என் தாயின் சாம்பல் மட்டுமல்ல. தமிழ் சொந்தங்கள் உறங்கிக் கொண்டிருந்த போது அவர்களை உசுப்பி விடுவதற்காக தீக்குச்சியாகமாறி வெந்து செத்தானே என் தம்பி முத்துக்குமாரின் புனித சாம்பலும் என்னிடத்தில்தான் இருக்கிறது.

அதையும் பத்திரமாக வைத்திருக்கிறேன். என் இனம் என்று விடுதலை அடைகிறதோ, அன்று தான் அந்த சாம்பலை நான் கரைப்பேன். அதுவரை ஒவ்வொரு போருக்கும், ஒவ்வொரு களத்திற்கும் நான் செல்லும் போது அந்த சாம்பல் மீது சத்தியம் செய்துதான், நானும் என் தம்பிகளும் களத்திலே இறங்குவோம் என்றார்.

## அவப்பெயர் பெற்ற தலைவர்களின் பட்டியல் ஸ்பெக்ட்ரம் ராசாவுக்கு இரண்டாமிடம்

அதிகார துஷ்பிரயோகம் செய்து அதனால் அவப்பெயர் பெற்ற தலைவர்கள் பட்டியலை அமெரிக்காவின் ரைம்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது.

இதில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் ராசாவுக்கு இரண்டாமிடம் கிடைத்திருக்கிறது.

நியூயோர்க்கில் இருந்து வெளியாகும் ரைம்ஸ் இதழின் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் டேனியல் எல்ஸ்பெர்க் ஆவார்.

இவர் அமெரிக்க முன்னாள் அதிபர் ரிச்சர்ட் நிக்சன் அரசில் அந்நாட்டு ராணுவ ரகசியங்களை கசிய விட்டவர். இரண்டாம் இடத்தில் இருப்பவர் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் குற்றம் சாட்டப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் ராசா. உலக தலைவர்களைப் பின்னுக்கு தள்ளி ராசா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

மேலும், ராசா குறித்து டைம்ஸ் இதழ் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

முன்னர் அசைக்க முடியாத அளவிற்கு அதிகாரத்தில் பீடத்தில் அமர்ந்திருந்த இந்திய கூட்டணி ஆட்சிக்கு தற்போது 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் சவாலாக அமைந்துள்ளது.

இந்தியாவில் எப்போதும் நடைபெறும் குதிரைப் பேரத்தின் மூலம் மத்திய அமைச்சர் பதவியைப் பெற்றவர் ராசா. 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலால் இந்திய அரசுக்கு 32 ஆயிரத்து 200 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றிலேயே இது மிகப்பெரிய ஊழல். இந்த ஊழலால் ராசாவைச் சேர்ந்த கட்சி கடந்த மே மாதம் நடந்த தேர்தலில் பெரும் தோல்வியைத் தழுவியது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத் தேர்தலில் காங்கிரஸின் தோல்வி குறித்து கூட்டம் நடத்தும் சோனியா காந்தி

டெல்லி,மே 21

தமிழக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் படு தோல்வி அடைந்தது ஏன் என்பது குறித்து தமிழக காங்கிரஸ் தலைவர்களை அழைத்து ஆலோசனை நடத்தி வருகிறார் சோனியா காந்தி.

தமிழகத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு காங்கிரஸுக்கு ஒரு வேலையும் இல்லாமல் போய்விட்டது. மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டது காங்கிரஸ். வெறும் ஐந்து பேரை மட்டுமே தமிழக மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் கொடுத்துள்ள இந்த அடி, அவர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா என்பது தெரியவில்லை. காரணம், காங்கிரஸைப் பொறுத்தவரை எந்த வெற்றிவந்தாலும் அது ஓசிதான். எனவே இந்த தோல்வியால் காங்கிரஸார் யாரும் மனம் உடைந்து போனதாக தகவல் இல்லை.

இருப்பினும் காங்கிரஸ் கட்சியின் அடித்தளத்தை அடித்து தரைமட்டமாக்கி விட்ட இந்த தோல்வியால் காங்கிரஸ் மேலிடம் சற்றே அதிர்ச்சி அடைந்துள்ளது. காரணம், இந்த அடித்தளத்தை வைத்துத்தானே கூட்டணிக்குப் பேரம் பேச முடியும் என்பதால்.

மேலும் 2014ல் லோக்சபா தேர்தல் வேறு வருகிறது. எனவே அதற்குள் கட்சியை மீண்டும் பலப்படுத்தி ஸ்திரப்படுத்த வேண்டும் என்ற வேகத்தில் காங்கிரஸ் மேலிடம் உள்ளது.

இதனால் தேர்தல் தோல்வி குறித்து தற்போது தமிழக காங்கிரஸ் தலைவர்களுடன் சோனியா காந்தி ஆலோசனையில் இறங்கியுள்ளார்.



முதலில் மத்திய அமைச்சர் ஜீகேவாசனை அழைத்து சோனியா பேசியுள்ளார் இவர் தான் தமிழக காங்கிரஸிலேயே மிகப் பெரிய கோஷ்டி யின் தலைவராவார். இதை யடுத்து எம்.பி. கார்வேந்தனை அழைத்து சோனியா பேசியுள்ளார். அடுத்து இளங்கோவன் உள்ளிட்ட அத்தனை கோஷ்டித் தலைவர்களையும் சோனியா அழைத்துப் பேசலாம் என்று தெரிகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டம் முடிந்த பின்னர் தங்கபாலுவை தூக்கி விட்டு வேறு ஒரு தலைவரை காங்கிரஸ் மேலிடம் நியமிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் உத்தரவை மீறிய அப்பாவிப் பொதுமக்களை அவர்கள் ஈவு இரக்கம் ஏதுமின்றிச் சுட்டுக்கொன்றனர்

## அரசு உண்மைகளை மூடி மறைக்க ஊடகவியலாளர்களுக்கு கதவடைப்பு

விதவைகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், இளம் தாய்மார்கள், தடுத்துவைக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் மனைவிமார் மற்றும் தாய்மார்கள் ஆகியவர்களை உள்ளிட்ட இலகுவில் தாக்கமுறக் கூடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், பாலியல் மற்றும் பாலியல் வேற்றுமை காரணமாக வன்முறைக்கு ஆளானவர்கள், சந்தேகிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் முன்னாள் பெண் போராளிகள் ஆகியோரின் தேவைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக எந்தவொரு விசேட ஏற்பாடுகளும் இருக்கவில்லை.

**(ஓ) குடும்பங்களுக்கான விசேட பாதுகாப்பு**

229. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் குடும்ப அலகுக்கு விசேட முகத்துவத்தை வழங்குகிறது என்பதோடு அதனைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான கடப்பாடு அரசுக்கு உண்டு (ஐ.சி.சி.பி.ஆர், உறுப்புரைகள் 17 மற்றும் 23, ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர். உறுப் புரை 10) யுத்த வலயத்தில் இருந்து தப்பியபோது, பிரிக்கும் செயற்பாட்டின்போது மற்றும் ஆஸ்பத்திரிகள் மற்றும் முகாம்களுக்கு மாறும்போது, குடும்ப அலகைப்பேணுவதற்கு, பிரிந்த குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு அல்லது அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற தகவலை வழங்குவதற்குச் கிஞ்சித்தேனும் கவனம் செலுத்தாது அரச பராமரிப்பில் இருந்த குடும்ப உறுப்பினர்கள் பிரிக்கப்பட்டனர் என்பதால் இந்தக் கடமைகள் மீறப்பட்டமைக்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. போதியதொரு மாற்றுவழியை ஏற்படுத்தாமல் குடும்பங்களைக் கண்டுபிடிப்பதில் மிகத் திறமையுடன் கூடிய ஐ.சி. ஆர். சியினை அரசு காரணமின்றிப் புறம் தள்ளியது.

(79)

**(ஓ) குழந்தைகளுக்கான விசேட பாதுகாப்பு**

230. அவர்கள் இலகுவில் தாக்கமுறக் கூடியவர்கள் என்பதைக் கவனத்திற் கொண்டு, குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு விசேட நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்பதை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தேவைப் படுத்துகிறது. (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரை 4, ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர். உறுப்புரை 10 குழந்தைகளின் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை).

பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் இல்லாத நிலையில் தனியாக உள்ள குழந்தைகள் விடயத்தில் இந்தக் கடப்பாடு தீவிரத் தன்மையைக்கொள்கிறது. பிரிக்கும் இடங்களில் அல்லது ஆரம்பக் கட்டத்தில் மெனிக்பாமில் அத்தகைய விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாதது மீறல் என்பதைக் குறிக்கும் நம்பகரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மேலும் புனர்வாழ்வு என்ற சாட்டில் சரணடையும் சிறுவர்கள் வழக்கின்றி அரச தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள். அவர்கள் புனரமைப்பு நிலையங்களுக்கிடையே மாற்றப்பட்ட தோடு, அதனால் அவர்கள் இருக்கும் இடங்களைக் கண்டுபிடிப்பது மற்றும் குடும்பத்தினர் அவர்களைச் சந்திப்பது சிரமமாக விருந்தது.

(80)

**(ஔ) நீதிமன்றங்களுக்கான பிரவேசத்தை உள்ளிட்ட பயனுறு பரிகாரத்துக்கான உரிமை**

231. சர்வதேச சட்டத்தின்கீழ், வாதிடக் கூடிய மீறலைக் கொண்ட மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களுக்கான பயனுறு பாரிகாரத்தை வழங்க அரசு தேவைப்படுத்தப்படுகிறது. (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரை 2). உயிர் வாழ்வதற்கான உரிமை மற்றும் பௌதீகப் பாதுகாப்பு மீறல்தொடர்பான பாரதூரமான குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்து பொறுப்பானவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்வதை இந்தப் பரிகாரம் உள்ளடக்குகிறது. தடுத்துவைத்தலின் சட்டபூர்வமான தன்மையைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மற்றும் மீறல்கள் தொடர்பில் பரிகாரம் வழங்குவதற்காக நியாயமானதும் பாரபட்சமற்றதுமான நீதிமன்றங்களுக்கான பிரவேசம் பாதுகாப்புச் சட்டத்தின் அடித்தளமாக அமைகிறது (ஐ.சி.சி.பி.ஆர், உறுப்புரைகள் 2,9,14 மற்றும் 26). இந்தக்கடப்பாடு அத்தியாயத்தில் மேலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

232. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதான குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களில் ஒரு சில மாத்திரமே புலனாய்வு செய்யப்பட்டு அத்தோடு அப்படி மேற்கொள்ளப்பட்டவையும் சர்வதேச பயனுறு தன்மை மற்றும் சுயாதீனம் பற்றிய கட்டளைகளை நிறைவு செய்யாது என்பதால் இந்த ஏற்பாடுகளும் மீறப்பட்டுள்ளதாக நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வது மிகவும் கட்டுப்படுத்தப் பட்டு அல்லது சட்டத்தினால் நிறுத்தப் பட்டு மற்றும் பழக்கத்தினால் சுருக்கப் பட்டுள்ளது.

அவசரகால சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின்கீழ் தமது உத்தியோக அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அரச ஊழியர்கள் தொடர்பில் எவரும் நீதிமன்றம் செல்வதற்கு வாய்ப்பே இல்லை.

இந்த அதிகாரங்களின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் தடுத்து வைப்பதற்கான பிரத்தியேகமான நியாயப்படுத்தலை மீளாய்வு செய்வதற்கு நீதிமன்றங்களுக்கு மிகக்குறைந்த அதிகாரமே உள்ளது.

**5. யுத்த வலயத்துக்கு வெளியே மனித உரிமைகள் மீறல்கள்**

**(அ) காணாமற்போதல் மீதான தடை**

233. அரச தரப்பொன்றினுள் காணாமற் போதல்களைச் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தடை செய்கிறது. காணாமற் போதல் ஒருவரின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு எதிரான ஒரு மீறல் ஆக உள்ளது (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரை 9)

234. அரச முகவர்கள் அரச சார்பில் நடத்திய காணாமற் போதல்கள் யுத்தத்தின் கடைசிக் கட்டங்களுக்கு முன்பும், அப்போதும் மற்றும் அதற்குப் பின்னரும் இலங்கையில் பரவலாகக் காணப் பட்டதொரு நடவடிக்கை என்பதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

அநேக சந்தர்ப்பங்களில் இப்படித் தாக்கமடைந்தோர் சந்தேகிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் அல்லது மனித உரிமைகள் காப்பாளர்களாவர். சிலர் பிரித்தெடுக்கும் செயற்பாட்டின்போது காணாமற்போனார்கள். இத்தகையவர்கள் கடத்தப்பட்டு வெள்ளை வான்களில் எடுத்துச்செல்லப்பட்ட பின் அவர்களைக் காணவேயில்லை என்ற பொதுவானதொரு வழக்கத்தை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் விவரிக்கின்றன.

(81)

**(ஆ) கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம்**

235. தகவலை வெளியிடுவதற்கும் அதனைப் பெறுவதற்கும் மற்றும் கருத்தொன்றைக்கொண்டிருக்கவும் கருத்துக்களை வெளியிடுவதற்குமான சுதந்திரத்தை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் பாதுகாக்கிறது (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரை 19). சட்டத்துக்கிணங்க மற்றும் ஏனையோரின் உரிமை அல்லது நற்பெயரை அல்லது தேசியப் பாதுகாப்பை அல்லது பொது அமைதியை, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது நல்லொழுக்கத்தைப் பாதுகாக்க மாத்திரம் இந்த உரிமைகள் மட்டுப்படுத்தப் படலாம். சரிசம விகித அளவின் பரிசீலனையை எந்தமட்டுப்படுத்தலும் திருப்திப்படுத்தவேண்டும்.

236. சுயாதீன ஊடகவியலாளர்கள் யுத்த பிரதேசத்துக்குச் செல்வதை முழுமையாகத் தடை செய்வது ஏதும் பொதுமக்கள் பாதுகாப்பு நோக்கங்களை விஞ்சியதாக இருப்பதால் இந்த ஏற்பாட்டினை மீறியதற்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. 2008 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட ஊடக வழிகாட்டல்கள் யுத்தம் பற்றி அறிக்கை விடுப்பதைக் கடுமையாக மட்டுப்படுத்தியதோடு, ஊடக சுதந்திரத்தையும் பாதித்தது. அரச கருத்துக்கு மாறான கருத்துக்களை வெளியிட முனைந்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் பல விதமான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டதோடு சிலர் கொல்லப்பட்டோ, காணாமற் போய் அல்லது கடுமையாகத் தாக்கப்பட்டது தொடர்பான நம்பகமான குற்றச் சாட்டுக்கள் உள்ளன.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 20**

**(உ) தமிழீழ விடுதலைப் புலிகளின் குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள்**

**1. பொதுமக்களைத் தாக்குதலைத் தடுக்கும் பொறியாகப் பாவித்தல்**

237. ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3: ஆயிரக்கணக்கான பொதுமக்களை, அநேகமாகக் கொலை அச்சுறுத்தலை விடுத்து, யுத்தத்தின் கடைசிக் கட்டங்களின்போது தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தொடர்ந்து இருக்குமாறு கட்டாயப்படுத்தி அப்பிரதேசத்தில் இருந்து தப்பிச்செல்ல முனைந்தவர்களைச் சுட்டுக்கொலை செய்து இந்தக் கட்டுப்பாட்டை அமுல் செய்வதன்மூலம் பணயக்கைதிகளைப் பிடிப்பதைத் தடைசெய்யும் பொது உறுப்புரை 3 இனை மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை யுத்த வலயத்தில் இருந்து செல்ல அனுமதிக்காதது பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, அத்தகைய யுத்தக் குற்றம் பற்றிய சம்பிரதாய விளக்கம் தேவைப்படுத்துவதற்கேற்ப இராணுவ இலக்குகளைத் தாக்குவதை விட்டும் பாதுகாப்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் பொதுமக்களை அங்குசெலுத்தியதற்கானநம்பகமான சாட்சிகள் கிடைக்காததால், அந்த நடவடிக்கைகள் சட்டத்தின் பிரகாரம் பொதுமக்களை தாக்குவதைத் தடுப்பதற்கான பொறியாகப் பாவித்ததாகாது என குழு நம்புகிறது. (விதி 97, ஐசிஆர்சி ஆய்வு)

**2. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து தப்ப முயன்ற பொதுமக்களை கொலைசெய்தல்**

238. ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3: குறிப்பாக இரண்டாம் மற்றும் மூன்றாம் யுத்த சூனிய வலயங்களில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பக்கத்தில் யுத்தமுனைகளில் வலுக்கட்டாயமாகப் பொதுமக்கள் சனத் தொகையைப்பேணும் முயற்சியாக, யுத்த வலயத்தில் இருந்து தப்புவதற்கு முயன்ற பெண்கள் மற்றும் குழந்தைகளை உள்ளிட்ட பொதுமக்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுமென்றே சுட்டுக் கொலை செய்து பொது உறுப்புரை 3 (கொலை) யினை மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

(82)

**3. பொதுமக்களுக்கு அருகில் இருந்து இராணுவத் தளபாடங்களைப் பாவித்தல்**

239. சனநெருக்கடியுள்ள பகுதிகளுக்கு அருகில் இராணுவ இலக்குகளை அமைத்தல்: சாத்தியமாயின் சனநெருக்கடியுள்ள பொதுமக்கள் பிரதேசங்களில் இராணுவ இலக்குகளை அமைத்தலை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடை செய்கிறது. (விதி23-24 ஐ.சி.ஆர்.சி. ஆய்வு). மோட்டார் செலுத்திகள், ஏனைய கனமற்ற பீரங்கிகள், இராணுவ வாக னங்கள், மோட்டார் குழிகள், பதுங்கு குழிகள் மற்றும் அகழிகள் ஆகியவற்றை தமிழீழ விடுதலைப்புலிகள் வேண்டு மென்றே பொதுமக்கள் பிரதேசங்களுக்கு அருகில் அமைக்கும் அல்லது பிரயோ கிக்கும் போக்கினால் இந்த ஏற்பாட்டினை மீறுவதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஆஸ்பத்திரிகள் மற்றும் யுத்த சூனிய வலயத்தை உள்ளிட்ட இடம்பெயர்ந்தோர் கூடியிருக்கும் இடங்களை இந்த அமைவிடங்கள் உள்ளடக்கின. பிரித்தறிவது மற்றும் சரிசம விகிதம் தொடர்பான விதிகளை மதிப்பதை உறுதிப் படுத்துவதற்காக மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு இயைவாக இலங்கை இராணுவம் நடப் பதிலிருந்து அவர்கள் பொறுப்பை இச்சட்ட விரோத நடவடிக்கைகள் நீக்காது.

**4. வலுக்கட்டாயமாகக் குழந்தைகளை ஆள்சேர்த்தல்**

240. குழந்தைகளை வலுக்கட்டாயமாக ஆள்சேர்ப்பது மீதான தடை: குழந்தைகளை வலுக்கட்டாயமாக ஆள்சேர்ப்பதைச் சர்வதேச மனிதாபிமான சட்டம் தடை செய்கிறது. வயது எல்லை பற்றிய சர்ச்சை இருந்தபோதிலும், குறைந்தபட்சம் அது 15 என அரசுகள் இணங்கியுள்ளன (விதி 136, ஐ.சி. ஆர்.சி. ஆய்வு). குறிப்பாக யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் 14 வயதுச் சிறுவர்கள் மற்றும் சிறுமியரைக்கூட தமிழீழ விடுதலைப் புலிகள் வலுக்கட்டாயமாக அணிதிரட்டியதன்மூலம் இந்த ஏற்பாட்டை மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. இறுதி யுத்தங்களின்போது மரணிக்கக் கூடிய சாத்தியக்கூறு கள் அதிகமாக இருக்கும்போது, இப்படி யான வலுக்கட்டாய ஆள்சேர்ப்பு மற் றும் இள வயதினரை தம் குடும்பங்களில் இருந்து பிரிப்பதும் கொடூரமாக நடத்துவதான பொது உறுப்புரை 3 இனை மீறுவதாகும்.

**5. வலுக்கட்டாய உழைப்பு**

241. வலுக்கட்டாய உழைப்பு மீதான தடை : சரி ஈடுசெய்யப்படாத அல்லது துஷ்பிரயோகமான வலுக்கட்டாய உழைப்பை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடை செய்கிறது (விதி 95. ஐ.சி.ஆர்.சி. ஆய்வு). சில சமயம் ஆபத்தான சூழ்நிலைகளில் மற்றும் அநேகமாக தம் குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டு அரண்களை அமைப்பதற்காகவும் யுத்த முயற்சிக்கு வேறு பங்களிப்புக்களை வழங்குவதற்காகவும் பல பொதுமக்களை தமிழீழ விடுதலைப் புலி வலுக்கட்டாயமாக தேவைப் படுத்தி மீறல் பற்றி நம்பகமான குற்றச் சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண மேசைப்பந்தாட்டம்; யாழ்., மன்னார் அணிகள் தேசிய மட்டத்துக்கு

யாழ்ப்பாணம், மே 21

வடமாகாண பெரு விளையாட்டுப் போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணியும் வெற்றி பெற்று தேசிய போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வவுனியா நகர சபை உள்ளரங்க மைதானத்தில் இடம் பெற்ற பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது.

நடைபெற்ற மூன்று செற்களிலும் யாழ். மாவட்ட அணி நேரடியாக வென்று இலகுவாகச் சம்பியனானது. தேசிய மட்டப் போட்டிக்கும் தகுதி பெற்றுள்ளது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோதியது.

மூன்று செற்களில் மன்னார் மாவட்ட அணி வெல்ல ஒரேயொரு செற்றை மட்டுமே யாழ். மாவட்ட அணியால் கைப்பற்ற முடிந்தது. 3:1 என்ற அடிப்படையில் மன்னார் அணி வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (ஐ-23)



மடுக் கல்வி வலயத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் 13வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலை மாணவன் செல்வன் சசிக்குமார் விமல்ராஜ் வலய மட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வெற்றிக்கிண்ணத்துடன் அதிபர், உடற் கல்வி ஆசிரியர் ஆகியோருடன் காணப்படுகின்றார். (ஐ)

# கராத்தே சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 21

யாழ்.மாவட்ட கராத்தே சங்கம் நடத்தும் மாவட்டமட்ட காராத்தே சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை அடைக்கல மாதா ஆலய ஜெறோ மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் தவறாது நேர காலத்துடன் சமுகம் கொடுக்குமாறு யாழ்.மாவட்ட கராத்தே சங்க செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-23)



கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரியில் மைதானத்தில் இடம்பெற்ற 89 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை மாவட்ட மட்டத்தில் நடத்திய விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான பலூன் நடன போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர்கள் . (23)

# 13 வருட சம்பியன்களை வீழ்த்தி கபடியில் வென்றது தென்மராட்சி

தென்மராட்சி, மே 21

13 வருடங்கள் கபடிப் போட்டியில் வெற்றியாளர்களாகத் திகழ்ந்த தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை வீழ்த்தி புதிய வரலாறு படைத்துள்ளது தென்மராட்சியைச் சேர்ந்த புதுமுக அணி.

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட பெண்கள் கபடிப் போட்டி நடைபெற்று முடிந்துள்ளன. மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.

தென்மராட்சிப் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதின.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் இருந்துமுதல் தடவையாகப் போட்டியில் பங்கேற்றிருந்தது சாவகச்சேரி இந்து விளையாட்டுக்கழக அணி. சவால்களை முறியடித்து இறுதி ஆட்டத்துக்கு முன்னேறிய இந்த அணி தெல்லிப்பழை பிரதேச செயலக அணியைத் தோற்கடித்து வெற்றியைச் சுவீகரித்தது.

இறுதி ஆட்டத்தில் கலந்து கொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலக அணி கடந்த 13 வருடங்களாகக் கபடிப் போட்டியில் மாவட்டச் சம்பியனாகத் வெற்றி வாகை சூடிவந்தது. (ஐ-207)

# சர்வதேசக் கூட்டுறவு தினத்தையொட்டி மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே 21

89 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தையொட்டி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நடத்தும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

100 மீற்றர், 1500 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர், ஆண்,பெண் இருபாலாருக்குமான ஓட்ட நிகழ்வுகள் - ஆண், பெண் இருபாலாருக்குமான வேக நடை - ஆண்,பெண் இருபாலாருக்குமான 4x200 மீற்றர், 4x400 மீற்றர், 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வுகள், கரபந்தாட்டம், வலைபந்தாட்டம், துடுப்பாட்டம், பலூன் உடைத்தல், பாப்பாசி விதை எண்ணுதல், கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் இதில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றவர்கள் இந்தப் போட்டியில் பங்கு கொள்வர். (ம-23-311)

# கிறாஸ்கொப்பர்ஸுக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம்,மே 21

ஜொலிஸ்ரார் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்த புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 28 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயபிரியந்தன் 39 ஓட்டங்களையும் கஜதீபன் 20 ஓட்டங்களையும் பார்த்தீபன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

கோபி 5.2 ஓவர்கள் பந்து வீசி 3 இலக்குகளையும் லவகாந் - 3 ஓவர்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் கிரி 6 ஓவர்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஜொலி
ஸ்ரார்ஸ்
வெற்றிக்
கிண்ணம்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 26 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. கோபி 21 ஓட்டங்களையும் யசிதரன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பார்த்தீபன் 5 ஓவர்கள் பந்து வீசி 3 இலக்குகளையும் கஜதீபன் 5 ஓவர்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தொடரில் இன்றும் நாளையும் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

இன்று: காலை 8 மணி - ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் எதிர் யூனியன் விளையாட்டுக்கழகம்.

மதியம் ஒரு மணி - நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் கொக்குவில் கே.ஸி. ஸி.ஸி. விளையாட்டுக்கழகம்.

✱நாளை : காலை 8 மணி - கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை சென்றல் விளையாட்டுக் கழகம்.

மதியம் ஒரு மணி - யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் எதிர் காமாட்சி விளையாட்டுக்கழகம். (ஐ-23)

# அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் ,மே.21

யாழ். பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் 50 பந்துப் பரிமாற்றங் களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை மொரட்டுவ பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மைதானங்களில் இடம் பெறவுள்ளன.

மொரட்டுவ பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறும் முதலாவது அரை இறுதியாட்டத்தில் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணியை எதிர்த்து சப்ரகமுவ பல்கலைக் கழக அணி மோதுகின்றது.

கொழும்புப் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக அணியை எதிர்த்து மொறட்டுவ பல்கலைக்கழக அணி மோதுகின்றது.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கான இறுதி யாட்டம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ளது. (த-23)

# ஆண்களுக்கான கரபந்தாட்டம்:புத்தூர் இராமலிங்கம் மூன்றாமிடம்

யாழ்.மாவட்டக்கல்வி வலயங்களுக்கிடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் மூன்றாமிடத்தை பலத்த போராட்டத்தின் பின்னர் புத்தூர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மூன்றா மிடத்துக்கான போட்டியில் மல்லாகம் மகாவித்தியாலயமும் புத்தூர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயமும் மோதிக் கொண்டன. முதல் சுற்றில் மல்லாகம் மகாவித்தியாலயம் உற்சாகமாக விளையாடாத போதிலும் இறுதி இரண்டு சுற்றுக்களிலும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி போட்டியை இறுதிவரை உற்சாகமாக வைத்திருந்தது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் முதலாம், மூன்றாம் சுற்றுக்களை 25:12, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாம் சுற்றை மல்லாகம் மகாவித்தியாலயம் 25:22 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஆட்ட நிறைவில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் 2:1 என்ற சுற்றுக்கள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 869 திகதி: 19.05.2011

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| U | 36 | 42 | 48 | 66 | 31 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 10,000,000.00 | 01 |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | - |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 273 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 13261 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 186084 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 27762 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**16,549,020.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**10,000,000.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk


## பெறுபேறுகள் வெளியாகின

தென்மராட்சி, மே 21
வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் சிறு பணியாளர்களை முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III க்கு பதவியுயர்வு வழங்குவதற்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

(ஒ-207)

# மரண அறிவித்தல்

## அந்தோனி ஆசீர்வாதம்



நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 161/26, ஜெம்பட்டா வீதி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி ஆசீர்வாதம் 17.05.2011 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யக்கோ அந்தோனி- பொன்னுமுத்து தம்பதியின் அன்பு மகனும் அந்தோனிப்பிள்ளை- அற்புதம் தம்பதியரின் மருமகனும், திரேசம்மாவின் (லில்லி) அன்புக் கணவரும் அந்தோனி அலேசுவின் (செல்லத்துரை) சகோதரனும் எட்வேட் டெய்சி, ஞானசீலன் (பிரான்ஸ் ) மரியசீலன், சறோசா (இத்தாலி), அந்தோனியம்மா, பிலோமினம்மா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அக்கினேஸ் இம்மானுவேல் மேரி ஒடேற்றா, ரதனி, ஜேசுரட்ணம், அன் ரனி, ஆனந்தராஜா ஆகியோரின் மாமனாரும், ஜெகன், ரஜனி, ரெபேக்கா, பிரின்சி, லெஸ்லி, மெரின்சி, அனோஜா, பக்ஷன், யூஜின், நிதர்சன், வேஜின், நிதர்சினி, ஆகியோ ரின் செல்லத்தாத்தாவும், அபிஷா, ஜெபினியா, ஜெனிபர் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.20110) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு 13, மாதம்பிட்டி சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
எட்வேட், மரியசீலன்.
(மகன்மார்)

161/26, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு.

(சி/114) (49,22,24)

# கலைமதி விளையாட்டுக் கழகம்
## துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, எதிர்வரும் 27.05.2011 ஆம் திகதி காலை 6.30 மணியளவில் நடைபெறவிருக்கின்றது.

ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டியில் யாழ். மாவட்டத்திலுள்ள வீரர்கள் பங்குபற்ற முடியும்.

பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டியில் கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வீராங்கனைகள் பங்குபற்ற முடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீர, வீராங்கனைகள் தங்களின் பதிவுகளை 24.05.2011 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் கலைமதி விளையாட்டுக் கழக செயலாளருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

தொடர்புகளுக்கு:
க.ஜெயக்குமார்,
(செயலாளர்)
தொ.பே. இல.: 0771841202

செ.ரஞ்சித்குமார்
0778680722

செ.தவராசா
0776848373

(4467) (34)

### காணி விற்பனைக்குண்டு

யாழ்.தட்டாதெருச்சந்தி, ஐயனார் கோயில் வீதியில் (மெயின் றோட்) 2 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும். 0212229296, 0779742504

### காணி விற்பனைக்கு

உடுப்பிட்டி கோயில் பற்று கரணவாய், நவிண்டிற்குறிச்சியினை வடலக்குளி (சமனாவில் வயல்வெளி) நெல்வயல் பரப்பு அறுபது (60 பரப்பு) உடனடி விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு-
0773459224 தொடர்பு கொள்ளவும்.

### கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு

ஒரே தடவையில் 450 முட்டைகளை அடை வைத்து குஞ்சு பொரிக்கக் கூடிய சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் விற்பனைக்கு உண்டு. ஒரு வருட உத்தரவாதத்துடன் விலை- 119900/-

தொடர்புகளுக்கு-0778995431

# மரண அறிவித்தல்

## திருமதி நாகராஜா சரஸ்வதி



கோப்பாய் மத்தி, வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா Scarboroughவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகராஜா சரஸ்வதி 19.05.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் தவப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வித்தகர் கைலாசப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் ஆசை மருமகளும் நாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணேசு, சங்கரப்பிள்ளை, மார்க்கண்டு மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயரத்தினம், ஜெயராஜரத்தினம், மனோரத்தினம், மதிரத்தினம், காலஞ்சென்ற புஸ்பரதி மற்றும் ஜீவரத்தினம், பாலரத்தினம் , கனகரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தகுமாரி(சரோ), தயாநிதி, பாலகௌரி, லீலா, தயாளினி, கலைமகள், காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அனித்தா, அனுசன், நிதர்சன், வினோசன், சானுஜா, பிருந்தா, தனுசன், சகீனா, ரம்மியா, சபியா, கனீசா, கனீசன், தனுயா, சரணி,நிவீசா ஆகியோரின் அப்பம்மாவும், காலஞ்சென்ற இராசமணி (திருமலை) மற்றும் வேலாயுதபிள்ளை, இராசரத்தினம், ஈஸ்வரி, காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் இராசம்மா(கனடா), இராசலட்சுமி, அன்னலட்சுமி, தங்கம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-

| | | | |
|---|---|---|---|
| நாகராஜா (கணவர்) | (416)-287 8483 | மனோ- | (905) 409 4078 |
| பிள்ளைகள்- | | மதி - | (416) 543 6434 |
| விஜயன்- | (416)- 427 6062 | ஜீவன்- | (416) 708 8483 |
| வவா- | (416) -839 0315 | பாலன்- | (647) 278 1068 |
| | | கனகன்- | (416) 807 3366 |

தகவல்:
க.நந்தகுமார்,(தெல்லிப்பழை பிரதேச செயலகம்)

## FOR SALE

HOT DEAL - INTER NET CAFE & CYBER GAMING
360/7, MAIN STREET-
CATHOLIC PRESS COMPLEX
JAFFNA-0778350478

This is a modern foreign style inter net cafe at good location with all the computer system and equipment - giving up because the foreign Management are very busy at other projects.

## NEW MEDI CARE HOSPITAL

தற்போது எமது வைத்திய சாலையில் புதிதாக

**X -Ray**

வசதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றோம்.

இல. 32, கச்சாய் றோட்,
சாவகச்சேரி.
T.P-0213734505, 0214920949

## தேவை

யாழ். பிரதான வீதியில் (சிறைச்சாலைக்கு முன்பாக) உள்ள பிலிப் நேசிங் ஹோம் இக்கு

1. பயிற்றப்பட்ட தாதியர்
2. தாதிய உதவியாளராக பழக விரும்புபவர்கள்(ஆண், பெண்)
3. Security Guard (35-60) வயதுக்கு உட்பட்டோர்.
4. கணக்காளர்- Accountant Assistan தேவையாக உள்ளது.

நேர்முகத் தேர்வு- ஞாயிறு 22.05.2011 காலை 9 மணிக்கு, இடம்- பிலிப் நேசிங் ஹோம், 228,பிரதான வீதி, (சிறைச்சாலை முன்பாக) யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் ஜெகதீஸ்வரன் ஜெயகரன்(ஜெகன்)



அன்பாலும் பாசத்தலும் அனைவரையும்
அரவணைத்த என் அருமைச்
செல்வமே!
உன்னைக் காணத் துடிக்கிறது எமது
மனம்
இறைவனின் கட்டளையை மறுக்க
உன்னால் முடியவில்லையே
31 நாளிகை கடந்து சென்றாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு
அகலாது நிலைத்து இருக்கும்.

மலர்வு 16.09.1978
உதிர்வு 21.04.2011

அன்புச் செல்வத்தின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

(4479)

த.மு : 70/8, சென் பெனடிக்
மாவத்தை, கொட்டாஞ்சேனை,
கொழும்பு-13. T.P-0770731157


உங்கள் ஆத்மா சாந்தி
அடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

# வேலாயுதம் மகா வித்தியாலயம்
### பழைய மாணவர் சங்கம்
பொதுக்கூட்டம்

தலைவர்:- K.P. ஆனந்தநடேசன் அவர்கள்
இடம்:- பாடசாலை மண்டபம்
காலம்:- 29.05.2011 ஞாயிற்றுக்கிழமை, முற்பகல் 10 மணி

அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம், புதிதாக இணைய விரும்புபவர்களும், பழைய உறுப்பினர்களும் உங்கள் சந்தாப்பணங்களை கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் செலுத்தி உங்கள் உறுப்புரிமைகளை உறுதிப்படுத்தியும், புதுப்பித்தும் கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கி.குகநாதன்: செயலாளர்,
பழைய மாணவர் சங்க தாய்ச் சங்கம், யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணம் பறித்த கும்பல் தாக்கியதில் ஒருவர் காயம்

வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த நபரை வழி மறித்த கும்பல் ஒன்று அவரிடமிருந்த பெரும் தொகையான பணத்தைப் பறித்துக்கொண்டு அவரைத் தாக்கியதில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு எட்டு மணியளவில் தாவடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மானிப்பாய் நாலாம் கட்டை, ஆனைக் கோட்டைப் பகுதியைச் சேர்ந்த கு.அன்ரன்குமார் (வயது-41) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (ஐ-323)

## மாணவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சிகள் கண்டி, ரன்தம்பே இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படவுள்ளது. இந்த முகாமில் மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவென யாழ். மாவட்டத்தில் இருந்து 26 ஆசிரியர்கள் செல்கின்றனர். மேலும் 6 பேர் வடக்கின் ஏனைய மாவட்டங்களில் இருந்து செல்கின்றனர்.

பயிற்சிகளை வழங்குவது தொடர்பான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இவர்களுக்கு கடந்த ஆண்டே வழங்கப்பட்டிருந்தன.

சுமார் 1,750 தமிழ் மாணவர்களுக்கு இந்த வருடம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அவர்களில் 1,300 பேருக்கு ரன்தம்பே இராணுவ முகாமில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. ஏனைய சுமார் 450 பேருக்கு பொலிஸ் நிலையங்களில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே பல தரப்புகளில் இருந்தும் இந்தப் பயிற்சிக்குக் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் கூட்டமைப்பும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

''மாணவர்களுக்கு தலைமைத்துப் பயிற்சி அளிப்பதை நாங்கள் வரவேற் கின்றோம். ஆனால் அப்பயிற்சிகள் கல்வி அமைச்சின் மூலமோ, பொது நிர்வாக உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் மூலமோ வழங்கப்படவேண்டும்- அதுவே உண்மையான தலைமைத்துவப் பயிற்சியாகும். ஏன் இராணுவ முகாம்களில் வைத்து அதனை வழங்குகிறீர்கள்.

பொறுப்புள்ள அமைச்சர்கள் என்ற வகையில் எமது மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் பயிற்சி வழங்கும் திட்டத்தை இரத்துசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்''- என்றார் மாவை சேனாதிராஜா. (உ-02)

## கனிமொழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளார்.

தமிழக ஆட்சி மாற்றம் காரணமாக கோட்டையை இழந்த தி.மு.கவுக்கு கனிமொழி கைது பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் அளித்திருக்கிறது.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு முறைகேட்டு வழக்கில் கனிமொழியின் பிணை மனு மீதான தீர்ப்பை டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் நேற்று வழங்குவதாக அறிவித்திருந்தது. அதன்படி நேற்றுக்காலை கனிமொழி, சரத்குமார் ஆகியோர் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

அதன்பிறகு நீதிபதி ஓ.பி.ஷைனி நேற்று மதியம் தீர்ப்பு வழங்குவார் என்று கூறப்பட்டது. இதில், கனிமொழிக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

முன்னதாக, 2ஜி முறைகேட்டில் மத்திய தொலைத்தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசாவுக்கு இணையான பங்கு கனிமொழிக்கும் உள்ளது என்று குற்றம் சாட்டிய சி.பி.ஐ., கனிமொழி, கலைஞர் ரி.வி. நிர்வாகி சரத்குமார் ஆகியோரது பெயர்களை இரண்டாவது குற்றப்பத்திரிகையில் சேர்த்தது.

இந்த வழக்கில் தங்களை நீதிமன்றக் காவலில் வைக்கக்கூடாது என கனிமொழியும் சரத்குமாரும் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். இதுகுறித்து மே 6 ஆம் திகதி நடந்த விசாரணையில் கனிமொழி சார்பில் மூத்த சட்டத்தரணி ராம் ஜேத்மலானி ஆஜரானார்.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் கனிமொழிக்கு எந்தத் தொடர்பும் இல்லை என அவர் வாதாடினார். அதன் பிறகு இந்த வழக்கின் விசாரணை மே 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் கனிமொழி சென்னை வருமான வரி அலுவலகத்தில் கடந்த 12, 13 ஆகிய திகதிகளில் நேரில் ஆஜரான பிறகு, மே 13 ஆம் திகதி இரவு விமானம் மூலம் டில்லி வந்தார்.

கனிமொழி மனு மீதான விசாரணையில், அவருக்குப் பிணை வழங்கலாமா என்பது குறித்து மே 14 ஆம் திகதி தீர்ப்பு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவரது மனு மீதான தீர்ப்பை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி.ஷைனி 20 ஆம் திகதி வழங்குவதாக அறிவித்தார். அதன்படி தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. (ஒ-சி)

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்சேகாவும் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பியபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனுன திலகரட்ன சம்பந்தமான வழக்கு தொடர்பாக தனது மூத்த மகள் குடிவரவு அதிகாரிக்ளின் கறுப்புப் பட்டியலில் உள்ளதாக அனோமா பென்சேகா தெரிவித்தார்



### பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

21.05.2011 அன்று அகவை அறுபதில்
ஒய்வுபெறும் ஆசான்

**வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

அவர்களை



சுற்றுணர்ந்த கணித ஆசானாய்-உற்ற
கல்வியலாளர் பல்லோரை பார்போற்ற உருவாக்கி
நல்லதோர் ஆசானாய் நாம் புகழும் ஓவியனாய்
எல்லோரும் போற்றும் எளிமை வாழ்வினனாய்
எம் பள்ளியிலும் இனிதே சேவையாற்றி
இற்றை நாளில் இனிதே ஒய்வு பெறுமவரை
சற்றே மனதிலிருத்தி சலன மற்ற வாழ்வு பெற
உற்றபடி யாமெல்லோரும் உளமார வாழ்த்துகிறோம்.
22.05.2011 அன்று பிறந்த தின வாழ்த்துக்களையும் உரித்தாக்குகின்றோம்.

மல்லாகம் மகா வித்தியாலயம். ஆசிரியர் நலன்புரி கழகம். (சி/123)

### காரைநகர் பிரதேச சபை
### கேள்வி திறக்கப்படும் திகதி மாற்றம்

07.05.2011 (சனிக்கிழமை) ஆம் திகதிய உதயன் பத்திரிகை கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் கேள்விகள் திறக்கப்படும் திகதி 24.05.2011 (செவ்வாய்க்கிழமை) பி.ப. 12.30 என பிரசுரமாகியிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் 27.05.2011 (வெள்ளிக்கிழமை) ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை கேள்விதாரர்களுக்கு அறியத்தருகின்றேன்.

(கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் எதுவித மாற்றமும் இல்லை.)

பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை, காரைநகர்.

### அப்பாவின் 66ஆவது பிறந்தநாளும் இரண்டாவது நினைவஞ்சலியும்

**தம்பிஜயா பாலகுமாரநாதன்**



விண்ணகத்திலிருக்கும் எனது அப்பாவின்
66 ஆவது பிறந்தநாள் இன்று (21.05.2011),
இரண்டாவது மறைவு தினம் 03.06.2011

திதி-12.06.2011
(ஏகாதசி வளர்பிறை)

அன்பு என்றால் அது எம் தந்தைதான்
பாசத்தில் அவர் கங்கை நதி
அழியாத உருவம் கொண்ட எம் தந்தையே
தங்களின் உடலின் கம்பீரம் எங்கே அப்பா!

கண்விழித்த போதெல்லாம் அன்புடன் வலம்
வந்து ஒவ்வொருத்தராய் தாங்கள் தந்த
ஆசை முத்தங்கள் எங்கே அப்பா !!
ஆண்டுகள் இரண்டு கணமதில் சென்றதே

ஆனாலும் இக்காலத்தினுள்
தங்கள் நீண்ட நாள் ஆசையாக எனக்கு
தேசவங்கியாம் இலங்கை வங்கியில்
உத்தியோகம் கிடைத்து சந்தோசம் அடைகின்றேன்.

எங்களை வாழ வைக்கின்ற எம் அன்புத்
தெய்வமே !!! எங்கள் நன்றியையும்
அன்பு முத்தங்களையும் தங்கள் பாதமதில்
காணிக்கையாக்குகின்றோம்.

அப்பாவின் பாசமுள்ள இளைய இனிய மகள்
கஜனி பாலகுமாரநாதன்,
ஆனைக்கோட்டை.

(சி/113) (34)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், உள்ளூர், நட்சத்திரம் மகம், மூன்றாம் பாதம், 7இல் செவ்வாய், கிரகபாவம் 83, 1977 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்புகளுக்கு - 0750718245

### வீடு வாடகைக்கு

மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலுக்கு அருகில் கே.கே.எஸ். வீதி யில் சகல வசதியுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு - 0776544426

### காணி விற்பனைக்குண்டு

இணுவில் கிழக்கு, அங்களப்பாயில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 0778995431

### தேவை

லான்சர் யப்பான் மோட்டார் சைக்கிள் (மொடல் 90, அல்லது 50) உடன் தேவை. (வைத் தியரின் பாவனைக்கு)
தொடர்பு - 0777361215

### Languages Institute

1. Training centre for persons facing embassy interviews.
2. Basic spoken English with Grammar.
3. Special class for Teachers and Government employees.
4. Special class in Sinhala.
5. Special class in Tamil.
6. Classes will be conducted by well qualified persons.

Classes will be conducted in air conditioned rooms.

Recommendation letter will be given by the lecturer incharge.

T.P.:-021 790 3634, 0779361427
No.120, Temple Road, Jaffna.

### விற்பனைக்கு / குத்தகைக்கு

**Solid / Strong huge House**
**வீடு விற்பனைக்கு / குத்தகைக்கு**
**in 3rd Cross Street, Jaffna.**
**5/10 mts walk to Hospital and town. Ideal for banks, insurance or office Leasing.**
மேலதிக விபரமறிய:
**Contact - 0772 758454**
Mail - jaffnatownhousalelease@gmail.com

Foresight

### 31ஆம் நாள் நினைவுகளும் நன்றியறிதலும்

**இராசையா இராசசேகரம் (பரராஜசிங்கம்)**



அன்பின் உறைவிடமாய்
அரவணைப்பில் நல் அன்னையுமாய்
அனைவருக்கும் இன் நண்பனுமாய்
அலங்கரித்து நின்ற எந்தையே!
இவ்வுலக வாழ்வெல்லாம் போதுமென
இமைப் பொழுதில் ஏகினையோ இறைவனடி
எந்தையே! ஏற்கவில்லை எம் இதயம்
உங்களின் இழப்பதனை
உள்ளத்தால் உயர்ந்த உத்தமரே
என்றென்றும் அமைதி கொள்வீர் முருகனிடம்.

அன்னையிடம்
24.01.1946

முருகனிடம்
21.04.2011

எமது குடும்பத் தலைவரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், பலவழிகளிலும் உதவி புரிந்து ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இராமப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்கள்

**வைரவிப்பிள்ளை சின்னத்தம்பி**
*(ஓய்வுபெற்ற அதிபர்)*



கரணவாய் தெற்கு, அண்ணாசிலையடியைப் பிறப்பிடமாகவும் எம்.எஸ். வீதி, கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை சின்னத்தம்பி கடந்த புதன்கிழமை 18.05.2011 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெள்ளையர்-கனகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் தனேஸ்வரதேவி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்துராசாவின் சிறிய தந்தையும் குணம், சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமனும் பிரியங்கா, அபிசரன், ஆதிரை ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எம்.எஸ். வீதி, தகவல்:
கோண்டாவில் கிழக்கு. (4489) குடும்பத்தினர்.

**முருகேசு இராசையா** *(ஆசாரி)*



அம்மன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் காளி கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாவும் கொண்ட முருகேசு இராசையா நேற்று (20.05.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீத்தாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி. (4480)

தகவல்: செல்வராசா குடும்பம், சசிகுமார் படமாடம், பிரதான வீதி, அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933, 021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இணைய முகவரி: www.uthayan.com

# முன்னாள் போராளிகளில் மேலும் 900 பேர் ஜூன் முதல் வாரம் விடுதலை

கொழும்பு, மே 21

புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் 900 முன்னாள் போராளிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் அல்லது 5ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இந்த வருடத்துக்குள் புனர்வாழ்வு பெறும் முன்னாள் போராளிகள் அனைவரையும் விடுவிக்க எண்ணியுள்ளதாக அவர் மேலும் கூறினார். இதனை நோக்காகக் கொண்டு முன்னாள் போராளிகளை சமூகமயப்படுத்தும் திட்டத்தை விரைவுபடுத்தியுள்ளோம்.

இறுதி யுத்தத்தின்போது சுமார் 11ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சரணடைந்தார்கள். இவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க நடவடிக்கை மேற்கொண்டோம். இதன்படி புனர்வாழ்வு முகாம்களை அமைத்தோம். அந்த முகாம்களில் இவர்களுக்குப் புனர்வாழ்வுப் பயிற்சியும், ஏனைய தொழில்சார் பயிற்சிகளும் அளித்து பின்னர் படிப்படியாக இவர்களைப் பெற்றோரிடமும், உறவினர்களிடமும் சேர்த்து வருகிறோம். இந்நிலையில் இன்னும் 4 ஆயிரம் முன்னாள் போராளிகளே விடுவிக்கப்படவுள்ளனர். அவர்களை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஒ-சி)

## யாழ்.நகரில் இசை விழா

யாழ்ப்பாணம், மே 21

வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் - சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாகவுள்ள மைதானத்தில் இசைநிகழ்வு நாளை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இந்த பெரு விழாவில் வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 250 கலைஞர்கள் ஒரே மேடையில் பங்கேற்பர்.

யாழ்ப்பாண இசை வரலாற்றில் சிறப்பான ஓர் அம்சம் என வர்ணித்துள்ள மேற்படி திணைக்கள பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி கலைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் இலவசமாகப் பார்த்து ரசிக்கலாம் என்று அறிவித்துள்ளார்.(ஒ)




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# நாரந்தனையில் பெண் மரணமான சம்பவம்; கணவர், இரு மகள்மார் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மே 21

நாரந்தனையில் கடந்த திங்கட்கிழமை குடும்பப் பெண் ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையல் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவரது கணவனும் இரு மகள்மாரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மூவரும் ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவா முன் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சாந்தி ஹெக்டர் (வயது 48) என்பவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தில் ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவா, யாழ்.சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன், விசேட பொலிஸ் குழுவினர் ஆகியோர் சகிதம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

பிரஸ்தாப பெண் தற்கொலை செய்வதற்காக சீலையை கழுத்தில் சுருக்கிட்டுள்ளார் என்றும்-

தமது தந்தை எறிந்த கத்தியால் அவருக்குக் காலில் காயம் ஏற்பட்டு இரத்தப் பெருக்கு ஏற்பட்டது என்றும் - முரணாக மகள் சாட்சியம் அளித்ததாலேயே மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமானவரின் மகள் அளித்த தகவல்களில் சந்தேகம் கொண்ட நீதிவான் கணவனையும், விவாகமான மகளையும், மற்றைய மகளையும் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பொலிஸார் அவர்களைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தபோது மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-ஐ)

# சேமலாப நிதிக்கு வேட்டு வைக்கவே அரசு திட்டம்

## ஐ.தே.கட்சி எச்சரிக்கிறது

கொழும்பு, மே 21

ஊழியர்களின் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றுக்கு உத்தேச தனியார்துறை ஊழியர் ஓய்வூதியத் திட்டம் வேட்டு வைப்பதாக அமைந்துள்ளது. இவற்றை மோசடி செய்ய ஐ.தே.க. ஒருபோதும் இடம் அளிக்காது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்றுக் காலை நடைபெற்ற தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின்படியே அரசு உத்தேச தனியார்துறை ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வர முயற்சிக்கின்றது.

இந்த ஓய்வூதியத் திட்டம் தனியார்துறை ஊழியர்களின் உரிமையை மீறுவதாகும்.

தனியார்துறை ஊழியர்களின் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாபநிதி ஆகியவற்றில் தங்கியிருக்காமல் உண்மையிலேயே ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் ஓய்வூதியத் திட்டத்தை அரசு முன்வைத்தால் அதற்கு ஐ.தே.கட்சி ஆதரவு அளிக்கும்.

நாட்டில் உள்ள சகல தொழிற் சங்கங்களும் இந்தத் திட்டத்தை எதிர்க்கின்றன. இப்படியிருக்கும்போது உத்தேச தனியார் துறை ஓய்வூதியத் திட்டத்தை பலாத்காரமாக தொழிலாளர் மீது திணிக்க முயல்வது ஏன்?

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ரணில். (ஒ-சி)

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை பு யாழ்ப்பாணம்
வைகாசி 20, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7,479.63↓
மிலங்கா(MPI) 6,879.99↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 3,159.56Mn
பங்குகளின் அளவு(No.) 174.60Mn
வியாபாரம்(No.) 26,492
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.

| | |
|---|---|
| சி ரி ஹோல்டிங்(r) | 1.00 |
| செரண்டிப் ஹொட்டல்(r) | 2.50 |
| செரண்டிப் ஹொட்டல்(r) | 10.40 |
| பின்லேஸ் கொழும்பு | 210.00 |
| ரீவ் கொம்பர்(w) | 34.70 |

குறைவு(Top 5 losers) - விலை Rs.

| | |
|---|---|
| புளு டயமன்ட்ஸ் | 4.00 |
| புளு டயமன்ட்ஸ்(x) | 1.90 |
| கொழும்பு லான்ட் | 23.20 |
| கென்பி(f)பி(f) ஹொட்டல் | 221.00 |
| சிலோன் பிரேவரி | 550.00 |

மேலதிக தகவல்கள்- www.cse.lk

# மீளக்குடியமர்ந்த 473 குடும்பங்களுக்கு குடாநாட்டில் இலவச மின் விநியோகம்

யாழ்ப்பாணம்,மே.21

யாழ். மாவட்டத்துக்கு மீளக்குடியமர்ந்த 473 குடும்பங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட பிரதேச மின் பொறியிலாளர் ச.ஞானகணேசன் இவ்வாறு 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 1400 பேர் இலவச மின் இணைப்புக்காக விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 473 குடும்பங்களுக்கு இதுவரை இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களுக்கே இந்தச் சலுகை வழங்கப்படுகிறது.

இலவசமின்னிணைப்பு பெறும் குடும்பங்களுக்கு 6 மாத காலத்துக்கான மின் பாவனைக் கட்டணமும் இலவசமாக்கப்பட்டுள்ளது.

சொந்த வீடுகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த மின்னிணைப்புத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும். யாழ் மாவட்டத்திலுள்ள மின்பாவனை நிலையங்களில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் - என்றார். (ஒ-14)

# சர்வகட்சி மாநாட்டுத் தீர்மானம் அரச தரப்புக் குழுவிடம் கையளிப்பு

கொழும்பு, மே 21

நாடு ஒன்றுபடுத்தப்பட்டுள்ள நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அரசுக்கும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே இடம்பெறும் பேச்சுகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் சர்வகட்சிப் பிரதிநிதிகளின் மாநாட்டில் எட்டப்பட்ட தீர்வுகளை முன்வைத்துள்ளேன்.

- இவ்வாறு சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொல்வின் ஆர்.டி.சில்வாவின் 22ஆவது சிரார்த்ததினம் தொடர்பாக நேற்றுக்காலை சிரேஷ்ட அமைச்சர்களின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சர்வகட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டில் எட்டப்பட்ட முடிவுகள் தொடர்பான அறிக்கையை அரசு தரப்பில் பேச்சுகளில் ஈடுபட்டுவரும் குழுவினரிடம் கையளித்துள்ளேன். அவர்களை நேரில் சந்தித்தும் விளக்கம் அளித்துள்ளேன்.

அத்துடன், சர்வகட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கும் வகையிலான அதிகாரப் பகிர்வும் நிராகரிக்கப்பட்டது. மாகாணங்களுக்குத் தனித்தனியான பொலிஸ் ஆணைக் குழுக்கள் சாத்தியமற்றது என்ற காரணத்தினாலேயே சர்வகட்சி மாநாடு அதை ஏற்றுக் கொள்ளவில்லை - என்றார் திஸ்ஸ விதாரண. (ஒ-சி)

# நிகழ்வுகள்

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே.21

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் தர்மாசிரியர் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

விண்ணப்பித்த அறநெறிப் பாடசாலைகளுக்கு கருத்தரங்குக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும், கருத்தரங்குக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் தம்முடன் தொடர்பு கொள்வதன் மூலம் கருத்தரங்கில் கலந்துகொள்ள முடியும் எனவும் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (ற)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, மே 21

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் [illegible] பிரதிக் கல்வி பணிப்பாளர் [illegible] பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி நந்தினி உதயகுமார் பரிசில்களை வழங்குவார். (ற-236)

## காரைநகரில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 21

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தில் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இலவசமாக நடைபெற்று வரும் கலைப் பயிற்சி நெறிகளோடு வீணை, தியானம், யோகாசனம் ஆகிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிப்பது தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வேயில் கைதான நெடியவன் பயங்கரவாதப் பிரிவில் விசாரணை?

நோர்வேயில் வசித்துவரும் நெடியவன் கைதுசெய்யப்பட்டதாகவும், அவர் தடுப்புக்காவலில் உள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும் அவர் கைது செய்யப்படவில்லை என்றும், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது என்று இணையத் தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

நோர்வே நாட்டில், சிறுவர் பயிலும் பள்ளியில் வேலை செய்துவரும் நெடியவனை புலிகளின் வெளிநாட்டுப் பிரிவின் தலைவர் என்றும், அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் என்றும் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் கடந்த காலங்களில் திட்டமிடப்பட்டு வெளியிடப்பட்டு வந்தன.

இந்த நிலையில் ஹொலன்ட் அரசு நோர்வே நாட்டில் நெடியவனுக்கு எதிராக ஒரு வழக்கை நடத்திவருகிறது.

அந்த நாட்டு நீதிமன்றம் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, ஹொலன்ட் நாட்டுப் பொலிஸார், நெடியவன் வீட்டிற்குச் சென்று அவரை விசாரித்துள்ளனர். வாக்கு மூலம் பெறுவதற்காக அவர் ஒஸ்லோ நகருக்கு கொண்டுசெல்லப்பட்டு, பின்னர் உடனடியாக வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பயங்கரவாதத் தடைசட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் சில ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

வெளிநாடுகளில் செயல்படும் தமிழ் உணர்வாளர்களையும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர் மற்றும் ஆதரவாளர்களை இலங்கை அரசு தற்போது குறிவைத்து அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இதன் ஒரு கட்டமாகவே, இந்த நகர்வு ஹொலன்ட் நாட்டினூடாக ஆரம்பமாகியுள்ளது.

புலிகளுக்குப் பணம் சேர்த்தார் எனப் பிரித்தானியாவில், சாந்தன் என்பவர் கைதாகிய நிலையில் அவரது குற்றங்கள் நிரூபிக்கப்படாததால் நிலையில் பிரித் தானிய அரசு பின்னர் விடுதலை செய்தது. நேற்று இணையத் தளங்களில் நெடியவன் கைது தொடர்பாகப் பல்வேறுபட்ட கோணங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

(அதிர்வு)

## விசேட இலக்த்துடனான வாகனப் பதிவுக்கு கட்டணம் அதகரிப்பு

விசேட இலக்கத்துடன் வாகனங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணத்தை தற்போதைய 7,500 ரூபாவிலிருந்து 70,000 - 75,000 ரூபா வரை மோட்டார் வாகனப் பதிவாளர் அதிகரிக்கக் கூடுமென தகவலறிந்த வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இது 1000 சதவீத அதிகரிப்பு ஆகும். விசேட இலக்கங்களுக்காக விண்ணப்பிப்பவர்கள், வி.ஐ.பி. வர்த்தகர்க்ள், வைத்தியர்கள், பொறியியலாளர்களென பல்வேறு துறைகளில் பிரசித்தி பெற்ற வாண்மையாளர்களாக உள்ளனர்.

இலங்கையில் எரிபொருள்களில் இயங்கும் 'ஹைபிறிட்' வகையைச் சேர்ந்த வாகனங்கள் மீதும் பெற்றோல் வாகனங்கள் மீதும் தீர்வை வரிகள் கணிசமாக அதிகரிக்கப்பட்டு ஒரு மாதத்தின் பின் இந்த பதிவுக் கட்டண அதிகரிப்பு அமுலாகவுள்ளது. (ஐ-10) (தமிழ்மிரர்)

# கட்டுநாயக்காவில் கைதான இருவரும் அமெ. இராணுவத்தைச் சேர்ந்தவர்கள்

துப்பாக்கியுடன் இலங்கைக்குள் நுழைய முயன்றபோது -கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட இரு அமெரிக்கர்களும் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10.40 மணியளவில் கட்டுநாயக்க அனைத்துலக விமான நிலையத்தை வந்தடைந்த கட்டார் எயார்வேய்ஸ் விமானத்தில் வந்தபோதே இரண்டு அமெரிக்கப் படையினரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அமெரிக்காவில் இருந்தே விமானத்தில் புறப்பட்டுள்ளனர்.

இவர்களின் பொதிகளை ஸ்கானரில் சோதனையிட்டபோது அதற்குள் துப்பாக்கி ஒன்று பாகம் பாகமாக கழற்றி மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களின் பொதிக்குள் கைத்துப்பாக்கி ஒன்றே மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தகவல் வெளியிட்டிருந்தனர்.

ஆனால், எம்16 ரகத் துப்பாக்கியே கண்டுபிடிக்கப்பட்டதாக தற்போது கிடைக்கும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது அமெரிக்க இராணுவத்தினரால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் துப்பாக்கி என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றும் இவர்கள் இருவரும் விடுமுறையைக் கழிக்கவே இலங்கை வந்தாகக் கூறியுள்ளனர்.

விடுமுறையைக் கழிக்க வந்தவர்கள் எதற்காக துப்பாக்கியுடன் வந்தனர் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

விமானத்தில் துப்பாக்கியை கொண்டு செல்வது சட்டப்படி குற்றம் என்பதைத் தெரிந்தே அவர்கள் அதை பாகமாக கழற்றி மறைத்து வந்துள்ளனர்.

மிகவும் இறுக்கமான பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிக்கப்படும் அமெரிக்க விமான நிலையங்களின் கண்காணிப்பில் இருந்து தப்பி இவர்களால் எவ்வாறு துப்பாக்கியை மறைத்து கொண்டு வந்திருக்க முடியும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதன் காரணமாக பொலிஸ் உயர் அதிகாரிகள் குழுவொன்று இரு அமெரிக்கப் படையினரிடமும் கடுமையான விசாரணைகளை நடத்தி வருகின்றது.



# இணையச் செய்திகள்

## லஞ்சம் பெற முயன்ற பொலிஸ் அதிகாரி கைது!

ஐயாயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற முயன்ற பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவு பொறுப்பதிகாரியொருவர் விசேட பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனிய பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி ஓட்டிச்செலப்பட்ட மோட்டார் சைக்கிளொன்றின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடராமல் இருப்பதற்காக ஐயாயிரம் ரூபா இலஞ்சமாகத் தருமாறு பிரஸ்தாப பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

அது குறித்து மோட்டார் சைக்கிள் உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, விசேட பொலிஸ் குழுவொன்று அங்கு வந்து அதிரடியாக அவரைக் கைது செய்துள்ளது.

பொதுமக்களின் பிரச்சினைகளின் போது அவசர அழைப்பின் பேரில் செயற்பட உருவாக்கப்பட்ட பிரிவொன்றின் பொறுப்பதிகாரியொருவர் லஞ்சம் வாங்க முயன்றமை பொலிஸ் வட்டாரங்களில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

தற்போது கொழும்பு கறுவாத் தோட்ட பொலிஸில் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ள பிரஸ்தாப பொலிஸ் அதிகாரி, நாளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

(ஐ-10) (தமிழ்வின்)



தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை வங்கியின் இணைந்த தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டமொன்று கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதன்போது குறித்த தனியார்த்துறை ஊழியர்களுக்கான சட்ட மூலத்துக்கு எதிரான கையெழுத்துக்களும் பெறப்பட்டன. (தமிழ்மிரர்)

## நீதிபதிகளுக்கு மலேசியாவில் பயிற்சி

இலங்கை நீதிபதிகளுக்கு மலேஷியாவில் சட்டத்துறையில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என அந்நாட்டு நீதி, சட்ட, அனர்த்த, முகாமைத்துவ அமைச்சர் டத்தோசெரீ முஹம்மத் நஸ்ரிபின் அப்துல் அஸீஸ், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் இருவருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று கோலாலம்பூரில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். மலேஷியா நீதி அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற இருதரப்பு உறவுகள் பற்றிய அக்கலந்துரையாடல் ஒரு மணித்தியாலம் நீடித்தது.

இதன்போது, மலேஷிய நீதித்துறையின் செயற்பாடுகளை அறிந்து கொள்ளும் வசதி, வாய்ப்புகள் இலங்கை நீதிபதிகளுக்கு மட்டுமல்லாது, இந் நாட்டு சட்டத்தரணிகளுக்கும் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

மலேஷியாவில் இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தின் பயன்பாடு நீதித்துறையோடு எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கின்றது என்பதை அந்நாட்டு நீதியமைச்சர் விளக்கிக் கூறினார். காதி நீதிபதிகள் பக்டி சட்ட விவகாரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் பிரதம நீதியரசர், நீதியமைச்சர், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய உயர் மட்டக் குழுவொன்றை மலேஷியாவிற்கு விஜயம் மேற்கொள்ளுமாறு விசேட அழைப் பொன்றையும் நீதியமைச்சர் ஹக்கீம் ஊடாக மலேஷிய நீதியமைச்சர் விடுத்தார். (ஐ-10) (தமிழ்மிரர்)

# ஈரான் - இலங்கை உறவில் விரிசல்

பிரபல எழுத்தாளர் சல்மான் ருஸ்டியின் நாவலை இலங்கையில் திரைப்படமாக்க அனுமதித்ததற்கு ஈரான் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் சிக்கல் ஒன்று உருவாகியுள்ளது.

'மிட்நைட் சில்ரன்' நள்ளிரவுக் குழந்தைகள் என்ற பெயரில் சல்மான் ருஸ்டியின் நாவலைத் தழுவிய திரைப்படத்தை தீபா மேத்தா என்ற கனேடிய இயக்குனர் தயாரித்து வருகிறார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு மிகவும் இரகசியமான முறையில் இலங்கையில் நடைபெற்றுள்ளது.

இதுபற்றிய இரகசியங்களை வெளியே கூறக் கூடாது என்று திரைப்படத் தொழில்நுட்பக் குழுவினரிடம் இருந்து வாக்குறுதியும் பெறப்பட்டிருந்தது.

படப்பிடிப்பு முடிவுக் கட்டத்தை அடைந்திருந்த போது இதுபற்றிய தகவல்களை அறிந்து கொண்ட ஈரானிய அதிகாரிகள் இலங்கையிடம் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

# சிதம்பரத்துக்கு தெரியுமாம் குற்றவாளிகளை

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை மீதான விசாரணையை மீண்டும் ஆரம்பித்து உண்மையான கொலையாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் த.பாண்டியன் கடந்த புதன் கிழமை வலியுறுத்தியுள்ளார்.

1991 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி கொலையை நேரில் கண்டவர்களில் ஒருவரான த.பாண்டியன், முள்ளிவாய்க்கால் அனர்த்தின் இரண்டாண்டு பூர்த்தியை முன்னிட்டு சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வைபவமொன்றில் இது தொடர்பாக கூறுகையில், உண்மையான குற்றவாளிகள் புதுடில்லியில் மறைந்து இருக்கிறார்கள் என்றும் இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இவை அனைத்தையும் அறிவார் என தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஏற்கனவே நளினி உட்பட 10 பேர் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆனால் கொலையாளி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் என்று சிலர் பலகாலமாகச் சொல்லிவருகின்றனர். இது குறித்து ப.சிதம்பரத்துக்கு தெரியும் என பல அரசியல் தலைவர்கள் நேரடியாக மேடைகளில் சொல்லியுள்ள போது சிதம்பரம் இது குறித்து வாய் திறப்பதே இல்லை.

(ஐ-10) (அதிர்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்பிறப்பாக்கி சுன்னாகம் நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகள் தனித்தனியே மின் சாரத்தை உற்பத்தி செய்துவருகின்றன. அதில் நொதேன் பவர் நிறுவனத்தின் பிறப்பாக்கி மூலம் 30 மெகாவோட்ஸ் மின்சாரமும் அக்றிக்கோ நிறுவன மின் பிறப்பாக்கி மூலம் 15 மெகாவோட்ஸ் மின்சாரமும் இலங்கை மின்சார சபையின் மின்பிறப்பாக்கி மூலம் 10 மெகா வோட்ஸ் மின்சாரமும் பெறப்படுகிறது. இவை மூலம் தனித் தனியாக மின்சாரத்தை பெறுவதன் காரணமாகவே மின் பிறப்பாக்கியை மாற்றம் செய்யவேண்டி ஏற்படும் போது மட்டும் மின் தடை ஏற்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் நாம் திட்டமிட்ட முறையில் மின் தடையை ஏற்படுத்தி மின்பிறப்பாக்கியை மாற்றி மின்சாரத்தை விநியோகிக் கின்றோம்.

இந்த நிலையில் மூன்று நிறுவனங்களதும் மின் பிறப்பாக்கிகளை ஒருங்கிணைத்து மின்சாரத்தைப் பெறுவதற்கு திட்டமிட்டுள்ளோம். அதற்காக உயர் மட்ட பொறியிலாளர் குழு ஒன்று விரைவில் யாழ். வரவுள்ளது.

அந்தக் குழு ஏற்கனவே இது குறித்து ஆராய்ந்து வருகிறது. இந்தக் குழுவின் வருகையின் பின்னர் குடாநாட்டில் 24 மணி நேர தொடர்ச்சியான மின்சாரம் கிடைக்கும் என்றார்.

இதேவேளை அடுத்த வருட இறுதிக்குள் கிளிநொச்சி மாவட்டம் வரையும் லக்ஸபான மின்சாரம் விநியோகிக்கப் படும். அதற்கான வேலைத்திட்டங்கள் முழுவீச்சில் இடம் பெற்று வருகின்றன.

வடபகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு மின்பொறியிலாளர் பிரிவும் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுப்கு பிறிதொரு மின்பொறியிலாளர் பிரிவாகவும் இரண்டாகப் பிரித்து மின்விநியோகத்தை மேற்கொள்ளவுள்ளோம் என்றார். (ஒ-14)

## கந்தரோடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியிருப்புக்கள் அங்கிருந்ததற்கான ஆதாரங்களே கிடைத்துள்ளன. பௌத்த அடையாளத்துக்கான எவையும் கிடைக்கவில்லை. அண்மையில் வெண்கலச் சூலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது'' என்று ஆய்வுடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''கந்தரோடையில் அகழ் வாராய்ச்சிப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்லியல் ஆய்வுப் பிரிவின் தலைவர் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் மாணவர்களும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து இந்த அகழ்வாராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்'' என்று லங்காதீப செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறைத் தலைவர் பேராசிரியர் புஸ்பரட்ணத்திடம் கேட்ட போது, ''ஆய்வின் இறுதியில் பல்கலைக்கழகமும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து முடிவுகளை வெளியிடுவது என்பதே ஒப்பந்தம். அப்படியிருக்கையில் இப்படி ஒரு செய்தி வெளிவந்திருப்பது ஆச்சரியமளிக்கிறது'' - என்றார். (உ-ம-22)

## எம்மை நாமே ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சற்று உணர்ச்சிவசப்பட்டுக் காணப்பட்டார். பொதுமக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச வைப வங்களிலும் அபிவிருத்திக் கூட்டங்களிலும் முக்கிய கலந்துரையாடல்களிலும் சுதந்திரமாகக் கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமையும் கௌரவமும் மறுக்கப்பட்டால் அங்கு உண்மையான ஜனநாயகம் மதிக் கப்படுவதாக கருதமுடியாது என்று சீறினார் மாவை.

''அன்று இங்கு வரும் அமைச்சர்களுக்கு எதிராக கறுப்புக் கொடி பிடித்து கடும் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் தான் நாங்கள். போர் ஓய்ந்துவிட்டதாகக் கூறலாம். ஆனால் தமிழ் மக்களின் போராட்டம் ஓயவில்லை. ஜனநாயக வழியில் தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்தை தொடர்கின்றோம். ஏனைய பிரதேச, ஏனைய இன மக்களைப் போன்று நாங்களும் கௌரவ மாக வாழவேண்டும். எங்களை நாங்களே ஆளும் நிலை உருவாகவேண்டும். அதுவே எங்கள் இலட்சியம்'' என்று சூளுரைத்தார் அவர். அமைச்சுப் பதவிகளுக்காவோ, சுய லாபத்துக்காகவோ அரசியல் போராட்டம் நடத்தவில்லை என்றும் அவர் குறிப் பிடத் தவறவில்லை.

நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில், மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (உ-2)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவானது கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கு தகுதிபெற்ற மாணவர்களின் சார்பில் தாக்கல் செய்யப்படுவதாக மனுதாரர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் இராணுவ முகாம்களில் மூன்று வாரங்கள் உள்இருப்பு பயிற்சிகள் பெறவேண்டும் என நிர்ப்பந்திப்பது அவர்களின் அடிப்படை உரிமைகளில் தலையிடுவதாகும் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அதன் இணையத் தளத்தில் வெளியிட்டுள்ள செய்திகளில் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகும் சகலமாணவர்களும் தலைமைத்துவ மற்றும் சாதகத் தன்மை அபிவிருத்தி திட்டப் பயிற்சிகளுக்கு உட்படுத்தவேண்டும். இந்தப் பயிற்சிகள் உயர் கல்வி மற்றும் பாதுகாப்பு அமைச்சுகளின் ஆதரவில் மேற் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விதமான முதல்கட்ட பயிற்சி நெறி நாளைமறுதினம் 23ஆம் திகதி ஆரம்பமாக விருப்பதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நம்பிக்கைகள் மற்றும் கலாசார விழுமியங்கள் எதற்கும் எதுவித கவனமுமம் செலுத்தப்படாமல் உயர்கல்வி அமைச்சு இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் மாணவர்களில் பலர் தமது கலாசாரம், சமயம் மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த பயிற்சிகளில் பங்குபற்றவிரும்பவில்லையென்றும் மனுதார்ர்கள் தெரிவித்துள்ளனர். (ப)

அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள் மற்றும் பல்கலை, உயர்கல்வி மாணவர்களுக்கான MyWay யின்
சனி ஞாயிறு 3 மாத English பயிற்சிநெறி
காலை 8.00, காலை 9.00 பிரிவுகளுக்கு அனுமதி இல்லை
ஏனைய பிரிவுகளுக்கு இன்றும் நாளையும் அனுமதி உண்டு
புதிய பிரிவுகள் : காலை 10-11, 11-12, மாலை 2-3, 3-4, 4-5, 5-6
மூன்று மாதத்துக்குமான மொத்த கட்டணம் : ரூபா 3000 மட்டும்
மிக சில இடங்களே - அனுமதிக்கு முந்துங்கள்
தனியார் அலுவலர்கள், இளைஞர் யுவதிகளுக்கும் அனுமதி உண்டு
MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

போலிகளை நம்பி ஏமாறவேண்டாம்
தேவைகளுக்கு ஏற்ற அளவுகளில் ஜெனறேட்டர்களை ஒருவருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
(850W -150KW வரை)




ஆர்கி என்ரப்பிறைசஸ்
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 30 . 01 . 1939 — மறைவு 22 . 04 . 2011



**அமரர் கதிரிப்பிள்ளை பழனிவேல்**

*(ஓய்வு பெற்ற A.M.C ஓவசியர்)*

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சலிகள், ஆறுதல்கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு-

நாளை(22.05.2011) ஞாயிற்றுக்கிழமை பத்தமேனியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன.விருந்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

வைரவர் கோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி (ஷ/126) குடும்பத்தினர்.

Sky Computer
புதிய கிளை திறப்பு
மாபெரும் மலிவு விற்பனை
Pentium 4 Computer முழுமையாக 15000/=விற்கு உண்டு (17'' Monitor, Multi Language Keyboard, Mouse, Head Phone, Mouse pad, Speaker) (Internet, Video Call மற்றும் சகல விதமான தேவைகளையும் பூர்த்தி செய்யலாம்)
ஒரு வருட உத்தரவாதம்
மற்றும் கணினி சம்பந்தமான சகல பொருள்களும் மலிவு விற்பனையில் உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விற்பனைக்கு பிந்திய சேவைகள் முழுமையாக உண்டு.
737, K.K.S Road, Jaffna. 162, Main Street, Jaffna.
0212224865 Hot Line-0750698608 0212221417

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**தம்பு சண்முகம் (சின்ராசு)**

*(விசேட சித்த வைத்தியர், விச மற்றும் விசர் நாய்க்கடி வைத்தியர்)*

கடந்த 22.04.2011 அன்று இறைபதமடைந்த எமது குலத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளும் நேற்று (20.05.2011) வெள்ளிக்கிழமை கீரிமலையிலே நடைபெற்றன.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டவருக்கு நன்றி கூறிக்கொள்வதோடு, நாளை (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

துரை வீதி, நாவடி வடக்கு. தேவராசா பத்மாவதி (மகள்)
021 497 947 (சி/124) (34) (விசேட சித்த வைத்தியர்)

கேட்டீங்களா? கேட்டீங்களா?
உங்க பிள்ளை பத்தின கவலை எல்லாம் காத்தில பறந்து போச்சுங்க!
ஏனுன்னு கேட்குறீங்களா?
சுட்டிப் பரணி
வெளிவந்துட்டுதுங்க!
இதுதுது தரம் ஒன்னு தொடக்கம் அஞ்சு வரையான பிள்ளைங்களுக்கு உரியதுங்க!
இவ் விளம்பரத்தை எழுத்து வழக்கில் எழுதி அனுப்பும் மாணவர்களுக்கு (3,4,5) ஊக்குவிப்பு பரிசுகள் கிடைக்கும்.
கற்சுமி வெளியீடு- 166, நாவலர் வீதி, யாழ்.

விற்பனைக்கு
49CC (Kinetic)சபாரி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
0770366123,0718474325

Deutsch, Dutch, French, Italian
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே யொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, [illegible]

### மரண அறிவித்தல்

*சிவஸ்ரீ அப்பாத்துரை இரத்தினசாமி குருக்கள்*

சங்கானை, அரசடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ அப்பாத்துரை இரத்தினசாமி குருக்கள் நேற்று(20.05.2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2011) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறும்

அரசடி வைரவர் கோயிலடி, தகவல்:
சங்கானை. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.